மலர் - 04 இதழ் - 3 - செப்டம்பர் 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

தமிழணங்கு விருது விழாவில் சிறப்பு விருந்தினர் டில்லி தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா. முகுந்தனுக்கு விழாத் தலைவர் பொறிஞர் சர்வீஸ் ட்டு சொசைட்டி நிறுவனர் இரவி சொக்கலிங்கம் சிறப்புச் செய்தல்

தமிழணங்கு இதழாசிரியர்
முனைவர் செ. ராஜேஸ்வரிக்கு டில்லித் தமிழ்ச்சங்கத்தின்
பொதுச் செயலாளர் பொன்னாடை போர்த்திச்
சிறப்புச் செய்தல்

இந்திர விழவு ஊர் எடுத்த காதை என்ன சொல்கிறது?
– முனைவர் சிவ இளங்கோ

நம்பிக்கை நல்கும் சங்ககால பொற்பனைக்கோட்டை–2
– டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்

KARAIKKAL AMMAIYAR
– Akshayan

நம் சாதனைகளும் சவால்களும்
– முனைவர் ச.அய்யம்பிள்ளை

தமிழ்நாடும் தாய்லாந்தும்
– ஓரிசா பாலு

பன்முகத் தமிழ்ப்பணியாற்றிய பெரியார் பீட்டர் பெர்சிவல் – பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே

ஐந்தில் அளவு முறையோடு வாழ்க!
– முனைவர் இல. ஜெயந்தி

இன்னும் பல...

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 3

செப்டம்பர் 2025

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1.	இந்திர விழவு ஊர் எடுத்த காதை என்ன சொல்கிறது? முனைவர் சிவ இளங்கோ,	3
2.	பன்முகத் தமிழ்ப்பணியாற்றிய பெரியார் பீட்டர் பெர்சிவல் பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,	7
3.	நம்பிக்கை நல்கும் சங்ககால பொற்பனைக்கோட்டை – 2 டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்	13
4.	ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் இயற்கை தில்லி ஜனக்புரி சீனிவாசன்	17
5.	KARAIKKAL AMMAIYAR Akshayan	25
6.	உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள் டாக்டர் புதேரி தானப்பன்	31
7.	தமிழரின் வணிகச் சிறப்பு டாக்டர் அண்ணாமலை சுகுமாறன்	33
8.	மலையாளிகள் இனி, தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும்...! சிகாபுத்தீன் பொய்த்தும்கடவு	39
9.	நம் சாதனைகளும் சவால்களும் முனைவர் ச.அய்யம்பிள்ளை	43
10.	தமிழ்நாடும் தாய்லாந்தும் ஒரிசா பாலு	46
11.	ஐந்தில் அளவு முறையோடு வாழ்க! முனைவர் இல. ஜெயந்தி,	49
12.	எளிய முறையில் யாப்பறிவோம். நெருப்பலையார். இராம இளங்கோவன்	56
13.	TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor – Dr. C. Rajeswari	59
14.	பழமொழிகளில் அறிவியல் செய்திகள் 1–30 இலக்குவனார் திருவள்ளுவன்	62
15.	வாழ்த்து மடல்! ஜனக்புரி சீனிவாசன்	64
16.	நெஞ்சம் நிறைந்த நன்றிகள் நெருப்பலையார். இராம இளங்கோவன்	66
17.	தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருதுகள்	69
18.	தமிழணங்கு இலக்கணத் தமிழறிஞர் விருதுகள்	81
19.	தமிழணங்கு இயல்தமிழ் விருதுகள்	86
20.	வாழ்க! வாழ்க! கவிஞர் முத்தரசன்	101
21.	தமிழணங்கு இதழ் விருது விழா காணொளிகள்	104
22.	மதுரைத் தமிழணங்கு விருது விழா	107

வீட்டுக்கோர் புத்தகச்சாலை நிச்சயமாக வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகச்சாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை - அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதல் இடம் புத்தகச் சாலைக்குத் தரப்பட வேண்டும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்கவேண்டும் - நமக்கு உண்மை உலகைக் காட்ட. நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர், திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கியச்சாரத்தைச்சாமானியரும் அறிந்து வாசிக்கக்கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் கலைபற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்கவேண்டும்.

- பேரறிஞர் அண்ணா

இந்திர விழவு ஊர் எடுத்த காதை என்ன சொல்கிறது?

முனைவர் சிவ இளங்கோ,
புதுச்சேரி

புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று காண்டங்களில் உள்ள முப்பது காதைகளில் ஐந்தாவது காதையாக இடம்பெறுவது இந்திர விழவூர் எடுத்த காதை. அதாவது இந்திர விழாவை ஊர் எடுத்த காதை.

இளமை தொடங்கி, வாலிபம் அடைந்து, வணிகச் செல்வனாகி வளம் பெற்று, பெருவணிகரின் குலமகள் மணந்து, பண்ணிசை ஆடலழகி மாதவியுடன் மகிழ்ந்திருந்து, அதில் திளைத்துச் செல்வமிழந்த காரணத்தால் மனைவியுடன் புகாரை விட்டு வெளியேறும் பத்துக் காதைகளும் புகார்க் காண்டம் ஆகும்.

மணஞ் செய்வித்து மங்கல வாழ்த்து உரைத்ததைக் கூறும் மங்கல வாழ்த்துப் பாடல். கயமலர்க் கண்ணியும், காதற் கொழுநனும் இல்லறம் நிகழ்த்திய செய்திகளைக் கூறும் மனையறம் படுத்த காதை. தாது அவிழ் புரிகுழல் மாதவிதன்னிடம் மையல் கொண்டு மனையாளைப் பிரிந்ததைக் கூறும் அரங்கேற்று காதை. கோவலனோடு மனமொத்துக் கூடியிருந்த மாதவியும், அவனால் கைவிடப்பட்டு வருந்திய கண்ணகியும், ஒரு மாலையில் இருந்த இருவேறு வித மயக்கநிலை கூறும் அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை. இவ்வேளையினுள் வருகின்ற இந்திர விழாவை, ஊர்மக்கள் கொண்டாடி மகிழ்ந்த மருவூர், பட்டினப்பாக்கத்து நிகழ்வுகளைக் கூறும் இந்திர விழவு ஊர் எடுத்த காதை.

அன்று இந்திர விழா. இருள் கவ்விக் கிடந்த மேகக் கூட்டங்கள் விலகுகின்றன. கதிரவன் தன் விரிந்த கதிர்களைப் பரப்பினான். மாடமாளிகைகளின் சாளரங்கள் வழியே ஒளி பரவுகிறது. அது யவனர்கள் முதலான பற்பல நாட்டினரின் கடற்கரைக் குடியிருப்புகளைத் தட்டி எழுப்புகிறது. வண்ணக் குழம்பும், சுண்ணப் பொடிகளும் விற்பவர்கள் வீதிகளில் வருகின்றனர். பட்டும், பவளமும், சந்தனமும், அகிலும், பொன்னும், மணியும் விற்கின்ற வணிகத் தெருக்கள் நிறைகின்றன. பற்பல பண்டங்கள், எண்வகைக் கூலங்கள், குவிந்து கிடக்கின்ற கூலக்கடைத் தெருக்கள், பிட்டு, அப்பம், கள், மீன், உப்பு, வெற்றிலை, எண்ணெய், பலவகை ஊன் விற்போர், வாங்குவோரின் கூட்டங்கள், வெண்கலக் கன்னார், மரவேலைத் தச்சர், கொல்லர், பொற்பணித்தட்டார், தையல் வேலை செம்மார், கைத்தொழில் பழகும் பல்வேறு மக்கள், குழல், யாழ், குரல் என்று பல்லிசை முழங்கும் பாணர்கள் இவர்களெல்லாம்

வாழும் குடியிருப்புகள் எல்லாம் விரைந்தெழுந்து தத்தம் பணியில் ஈடுபடுகின்றனர். இது ஒருவூர்ப் பாக்கத்தின் காட்சி. அதுதான் புகார் நகரின் மருவூர்ப்பாக்கம்.

மறுபக்கம் திரும்பினால் பட்டினப்பாக்கம். பட்டினம் அல்லவா? பெருங்குடி வணிகர், உழவோர், காலக்கணியர், மாகதர் என்று, “அகன்பெரு வீதியும், மடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய பாடல்சால் சிறப்பின் பட்டினப்பாக்கம்”. இவ்விரு நிலம் முழுவதும் எம் பெருநில மன்னன் காக்கவும், பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும், வளனும் சுரக்க என நாளங்காடிப் பூத வழிபாடு நடத்தினர் மறக்குடிப் பெண்டிர். அப்பூதங்களுக்கு நரபலியை ஊட்டினர் புகார் நகரத்து வீர மறவர்கள். இமயத்தில் புலிக்கொடி பொறித்த மன்னன் நாடு திரும்புகையில் பிற மன்னர்களிடம் பெற்ற திறைகளைத் தன்னோடு கொணர்ந்து வைத்திருந்த சித்திர மண்டபத்திற்கும் பலியிடல் செய்தனர்.

துறைமுகக் களவைத் தடுக்கும் வெள்ளிடை மன்றம், உடற்குறையினைத் தீர்க்கும் இலஞ்சி மன்றம், வஞ்சனை, நஞ்சு போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர் நலம்காக்கும் நெடுங்கல் நின்ற மன்றம், தீயொழுக்கம் கொண்டோரைத் தண்டிக்கும் பூத சதுக்க மன்றம், அறம் தவறியோரைச் சுட்டும் பாவை மன்றம் ஆகிய ஐவகை மன்றங்களிலும் மக்கள் வழிபட்டு நின்றனர். இந்திர விழாவின் தொடக்கம், முடிவு பற்றிய செய்திகள் வெள்ளை யானையுடைய அரசனின் கோட்டத்தில் (இந்திர கோட்டத்தில்) அறிவிக்கப்பட்டது. மங்கல நெடுங்கொடி பறக்க விடப்பட்டது.

பாவை விளக்கு, பசும்பொன் படாகை, தூமயிர்க் கவரி, அழகிய சுண்ணங்கள் யாவும் வீதியெங்கும் நிறைந்து இந்திரன் வரவுக்குக் காத்திருந்தன. ஐம்பெருங்குழுவும், எண் பேராயமும், அரச குமரர், வணிக குமரர் உள்ளிட்ட அரசின் அனைத்து உறுப்புகளும் விண்ணவர் தலைவனுக்கு விழுநீர் ஆட்டினர். வேறு வேறு கடவுளருக்கும் திருவிழாக்கள் நடைபெற்றன. ஒருபுறம் அறவோர் (சமணப்) பள்ளிகள் சிறப்புற்று விளங்கின. அரசு விழாவினை ஒட்டி அரசியல் கைதிகளோடுப் பிற மன்னர்களின் விடுதலையும் நிகழ்ந்தது. இசைவாணர்களின் இசை முழக்கங்கள் எங்கெங்கும் நிறைந்திருந்தன. மலர் மணமும், காதற் கன்னியர் கொஞ்சலும், பண்ணிசைப் பாணரின் இசையும் கேட்டுப் பரத்தரோடு திரிகின்ற கோவலனைப்போல, மலயமாருதம்(தென்றல்), புகார்நகரின்வீதிகளில்வீசிக்கொண்டிருந்தது.

பாம்பு வந்து விழுங்கி விடுமோ என்றஞ்சித் திங்களும் இறங்கி வந்து, புகார்த் தெருக்களில் திரிகின்றதோ? மீன்கொடியோன் காமன் வளர்த்த மின்னலிடை மங்கையர் இறங்கி வருவதுண்டோ? பிற வண்ணப் பூக்களையும் தன்னோடு சேர்த்துப் பூக்க வைக்கத் தாமரையும் கள்ளமாய்த் திரிவதுண்டோ? மன்னவன் செங்கோலுக்கஞ்சி ஆண் உருவம் மாற்றிப் பெண்ணாகத் திரிந்து திவவுயாழ் போலப் பேசித் திரிவதுண்டோ? என்று புகார் நகரின் வீதிகளில் திரிந்த நங்கையரைக் கண்டு ஆடவர் மனம் மருகினர். பரத்தையர் தோளில் பதித்த

கோலம் இவர் தோளிலும் ஒட்டிக் கொள்ள, இல்லில், விருந்து வந்த நிலையில், இப்படி ஒரு கோலத்தோடு வந்தவனின் கடைக்கண் சிவந்திருக்கும் நிலை கண்டு, அதற்கு மருந்து தேடிய மகளிரும் மருகி நின்றனர்.

விண்ணவர் கோமகன் ஆன இந்திரன் விழா நாளில், தங்களை எண்ணிக் கண்ணகியின் கருங்கண்ணும், மாதவியின் செங்கண்ணும் அவரவர் உள்ளத்தில் நினைவுகளாலே முறையே இடது, வலமாய்த் துடித்து ஒய்ந்தன. இதுதான் இந்திர விழா ஊர் எடுத்த காதை சொல்லும் செய்தி.

எப்படிச் சொல்கிறது?

இக்காதையில் இளங்கோவடிகள், இந்திர விழா அன்று புகார் நகரில் மருவூர்ப் பாக்கமும், பட்டினப் பாக்கமும் விழாக்கோலம் பூண்டிருந்த நிலையினையும், இரு பெரும் பாக்கத்து மக்களும் மகிழ்ந்து கொண்டாடிய மனவெழுச்சியினையும், ஆடவரும், பெண்டிரும் தம்மை மறந்து புதுக்கோலம் பூண்டிருந்த நிலையினையும், கண்ணகியும், மாதவியும் இரு வேறு நிலைகளில் உணர்ச்சிப் பிழம்பாக நினைந்துக் கண் சிவந்ததையும், இளங்கோவடிகள் நேரலைக் காட்சி போலும் நிறுவியுள்ளார்.

சொல்லாட்சி

இளங்கோவடிகளின் சொல்லாட்சி பல இடங்களில் நயமாக மின்னுகிறது. இந்திர விழாவன்று கதிரவன் வருகையைக் கூறுமிடத்தில், இளங்காலையில் கலைந்த மேகங்களை 'மாரிக்கூந்தல்' என்கிறார். இந்த உவமேயம் தற்காலம் வரை இலக்கிய நயமாக பரிமாறப்பட்டு வருகிறது. திரைப்படப் பாடல் ஒன்றில் கூட "என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்களாக" என்று வரும் வரிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். மருவூர்ப் பாக்கத்து மாளிகைகளில் 'மான்கண் காலதர்' உள்ளதைக் குறிப்பிடுகிறார். காலதர் என்ற சொல் வழக்கம் தற்காலத்தில் இல்லையெனினும் 'பலகணி' என்ற சொல் வழக்கம் தற்கால எழுத்து வடிவில் உள்ளது. கலைநயம் மிக்க அந்நாளையக் காலதர் மானின் கண்போல் இருந்தது என்பதை அழகியல் நோக்கோடு கூறுகிறார். பட்டு, பருத்தித் துணிகளில் அழகிய வேலைப்பாடுகளை செய்யும் தொழில் வல்லுநரை 'நுண்வினைக் காருகர்' (தற்கால எம்பிராய்டரி) என்கிறார். அதேபோல் அணிமணி தொழில் புரிவோரைத் 'திருமணி குயிற்றுநர்' என்றும், 'அணிவளை போழுநர்' என்றும் கூறுகிறார். 'பயிர்த்தொழில் குயிலுவர்' என்ற சொல்லாட்சியும் கவனிக்கத்தக்கது.

வழிபாடுகளில் வைக்கப்படும் தின்பண்ட ங்களில் எள்ளுருண்டை, நிணச்சோறு ஆகியவற்றை 'நோலை' என்றும், 'விழுக்கு உடை மடை' என்றும் குறிப்பிடுகிறார். அவந்தி வேந்தன் கொடுத்த தோரண வாயில் "பொன்னினும், மணியினும் புனைந்தன ஆயினும், நுண்வினைக் கம்மியர் காணா மரபின" என்கிறார். வேற்று நாட்டினின்றும் வந்த புதியவர்களை 'வம்பமாக்கள்' என்று கூறி, அவர்களின் துறைமுகப் பொதிகளைப் பாதுகாக்கும் பகுதியை 'வெள்ளிடை மன்றம்' என்று குறிப்பிட்டு, மக்கள் உடல் நலம் காக்கும் 'இலஞ்சி மன்றம்', 'நெடுங்கல் நின்ற மன்றம்', 'பூத சதுக்கம்', 'பாவை மன்றம்' ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார். இந்திரனை வரவேற்கக் காத்திருந்த வெண்சாமரத்தை தூமயிர்க் கவரி என்கிறார். இல்லத்தில் வளரும் இருவாட்சி, 'மயிலை' என்று கூறப்படுகிறது. இது, இருவாட்சி (மயிலை) அதிகம் உள்ள பகுதி மயிலாப்பூர் என்று பெயர் பெற்றிருக்க

கூடுமோ என்ற சிந்தனையைத் தூண்டுகிறது. அதேபோல் ‘அறவோர் பள்ளி’ என்று குறிப்பிடும் இடத்திலும், அது சமணப்பள்ளி என்று கொள்ளலாம்.

இளங்கோவின் இலக்கிய நயங்கள்

இளங்கோவடிகளின் இலக்கிய நயங்களையும் குறிப்பிட வேண்டும். மருவூர்ப் பாக்கத்துத் துறைமுகப் பகுதியில், நாடு விட்டு நாடு செல்லும் கடலோடிகள் பற்பல நாட்டினருமாகத் தம்முள் கலந்திருந்து வாழ்கின்ற கடற்கரையோரக் குடியிருப்புகளைக் குறிப்பிடும் (யவனர் இருக்கைகள்) இளங்கோவடிகள், “கலம் தரு திருவின் புலம்பெயர் மாக்கள் கலந்து இருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்” என்று தமிழ் வணிகச்சாத்து வரலாற்று நிகழ்வுகளை இலக்கிய நயத்தோடு விளக்குகிறார். இனிமையான இளவேனில் காலத்துத் தென்றல் தவழும்போது வண்டின் ஓசையை, இசைபோலும் தன்னுடனே குழைத்து வருவதை ‘இளிவாய் வண்டினொடு’ என்று இலக்கிய நயத்துடன், ஓசை நயத்தையும் இணைத்துக் கூறுகிறார். புகார் நகரத் தெருக்களில் காமப்பெண்டிர் நடந்து செல்வதைக் “காமன் வளர்த்த வான-வல்லி வருதலும் உண்டு கொல்” என்று நயம்படக் கூறுகிறார். வேறு வண்ணப் பூக்களும் தாமரை மலரில் பூத்தது போல முகம் காட்டும் பெண்டிரை, “கள்ளக் கமலம் திரிதலும் உண்டோ” என்று கனிந்த காம நயம்படக் கூறுகிறார்.

நாட்டில் இல்லற ஒழுக்கம் கெடுவதில் ஆண், பெண் இருபாலரின் பங்கும் உண்டு. ஆனால் அதைக் குறிப்பிடும்போது வேசி என்றும், பரத்தையர் என்றும், காமக்கிழத்தியர் என்றும் பெண்களை மட்டுமே குறிப்பிடும் சொற்களைத்தான் காணமுடிகிறது. ஆண்களைக் குறிப்பிடும் அவ்வாறான சொற்கள் இல்லையே என்று பலரும் பேசுவதை, எழுதுவதைக் கண்டிருப்போம். அந்த ஒழுக்கம் தவறும் ஆண்களுக்கான சொல்லாகப் ‘பரத்தர்’ என்று குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள். அதையும் இந்திர விழாவின் போது, மாதவியோடு இல்லறம் நடத்தும் கோவலனைக் குறிப்பிடும் இடத்தில், கோவலனை நேரடியாகக் குறிப்பிடாமல், அப்படிப் பரத்தராகத் திரிபவரோடு சேர்ந்து சென்றதைச் சொல்லும் இடத்தில், “நகரப் பரத்தரொடு, திரிதரு மரபின் கோவலன் போல” என்று இப்படிப்பட்ட ஒரு இலக்கிய நயத்தைப் பயன்படுத்துகிறார் இளங்கோவடிகள்.

இந்திர விழாவின்போது மக்கள் எல்லாம் கொண்டாடி மகிழ, தத்தம் செய்கைகளை நினைந்து ஆட்படுகின்றனர் கண்ணகியும், மாதவியும். தங்களின் நினைவுகளால் உந்தப் பட்டு, அதன் விளைவாக அவர்களின் கண்கள் கண்ணீர் உகுக்கின்றன. “கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும், உள்நிறை சுரந்து, அகத்து ஒளித்து, நீர் உகுத்தன” என்கிறார் இளங்கோவடிகள். பிரிவுத் துயரால் கண்ணகியின் கருங்கண் துடித்தது. ஆனந்த மிகுதியால் மாதவியின் செங்கண் துடித்தது. இடது, வலது கண்கள் எப்போது துடிக்கும் என்ற இயற்கை நியதியைக் காதல், இரங்கல் குறிப்பாகப் பாடி வைத்துள்ளார் இளங்கோவடிகள். இச்சுவை, பல இலக்கியங்களிலும், திரைப்படப் பாடல்களிலும் எடுத்தாளப்பட்டு இருப்பதெல்லாம் நாம் அறிந்தது தான்.

பன்முகத் தமிழ்ப்பணியாற்றிய பெரியார் பீட்டர் பெர்சிவல்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்

உலகப் பெருமொழியாம் நம் உயர்மொழி - உயிர்மொழித் தமிழுக்கு ஒப்பிலாத் தொண்டாற்றிய அயல்நாட்டு அருள் தொண்டர்களின் பங்களிப்புகளை விவரிக்கும் இக்கட்டுரைத் தொடரில், இப்போது நாம் பார்க்கப் போகும் அருளாளர் பல வகைகளிலும் தனித்துவமும் பன்முகப் பரிமாணமும் கொண்டவர். அவரை ஓர் அருட்பணியாளர் என்பதா, கல்வியாளர் என்பதா, ஆய்வறிஞர் என்பதா, இதழாளர் என்பதா, சமூகவியலாளர் என்பதா, பதிப்பாளர் என்பதா என மலைத்திடும் வண்ணம் பன்முகக் கொடைகளை வழங்கிய ஒரு பெருமகன் அவார். அதுமட்டுமின்றி, தாய்த் தமிழகத்துக்கும் அண்டை நாடாம் தமிழ் ஈழத்துக்கும் (இலங்கை) தம் பணிகளாலும் பயணங்களாலும் பாலமிட்ட பைந்தமிழ்த் தொண்டர் என்றும் பகரலாம். அவர்தான் பீட்டர் பெர்சிவல் என்னும் பெயர் தாங்கிய பெரியார். ஓர் ஆய்வாளர் குறித்தபடி, தமிழ்ப் புலத்தில் அழுத்தமான பதிவுகளைப் பதித்த அந்த முக்கியமான ஆளுமைப்பற்றி இக்கட்டுரையில் அறிந்திட முற்படுவோம்.

I. பிறப்பும் வாழ்வும்

இங்கிலாந்து நாட்டின் லங்காஷயர் பகுதியில் உள்ள ப்ரெஸ்ட் விச்சில், 1803ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் நாள் பிறந்தவர் இவர். எண்ணரிய தமிழ்க் கொடைகளை வழங்கிய இப்பெரியார் இவர் தமிழகம் வருவதற்கு முன்பே தம் நாட்டிலேயே தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கி விட்டார் என ஒரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. இங்கும் இலங்கையிலும் கூட தமிழ் நன்கு பயின்றார். இலங்கையின் சைவச் சான்றோராகிய ஆறுமுக நாவலரிடம் இவர் தமிழ் பயின்றதாக அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி உள்ளிட்டோர் கூட தவறாகக் குறிப்பிட்டாலும், உண்மையில் ஆறுமுக நாவலர்தான் பீட்டர் பெர்சிவலின் சிறந்த மாணவராக இருந்தார். (ஆறுமுக நாவலர் சாதிய உணர்வு காரணமாக, தாம் பயின்று வந்த பீட்டர் பெர்சிவல் ஐயர் நடத்தி வந்த வெஸ்லியன் மிஷன் பள்ளியிலிருந்து 50 மாணவர்களுடன் வெளியேறி, பிறகு போட்டியாக இந்து பாடசாலை ஆரம்பித்தார் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது.)

எப்படியாயினும் இங்கிலாந்திலிருந்து 1826இல் 23 வயது இளைஞராக யாழ்ப்பாணம் வந்தார். (இதையும் சென்னை வந்ததாகச் சில நூல்களில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.) பிறகு அவர் இந்தியா வந்து 1829இல் வங்காள நாட்டுக்கு (கல்கத்தாவுக்கு) வந்தார் என்று கூறப்படுகிறது. அங்கு சிலகாலம் பணியாற்றிய பிறகு,

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிச் சென்றார். 1833 முதல் 17 ஆண்டுகள் இலங்கையிலேயே இருந்து, பன்முகப் பட்ட திருப்பணிகள் ஆற்றினார். பின்னர் இங்கிலாந்து திரும்பிச் சென்று புனித அகஸ்டின் கல்லூரியில் சமயவியல் பேராசிரியராகத் தொண்டாற்றினார். பின்னர் மீண்டும் தென்னிந்தியா திரும்பி, சமயத்துறையிலும், கல்வித்துறையிலும், ஆய்வுக்களத்திலும் பல்வேறு பங்களிப்புகளை ஆற்றி இறுதிவரை இத்தமிழ் மண்ணிலேயே வாழ்ந்து மறைந்து தமிழகத்தின் ஏற்காட்டில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது பன்முகப் பணிகள் பற்றியும் பங்களிப்புகள் பற்றியும் தொடர்ந்து காண்போம்.

II. ஆற்றிய பணிகள் / படைத்த படைப்புகள்

பெர்சிவல் ஐயர் ஆற்றிய பணிகள் பல. படைத்த படைப்புகள் பல. அவற்றுள் முக்கியமானவை நிரல்பட இங்கே சிறுதலைப்புகளாகத் தரப்பட்டுள்ளன.

அ) பழமொழிகள் தொகுத்த பண்டிதர்

பெர்சிவல் ஐயருக்கு எப்போதுமே நம் தமிழ்நாட்டுப் பழமொழிகளைத் தொகுப்பதில் ஒரு நாட்டம் இருந்தது. அவர் செல்லுமிடங்களில் எல்லாம் ஆங்காங்கு வழங்கிய பழமொழிகளைத் திரட்டி, அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட முனைந்தார். நம் நாட்டுக்குத் தொண்டாற்றவரும் ஐரோப்பியர்கள், இந்த சமூகத்தின் ஆன்மாவைப் புரிந்துகொள்ள, பழமொழி முதலான வாய்மொழி மரபுகளே பெருந்துணை செய்யும் என அவர் நம்பி அவற்றை ஆவணங்களாகத் திரட்டி வெளியிட்டார். 1824இல் சுமார் 1900 பழமொழிகளைத் தொகுத்தார். பிறகு அவற்றை விரிவாக்கி, 1860இல் 5000 பழமொழிகளாக வேப்பேரி அச்சகத்தில் அச்சிட்டார். மீண்டும் அவற்றை 1874இல் விரிவாக்கினார். கடைசியாக, 15,000க்கு மேற்பட்ட பழமொழிகளை அவர் தொகுத்து வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. தெலுங்கு பழமொழிகளையும் அவர் தொகுத்தும், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வெளியிட்டுள்ளார். தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்த பிறரும் அவற்றை இவரிடம் ஒப்படைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஆ) முதல் (இருமொழி) தமிழ்ப்பத்திரிகை தொடங்கிய அயல்நாட்டவரான இதழாளர்

இவர் பல நண்பர்களின் தூண்டுதலால், பத்திரிகை ஒன்றும் தொடங்கி நடத்தினார். 1855இல் ‘தின வர்த்தமானி (1854)இல் என்கிறார் அ.மா.சாமி) என்ற இதழைத் தொடங்கி, அக்காலத்தில் அதை மிகப் பிரபலமானதாக நடத்தினார். அக்காலத்திலேயே 700 பிரதிகள் வரை விற்ற இவ்விதழ், தமிழ் - தெலுங்கு என இருமொழிகளில், செய்திகள், இலக்கிய - விஞ்ஞானக் கட்டுரைகளைத் தாங்கி வந்தது. இவ்விதழுக்குத் துணை ஆசிரியராகப் பணியாற்ற, இலங்கையிலிருந்து புகழ்மிக்க தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளையை அழைத்து வந்தார். இவ்விதழில் ‘இரட்சணிய யாத்திரிகம்’ தந்த மகாகவி H.A. கிருஷ்ண பிள்ளை மற்றும் விசுவநாத பிள்ளை போன்றோரும்

துணை ஆசிரியர்களாகப் பணியாற்றி உள்ளனர். வங்காளத்தில் பத்திரிகை முதலில் தொடங்கி நடத்திய கிறித்தவ அருட் பணியாளர் வில்லியம் கேரியைப் போல் இவரும் தமிழ் - தெலுங்கு இதழ் நடத்தியது குறிப்பிடத்தக்கது. தெலுங்கில் தனியாகவும் இதழ் நடத்தியதாகத் தெரிகிறது.



இ) மும்மொழி அகராதிகள் தொகுத்த மூதறிஞர்

பெர்சிவல் ஐயர், சென்னையில் கல்வித்துறையில் பணியாற்றிய பொழுது, பள்ளிகளுக்கான பாடத்திட்டம், நிலவரை படங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது பள்ளி மாணவர்களுக்காக, பொதுக்கல்வி இயக்குநர் ஆணைப்படி சுருங்கிய தமிழ் - ஆங்கில அகராதிகளை உருவாக்கினார். அவை அவர் காலத்திலேயே 7 பதிப்புகளைக் கண்டதாக, கா. மீனாட்சி சுந்தரம் குறிப்பிட்டுள்ளார். மேலும் 1861இல் ஆங்கிலோ தமிழ் அகராதி, 1867இல் ஆங்கிலோ தெலுங்கு அகராதி என இரு அகராதிகள் உருவாக்கினார்.

ஈ) பன்முகக் கல்விப் பணியாற்றிய பைந்தமிழ் ஆசான்

ஒரு மிகச் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்த பெர்சிவல் ஐயரின் கல்விப் பணிகள் பல திறத்தன. அவற்றைச் சுருக்கமாக இப்படி வரிசைப்படுத்தலாம்.

1. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது பல்வேறு பள்ளிகள், கல்லூரிகளை நிறுவினார். கல்கத்தாவில் அவர் சந்தித்த அலெக்சாண்டர் டப் என்னும் ஐரோப்பிய அருள்தொண்டரின் தாக்கத்தால் பல புதிய கல்விச் சிந்தனைகளைப் பெற்றார். பெண்கள் கல்வி பற்றிய முக்கியத்துவம் உணர்ந்து, இலங்கையில் பெண்களுக்கான பாடசாலைகளை ஏற்படுத்தினார். பருத்தித்துறை மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி, வேம்படி பெண்கள் – உயர்நிலைப் பள்ளி, ஹார்லி கல்லூரி, மத்திய கல்லூரி என்பவை இவற்றுள் முக்கியமானவை. இவற்றுள் மத்திய கல்லூரி, எண்ணற்றோர் பயன்பெற்ற பிரபலமான கல்லூரியாகத் திகழ்ந்தது.

2. பள்ளி மாணவர்களுக்குப் பாட நூல்கள் தயாரித்தளித்த ஆசானாகவும், வரைபடங்கள், அகராதிகள் அவர்களுக்காகவே உருவாக்கிய கல்விப்பதிப்பாளராகவும் திகழ்ந்தார்.

3. இங்கிலாந்து நாட்டிலே, மூன்றாண்டுகள் கேண்டர்பரி - புனித அகஸ்டின் கல்லூரியில் இந்திய மதங்கள் குறித்து போதித்த சமய விரிவுரையாளராகப் பணியாற்றினார். அங்கு அவர் நடத்திய பாடங்களின் தொகுப்பே 'வேதங்களின் நாடு' *(The Land of vedas)* என்ற நூலாக வெளிவந்தது.

4. மேலும் சென்னையில் மாநிலக் கல்லூரியில் தமிழ் - தெலுங்கு என இருமொழிகளைப் போதித்த கீழைத்தேய மொழிப்பேராசிரியராகத் திகழ்ந்தார்.

5. அது மட்டுமின்றி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகவும் சில காலம் பணியாற்றியதாகச் சொல்லப்படுகிறது.

உ) முத்தமிழ் நூல்களை மொழிபெயர்த்த வித்தகர்

பல்வேறு தமிழ் நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அருந்தமிழ் இலக்கியங்களின் மாண்புகளையும், அறக்கோட்பாடுகளையும் அயல்நாட்டவர் அறிய வைத்தார். அவர் மொழிபெயர்த்த முக்கிய நூல்களாவன.

1. ஔவையாரின் ஆத்திசூடி மொழிபெயர்ப்பு

2. ஜி.யூ. போப் பையர்போல் திருக்குறளையும் மொழிபெயர்த்துள்ளார்.

3. கபில தேவர் அகவல் என்ற நீதிநூலையும் மொழிபெயர்த்துள்ளார்.

4. நளவெண்பாவை உரைநடையில் ஆக்கியுள்ளதாகத் தெரிகிறது.

5. இவரது மிக முக்கியமான மொழிபெயர்ப்புப் பணி, கிறித்தவ மறை நூலான விவிலியத்தைத் தமிழில் பெயர்த்ததே. இவருக்கு முன்னரே விவிலியத்தை மொழிபெயர்த்த சீகன்பால்கு, பெப்ரீசியஸ், இரேனியுஸ் போன்றோரது மொழிபெயர்ப்புகளைப் பின்தொடர்ந்து அவற்றின் வளர்ச்சி நிலையாகவும் திருத்தமாகவும் இவர் வேதாகம சங்கத்தின் தலைவராக இருந்து ஒரு குழுவை உருவாக்கி சிறந்த வேத வல்லுநர்களை உள்ளடக்கி, மொழிபெயர்ப்புப் பணியைச் செய்தார். இந்தக்குழுவில் இருந்த ஆறுமுக நாவலரால் பெரும் சர்ச்சை எழுந்தது. குறிப்பாக, நாவலர் அறிமுகப்படுத்திய 'தேவன்' என்ற சொல்லைப் பெர்சிவல் ஏற்றுக்கொண்டதால், பல விமர்சனங்கள் எழுந்தன. எனினும் அச்சொல் (தேவன்) கிறித்தவ மக்கள் வழக்கில் இன்றளவும் நிலைத்துவிட்டது. ஆறுமுகநாவலர் மொழிபெயர்ப்புக் குழுவில் இல்லை. பெர்சிவல் ஐயரின் மாணவர் என்பதால் அவருக்கு சில உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார் எனக் கூறப்படுகிறது.

ஊ) சமய நூல்கள் படைத்த சமயக் கணக்கர்

பெர்சிவல் ஐயர், தாம் செய்த இதழ்ப்பணி, மொழிபெயர்ப்பு, அகராதிகள் போன்ற பணிகளே அன்றி பல நூல்களையும் எழுதியுள்ளார் எனத் தெரிகிறது.

The Land of the Veda: India briefly described’ என்ற நூலை இந்தியா பற்றி வெளியிட்டுள்ளார். *Land of the vedas* என இன்னொரு நூலையும் வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. அது கபிலதேவரின்அகவல்நூலின்மொழிபெயர்ப்பே எனச் சிலர் கூறுகின்றனர். மேலும் இலங்கை வரலாறு (*An account of the Island ceylon*), ஆராதனை ஒழுங்கு, மெத்தடிஸ்ட் வினா - விடை முதலிய நூல்களையும், இன்னும் பல சிறுசிறு நூல்களையும் எழுதியுள்ளதாக அறியப்படுகிறது.



எ) திருச்சபை சீர்திருத்தச் சிந்தனையாளர்

அவர் ஆங்கிலிக்கன் திருச்சபையிலும், மெத்தடிஸ்ட் திருச்சபைகளிலும் சமயப் பணியும் கல்விப்பணியும் ஆற்றினார். சமயப் பணியையும் கல்விப் பணியையும் ஒன்றாகச் சேர்க்க வேண்டியதில்லை என்ற கருத்துடையவர். *Education over Evangelisation* என்ற கொள்கைப்படி முதலில் கல்விப்பணி செய்து, பின்னரே நற்செய்திப் பணி ஆற்றப்பட வேண்டும் என்று கருதினார். இதனால் அவர் சார்ந்திருந்த திருச்சபை இயக்கங்களோடு அவர் பல நேரம் கருத்து மாறுபாடுகள் கொண்டிருந்தார். ஒரு திருச்சபையிலிருந்து விலகி மற்றொன்றில் இணைந்தார். திருச்சபைச் சீர்திருத்தச் சிந்தனையாளராகச் செயல்பட்டார்.

ஏ) மிகச் சிறந்த ஆய்வாளர்

அவர் கல்வி, இலக்கியம், சமயம், பண்பாடு, சமூகம் முதலிய பல துறைகளில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டவராகத் திகழ்ந்தார். அதற்கு அவரது பழமொழித் தொகுப்புகளும் *‘The Land of Veda’* போன்ற நூல்களுமே சாட்சி.

III. அவர் தொகுத்த பழமொழிகளுள் சுவையான சில

பெர்சிவல் ஐயர் தொகுத்து வெளியிட்ட பழமொழிகள் பலவற்றை வரலாற்றறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, தமது நூலில் பட்டியலிட்டுள்ளார். அவற்றுள் இன்று நாம் பெரிதும் கேள்விப்படாத சில சுவையான பழமொழிகள் இவை: அ)

உடுத்திக்கெட்டான் வெள்ளைக்காரன், உண்டுகெட்டான் சோனகன், புதைத்துக்கெட்டான் தமிழன்.

ஆ) உன் சமர்த்திலே குண்டு பாயாது

இ) ஊசியின் காதிலே ஒட்டகம் நுழையுமா (பைபிள்)

ஈ) குண்டு பட்டுச் சாவாதவன், வண்டு கடித்துச் செத்தானாம்.

உ) தண்ட சோற்றுக் காரா, குண்டு போட்டால் வாடா

ஊ) தீர்க்கதரிசி பீங்கான திருடி

எ) ‘ராங்கி’ மிஞ்சி ‘ரூம்’ தேடுகிறது.

ஆக்கிப்போட ஆள் தேடுகிறது.

IV பெர்சிவல் ஐயரின் தனித்துவச் சிறப்புகள்

பெர்சிவல் ஐயரின் வாழ்வையும் பணிகளையும் கூர்ந்து நோக்கும்போது, அவரது தனித்துவக் கொடைகளாகவும் பண்புகளாகவும் சிலவற்றைக் குறிக்கலாம்.

1. இந்தியரிடை அறிவுபரவலாக, முதல் பத்திரிகை (இதழ்) வெளியிட்டவர்.

2. கல்விக்கு (சமயப் பணியினும்) முக்கியத்துவம் தந்தவர்.

3. தாய்மொழி வழி சமயப் பணியாற்ற வலியுறுத்தியவர்.

4. உரைநடை விரும்பியாய் இருந்தார்.

இத்தகு அரும்பணிகள் பலவற்றை அருந்தமிழுக்குக் கொடையளித்த பெர்சிவல் பெருமகனார் தான், (“எந்தத் தமிழனும் தன்னைத் தமிழனென்று சொல்லிக்கொள்ள நாணுறலாகாது” (Let no tamil be ashamed to call himself a Tamil) என முழங்கினார். ‘தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா’ என்ற நாமக்கல்லாரின் சங்கநாதத்தின் எதிரொலியல்லவா இவ்வரிகள்?

நம்பிக்கை நல்கும் சங்ககால பொற்பனைக்கோட்டை–2

டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்
சித்தரியல் ஆராய்ச்சியாளர், புதுவை.

தொல் தமிழரின் பண்டையத் தொழில் நுட்பம் ,அவர்களது பாரம்பரிய அறிவியல் திறமைகள் இன்னமும் சரிவர வரலாற்றில் எடுத்துக்கூறப்படவில்லை.

தமிழரின் அயல் வணிகம் என்றதும் என்னமோ நறுமணப்பொருள்கள் ,முத்து , மயில் தோகைபோன்றஇயற்கைப்பொருள்கள்மட்டுமேஎன்பதுபோலஎனசுருக்கிவிடுகின்றனர் .நான் கூட முன்பே தமிழர்களின் போர்க்கருவிகளின் சிறப்பு , போர்வாட்களின் திறன் அவைகளின் உலகின் தேடுதல் பற்றி சில கட்டுரைகள் எழுதியிருந்தேன் .இன்னமும் அவர்களைப்பற்றி நிறைய எழுதவேண்டும் .

அவைகளுக்குத்தேவையான நுட்பமான அரியவகை இரும்புவகைகள் செய்வதிலும் ,அரிய வகை நுண்ணிய கண்ணாடி மணிகள் செய்வதிலும் அந்த கண்ணாடி மணிகளில் நுட்பமாக துளையிட்டு மாலைகளாக செய்வதிலும் திறன் பட்டு விளங்கினார் அதற்க்கு மிக அதிக வெப்பம் தேவைப்படும் .கொதிகலங்கள் எரியூட்டும் கலன்களும் தேவை அவைகள் தொல் தமிழர்களிடம் மட்டும் அப்போது இருந்ததால் , .அத்தகைய தொழில் நுட்பங்கள் இல்லாத ரோமர்களை இங்குவந்து தங்கி அவைகளை தொல்தமிழரிடம் இருந்து வாங்கி சென்றிருக்கிறார்கள் .அவைகளையே கொடுமணல் ,அரிக்கமேடு இவைகள் மூலம் கிடைக்கும் சான்றுகள் தெரிவிக்கின்றன .

அதேப்போல் பொற்பனைக்கோட்டையில் பண்டைத்தமிழனின் தொழிநுட்ப அறிவை பதுக்கி வைத்திருக்கும் அந்த உருக்கு ஆலை அமைந்துள்ளது.இதுவரை தமிழகத்தில் கண்டுபிடிக்கப் பட்ட உலோகம் உருக்கும் தொழிற்சாலைகளிலேயே இதுஒன்றுதான் பாறைகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவே ஒரு அதிசயம் தான்சமதளமான கருங்கல் பாறையில், குறிப்பிட்ட இடைவெளியில் ஆங்காங்கே கல்லில் வடிக்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட வட்ட வடிவ உலோகம் உருக்கும் தொட்டிகள். அந்தத் தொட்டிகளுக்குப் பக்கத்தில், தொட்டிக்குள் காற்றைச் செலுத்தி நெருப்பை வேகப்படுத்தும் துருத்திக்கான துளைகள். நடு நயமாக நீள்வடிவில் உலோகத்தைக் குளிர்விக்க ஒரு தொட்டி.

தொட்டியையும் துருத்தியையும் கருங்கல் தரைப்பரப்புக்கு கீழாக இணைத்திருக்கும் துளைகளை எந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துளைத்திருப்பார்கள் குழாய்கள் எப்படி அடியில் கொடிபோல் பிரிந்து செல்கிறது என்பதே வியப்பளிக்கிறது

ஆலை அமைந்திருக்கும் இடத்திலிருந்து சுமார் 100அடித் தொலைவிலேயே கற்களை உடைத்தெடுத்து உலோகத்துக்கான மூலப் பொருட்களைப் பிரித்தெடுத்ததற்கான தடயம் கண்முன்னே காணக்கிடைக்கிறது. பொதுவாக இந்தப் பகுதியில் அலுமினியத்தை அடிப்படைத் தாதுப்பொருளாகக் கொண்ட லேட்டரைட்கற்கள் எனப்படும் செம்பூரான் கற்கள் அதிகமாகக் கிடைக்கிறது. மேலும் வெபப உலைப்பூச்சு மற்றும் உருக்கு வேலைக்குப் பயன்படும் குவார்ட்சைட் எனப்படும் சீனிக்கற்களும் மிகுதியாகக்காணப்படுகிறது

இதில் அதிசயம் என்னவென்றால் கற்களை உடைக்க நட்ட நடுநயமாக துளையிட்டிருக்கிறார்கள். இவ்வாறு துளைக்க , துளைக்குள் வெடிமருந்தைப் பயன்படுத்தித்தான் பாறைகளைப் பிளந்திருக்க வேண்டும் எனவே அப்போது வெடிபொருள்களிலும்அதன்நுட்பமும்தொல்திமிழர்கள்வசமாகஇருந்திருக்கவேண்டும். அங்கு கற்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மூலப்பொருட்கள் உருக்கு ஆலையின் தொட்டிக்குள் இடப்பட்டு உருக்கப் பட்டிருக்கிறது. எந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அதற்குரிய அதிக வெப்பம் உண்டாக்கி அவைகளை எப்படி உருக்கினார்கள் என்பது இன்னும் ஒரு அற்புதமே !

தொட்டியின் பக்கவாட்டுச் சுவர்களைக் கவனித்தால் பல அடுக்கு வண்ணங்கள் படிந்திருக்கிறது. ஆகக் கீழே மண்ணின் வண்ணத்தைப் பிரதிபலிக்கும் செவ்வண்ணம். அடுத்து சற்று அடரசிவப்பு. இப்படியாக மாறிமாறி ஆக மேல் புறத்தில் அடர்கருப்பு. அதுதான் இரும்பாக இருக்க வேண்டும்.

சில தொட்டியின் மேற்புறத்தில் மிகச்சிறு அகலத்தில் வாய்க்கால் தோண்டப் பட்டு பள்ளம் நோக்கி விடப்பட்டுள்ளது. உலோகத்தில் படிந்திருக்கும் கழிவுகளை வெளியேற்றவாக இருந்திருக்கும்.

வட்ட வடிவத் தொட்டிகளிலிருந்து நீள்வடிவத் தொட்டிக்கு உலோக உருக்குக் குழம்புகளை எடுத்துக்கொண்டு சொன்றதற்கான தடயங்கள் அப்பட்டமாகத் தெரிகிறது.

சான்றாக , ஆங்காங்கே சிந்தி கல்லில் படிந்திருக்கும் உலோகத்தின் அடையாளம். மேற்குப் புறத்து நடுத்தொட்டியின் அருகே சிந்தியிருந்த வண்ணம் சற்று வித்தியாசமாக இருந்தது. அனேகமாக அதுதான் அலுமினியம் உருக்கும் தொட்டியாக இருக்க வேண்டும்.

அருகில் இருக்கும் திருவரங்குளம் பகுதியிலிருந்து பொறப்பனைக்கோட்டை வரை உள்ள கோயிற்காடுகள் மற்றும் இரும்புக்கழிவுகளுடன் கூடிய மேடான சில பகுதிகளில் இரும்பு உருக்கு ஆலைகளின் மண்ணாலான உலைகள் பகுதியளவு சிதைந்த நிலையிலும்

, இரும்புக்கழிவுகளை பிரித்தெடுக்க பயன்படுத்தப்பட்ட கலன்கள் பல இடங்களிலும் , இரும்பு வார்ப்புக்கு பயன்படுத்தப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட சுடுமண்ணாலான உருக்கு குழாய்கள் உருக்குடன் உறைந்த நிலையிலும் , தனியாகவும், பகுதியளவு சிதைந்த நிலையிலும் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல அப்போதைய புதுக்கோட்டை சமஸ்தானத்தால் வெளியிடப்பட்ட கே.ஆர் வெங்கட்ராம அய்யர் அவர்களால் தொகுக்கப்பட்டு 1938 ல் வெளியிடப்பட்ட புதுக்கோட்டை ஸ்டேட் மேனுவல் புத்தகத்தில் “13-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த வீரபாண்டியனின் நான்காவது ஆட்சியாண்டில் திருவரங்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உருக்குத்தொழிற்சாலைகள் இயங்கிவந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அதுமட்டுமின்றி 1813 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புதுக்கோட்டை சமஸ்தானத்தின் புள்ளிவிவரக் குறிப்பேட்டில் இரும்புத் தொழிற்சாலைகள் இயங்கிய இடங்களுக்கு பல வழித்தடங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது.

இதற்கு முன்னதாகப் சமஸ்தானத்தால் 1811-ல் பெறப்பட்ட பெய்லி அறிக்கையின்படி ஒரு ஆண்டிற்கு ரூபாய் 1300 மதிப்புள்ள இரும்பு உருக்கு தாதுக்கள் வெட்டி எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் இதே அறிக்கையின் மூலம் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இரும்பு உருக்கும் ஆலைகள் இயங்கிவந்ததற்கான தரவுகளை அறியலாம்.



இவ்வாறு தொடர்ச்சியாக 2500 ஆண்டுகளாக இரும்பு உருக்கு ஆளை இருந்த இடம் இப்போது மறக்கப்பட்டுவிட்டது .தமிழகத்தின் தொல்லியல் சிறப்பே இவ்வாறு தொடர்ச்சி இருப்பதே ஆகும் ஆனால் அவைகள் அண்மையில் அயலாரின் புறக்கணிப்பால் போட்டியைத் தவிர்க்கவும் ,தங்களது உருக்குபொருள்களை இங்கு விற்கவும் இவைகளை மக்கள் மறக்குமாறு செய்திருக்கிறார்கள் .

2500 ஆண்டு பழமையானது பொறப்பனைக்கோட்டை அங்கே சுமார் 2500 ஆண்டுகள் பழமையான உலோக உருக்கு ஆலையாக செயல்பட்டிருப்பது அதிசயமே

. தொல்லியல் ஆய்வுத் துறையினரால் கண்டறியக்கட்டுள்ள இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களின் மூலமும், முன்னோர்களின் எச்சங்கள் மூலமும் இதனை உறுதி செய்ய முடிகிறது. இயற்கைச் சீற்றத்தினாலோ, அல்லது படையெடுப்பினாலோ அழிந்து போன இக்கோட்டை தற்போது மண்ணில் புதையுண்டு கிடக்கிறது.

அதற்கடுத்த படியாக தஞ்சை தமிழ் பலகலைக்கழக பேராசிரியர் முனைவர் சு.ராஜவேலு ஆய்வு மாணவர்கள் த.தங்கதுரை, சா.பாண்டியன்,ஆ.மோசஸ் குழு வினரால் அடையாளங் காணப்பட்ட பொற்பனைக் கோட்டை நடுகல்(புதுக்கோட்டை) ஒன்றும் உள்ளது.

பொற்பனைக்கோட்டை நடுகல்

1. கோவென்கட்டிற் நெதிர –
2. ணாறு பொன்கொங்கர் விண்ண கோன்
3. ஆஎறிஇத்து ஏவ அதவ்வனாரு
4. அங்கபடை தாணைத் தணயன் கணங்
5. குமாரன் கல்

என்று வாசிக்கப்பட்டுள்ள பொற்பனைக்கோட்டையில் கிடைத்த நடுகல் முக்கோண வடிவத்தில் உள்ளது.

இதில் 5 வரிகள் இடம்பெறுகின்றன. கோ வென்கட்டி என்பவர் காலத்தில் பொன்கொங்கர் விண்ணக்கொன் பசுக்கூட்டத்தை கவர அதவ்வன் என்பவருடைய மெய்க்காவல் படைத் தலைவனும் கோட்டையின் காவலருமாகிய “அங்கப்படை தாணையன் கணங்குமரன்” இறந்துபட்ட மைக்காக இந்த நடுகல் நட்டுவிக்கப்பட்டதை குறிப்பதாக 2013 ல் வெளிவந்துள்ள ஆவணம் இதழில் கண்டுபிடிப்பு செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இன்னமும் சொல்ல நிறைய உள்ளது அதை அடுத்ததில் காணலாம் தொடரும் ...

படங்கள் மற்றும் செய்திகள் இணையத்தில் இருந்து பெற்றவை நன்றி ! இவ்வாறு எத்தனை தொல்லியல் சான்றுகள் வெறும் கருங்கல் ஜெல்லி ஆகவும், கிரானைட் ஆகவும் மாறிப்போனதோ ..இப்போது கிடைத்திருக்கும் சான்றுகளை அழியாமல் பார்த்துக்கொள்வது மிக முக்கியம்

நான் பொற்பனைக்கோட்டைபற்றி அண்மையில் இரண்டு கட்டுரைகள் எழுதினேன் .அதிலிரண்டாம் கட்டுரையை இப்போது மீண்டும் பதிவிடுகிறேன். இப்போது தமிழ் நாடு திறந்த நிலை பல்கலைக் கழகம் சார்பில் பொற்பனைக்கோட்டையில் அகழாய்வு நடைபெறுகிறது. அதில் சங்ககாலப்பெருமைகள் வெளிப்படும் என நம்புவோம்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் இயற்கை

தில்லி ஜனக்புரி சீனிவாசன்
தமிழாசிரியர் (ஓய்வு)

இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழந்தவன் தமிழன். இயற்கையைத் தெய்வமாகப் போற்றியும் வாழ்ந்தனர்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள், அவ்வியற்கையை வெறுக்காமல், அவ்வியற்கை அழகில் ஈடுபட்டு, அவ்வியற்கை அழகுகளில் இறையழகைக் கண்டு களித்தார்கள்.

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காகக் கொண்டு, செய்ய சுடராழியானடிக்கே,தன் இடராழி நீங்குகவே என்று சொன்மாலை சூட்டினார் பொய்கையார்!

பிறைமருப்பின் பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த செங்கண்மால், நிலனும் இருவிசும்பும், காற்றும், அறைபுனலும்செந்தீயுமாகக் கலந்து நமக்கு அருள் செய்கிறான் என்கிறார்.(மு.தி 29, 73, 92)

இதையே பூதத்தாழ்வாரும்

> “ அவன்கண்டாய் காற்றுத் தீநீர்வான் கருவரைமண் காரோத
> சீற்றத் தீயாவானும் சென்று" (இ. திருவந்தாதி 24)

என்ற பாசுரத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

பெருங்கடலையும், அதில் கலக்கின்ற நதியையும் பொய்கையார் பார்க்கும் போது, “மனமே! மாகடலை நோக்கிப் பாயும் ஆறுபோல நீயும் என் இஷ்ட மூர்த்தியுடன் கலக்க வேண்டும்" என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார்.(மு.தி.67.) இயற்கையில் கண்ட இறைவனைப் பண்ணிலும் பாடலிலும் கண்டு களிக்கிறார்.

நந்தவனத்தில் கொழுகொம்பை நாடி அலையும் கொடிபோல தன்மனம் மால்தேடி ஓடுவதாகஉவமைவழிஇறையுணர்வைவெளிப்படுத்துகிறார்.பொய்கையாழ்வாரும்,

> “ தாய்நாடு கன்றேபோல் தண்துழாயானடிக்கே
> போய்நாடிக் கொள்ளும் புரிந்து"

(மு.தி 30) என்று அருளிச் செய்துள்ளார்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் எம்பெருமான் வானாய், கால் அனலாய், புனலாய், மாருதமாய், மறிகடலாய்த் திகழ்பவன் என்கின்றனர். அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகாதவனும், இந்திரற்கும் பிரமற்கும் முதல்வனானவனும், செந்திறத்த தமிழோசை வட சொல்லாகித் திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகித் தோற்றமளிப்பவன் என்கிறார் திருமங்கை ஆழ்வார். (திரு.நெடு. தாண்டகம் 4)

"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்

சீரார் சுடர்கள் இரண்டாய்" தோற்றமளிப்பதாக வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் (திருவாய்.6-9-1)அருளிச் செய்துள்ளார்.

எம்பெருமான் திருமேனிக்கு காயாமலரையும், கார்மேகத்தையும் ஒப்பிடுவர். கருவுடை மேகங்கள் கண்டால் உன்னைக் கண்டால் ஒக்கும்கண்கள் எனப்பாடி பரவச மெய்தினர்.

இயற்கையழகு வாய்ந்த திருத் தலங்களில் உள்ள இறைவனை வழிபடுவது முக்கியமென்று கருதினார்கள் ஆழ்வார்கள். அவர்கள் காலத்தில் இயற்கையழகு வாய்ந்த தலமாகத் திருவேங்கடத்தைக் கண்டு பாடி மகிழ்ந்தார்கள்.

பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் வேங்கடவனைப் பாடும் பாசுரங்களில் இயற்கை வரைணனைகளில் இறைவனைக் கண்டு களித்துள்ளனர். இயற்கையழகில் ஈடுபட்டே விண்ணிலிருந்து இறங்கி மண்ணிலே வரும்போது வேங்கட மலையில் நின்றானாம் இறைவன்.

.... நின்றதவும்

வேயோங்கு தண்சாரல் வேங்கடமே, விண்ணவர்தம்

வாயோங்கு தொல்புகழான் வந்து"

என்று அருளிச் செய்கிறார்.(இ.திரு.25)

திருப்பதி மலையிலுள்ள மூங்கிற்காடுகளையும், குளிர்ந்த மலைச் சாரல்களையும் பார்த்து இயற்கையழகில் ஈடுபட்டே எம்பெருமான் அந்த மலையில் எழுந்தருளியிருந்ததாகக் குறிப்பிடுவதன் மூலம் ஆழ்வாருக்கு இயற்கை அழகிலுள்ள ஈடுபாட்டை உணரமுடிகிறது.

பூக்களில் சிறந்தது தாமரைப் பூ. தாமரையைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். அந்தத் தாமரைப் பூவில் ஆழ்வார்களுக்கு மோகம் அதிகமாக இருப்பதைக் காணலாம். எம்பெருமானுடைய திருக்கண்கள், வாய், கைத்தலம், திருவடிகளுக்குத்

தாமரையை ஒப்பிடுவதை ஆழ்வார்களின் பாசுரங்களில் காணமுடிகிறது. கார்வண்ணம் திரைமேனி கண்ணும் வாயும்

கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்"

என்கிறார் கலியன். மற்றோரிடத்தில் "

கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அ:.தே"

திரு. நெடு.21) எம்பெருமான் உறுப்புகளுக்குத் தாமரையை ஒப்பிட்டுள்ளது கண்டு இன்புறலாம்.

பொய்கையாழ்வாரும்" நற்றாமரை மலர்ச் சேவடி என எம்பெருமானின் திருவடிக்குத் தாமரையை ஒப்பிட்டுள்ளார்.(மு.தி.20)

உறும் கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் நற்பாதம்
உறும் கண்டாய் ஒண்கமலம் தன்னால்– உறும் கண்டாய்
ஏத்திப் பணிந்து அவன்பேர் ஈரைஞ்ஞூறு எப்பொழுதும்
சாற்றி உரைத்தல் தவம்"(இ.தி77)

திருமாலின் திருப்பாதங்களில் நமக்கு உரிமை என்று சொல்லுகிறவர் , அந்தத் திருவடிகளையே நினைப்பூட்டும் அழகிய தாமரை மலர்களால் துதிப்பது நமக்கு உரியது என்கிறார். இறைவனுடைய ஆயிரத்தெட்டு திருநாமங்களை உரைப்பதால் ஏற்படும் பலன் கிடைக்கும் என்கிறார். அதுவே பக்திக்குரிய தவம் என்கிறார்.

" பணிந்தேன் திருமேனி பைங்கமலம் கையால்
அணிந்தேன் உன் சேவடிமேல் அன்பாய்– துணிந்தேன்
புரிந்து ஏத்தி உன்னைப் புகலிடம் பார்த்து ஆங்கே
இருந்தேத்தி வாழும் இது"

(இ.தி.65) என அருளிச் செய்துள்ளார் பூதத்தாழ்வார்.

பொதுவாக பூக்களின் அழகையும் , சிறப்பாகச் செந்தாமரை மலரின் அழகையும் அனுபவித்துள்ள பேயாழ்வார்க்கு அந்த அழகு தெய்வீக அழகாகவே தோன்றுகிறது.

அடிவண்ணம் தாமரை, அன்றுலகம் தாயோன்
படிவண்ணம் பாற்கடல்நீர் வண்ணம்–முடிவண்ணம் "(மூ.தி.5)

என வியக்கிறார் ஆழ்வார்.

எம்பெருமானின் வடிவழகைச் சொல்லுகின்ற போதும் இயற்கையை ஒப்பிட்டுச் சொல்கின்றனர் ஆழ்வார்கள்.

"கண்ணும் கமலம் கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும் மற்றவையே எண்ணில்
கருமா முகில் வண்ணன் கார்க்கடல்நீர் வண்ணன்
திருமாமணிவண்ணன் தேசு" (மூ.தி.9)

எம்பெருமானின் கண்களும் கைகளும் திருவடிகளும் தாமரையே என்கிறார் பேயாழ்வார்.

எம்பெருமானின் அழகில் ஈடுபட்ட ஆழ்வாருக்குத் தாமரை மலரே நினைவுக்கு வருகிறது. கண்ணழகில் ஈடுபட்டவர் கண்ணும் கமலம் என்கிறார். கைத்தலமும் தாமரையாம். திருவடியும் தாமரையே என்கிறார் . தாமரை மலரையே எல்லா உறுப்பாகவும் காண்கிறார் ஆழ்வார்.

இறைவனை மலர்தூவி வழிபடும் வழக்கம் இன்றும் உள்ளது.

ஆழ்வார்கள் பாசுரங்களில் மலரிட்டு அர்ச்சிக்கும் வழக்கத்தையும் காணலாம்.

தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது என்கிறாள் கோதைபிராட்டி. இறைவன் நாற்றத்துழாய்முடி நாரணனாக விளங்குகிறான்.தொழுது முப்போதும் உன்னடி வணங்கித்

தூமலர் தூய்த்தொழுது ஏத்துகின்றேன் என்கிறாள்

ஆண்டாள் நாச்சியார்.(நாச்.திரு.9)

மாலை நண்ணி வினைகெட காலைமாலை கமலமலரிட்டுத் தொழவேண்டுமென அறிவுறுத்துகிறார் வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன்.

பெரியாழ்வார் திருமொழி 2ஆம் பத்து 7ஆம் திருமொழியில்

தன்னை யசோதை பிராட்டியாக பாவித்துக் கண்ணனைப் பூச்சூட அழைக்கும் பாசுரத்தில்

செண்பகம் மல்லிகையோடு
செங்கழுநீர் இருவாட்சி



எண்பகர் பூவும் கொணர்ந்தேன் எனப்பாடுகிறார்.எம்பெருமானுக்கு உகந்ததாக எண்வகை மலர்களைக் குறிப்பிடுகிறார்.

மலை, கடல், ஆறு, சூரியன், சந்திரன் முதலான இயற்கையை ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடுகின்றனர்.

எம்பெருமான் வீற்றிருக்கும் திருத்தலங்கள் பற்றிப் பாடுகின்ற ஆழ்வார்களுக்கு இயற்கைமீது அளவுகடந்த மோகம் உண்டாகிறது. இயற்கை வருணனைத் திறன்கள் மேலோங்கி நிற்பதை உணரமுடிகிறது. பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார் பாசுரங்களில் பக்திச்சுவையை வருணனைத் திறத்தோடு அருளிச் செய்துள்ளனர்.

பெரியாழ்வார் திருமொழி நான்காம் பத்து இரண்டு மூன்று திருமொழிகளில் திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்பை அழகாக வருணித்துள்ளார்.

சிலம்பார்க்க வந்து தெய்வ மகளிர்கள் ஆடும்சீர்
சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலை மலையே"
அலம்பாவெருட்டாக் கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய் நின்றகோன் மலை

என்கிறார்.

தேவர்களும் முனிவர்களும் வணங்கும் மலை
ஏவிற்றுச் செய்வான் ஏற்றெதிர்ந்து வந்த மல்லரை
சாவத்தகர்த்த சாந்தணிதோள் சதுரன் மலை
ஆவத்தனமென்று அமரர்களும் நன் முனிவர்களும்
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ் சோலைமலையே" (பெரியாழ். திருமொழி 4–2–8)
என்கிறார்.

அதுமட்டுமல்ல . எம்பெருமானே விரும்பி உறையும் மலை என்கிறார்.

உருப்பணி நங்கைதன்னை மீட்பான்
தொடர்ந்தோடிச் சென்ற
உருப்பனை யோட்டிக் கொண்டு உறைந்திட்டான்
உறைப்பான் மலை"

என்கிறார்.

அந்த மலையில்

நஞ்சுமிழ்நாகமெழுந்தணவி நளிர்மாமதியை
செஞ்சுடர் நாவளைக்கின்றதாம். அந்த அளவு உயர்ந்தோங்கிய மலையாம்.
எம்பெருமான் வீற்றிருக்கும் அந்த மலையின் அழகைப் பாடவந்த ஆழ்வார்,
பலபல நாழம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலவலமை தவிர்த்த அழகன் அலங்கார மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே!
மலைக்குத்தான் எத்தனை அடைமொழிகள் கொடுத்துப் பாடியுள்ளார் பாருங்கள்!
அரையன் அமரும் மலை அமரரோடு கோனும் சென்று
திரிசுடர் சூழும் மலை

என்கிறார்.

ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ் சோலையதே"
எனப் பாடி பரவசமெய்துகிறார்.

பிற்காலத்தில் தமிழில் எழுந்த 96வகைச் சிற்றிலக்கியஙுகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழிற்கு வித்திட்ட பெரியாழ்வார், தன்னை யசோதை பிராட்டி நிலையில் கண்ணனோடு விளையாட சந்திரனை அழைத்தார்.

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்ப புழுதி அளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதி
நின்முகம் கண்ணுளவாகில் நீ இங்கே நோக்கிப் போ!
என்சிறுகுட்டன் எனக்கோர் இன்னமுது எம்பிரான்
தன்சிறுகைகளால் காட்டிக்காட்டி அழைக்கின்றான்
அஞ்சனவண்ணனோடு ஆடலாட உறுதியேல்
மஞ்சில் மறையாதே மாமதீ மகிழ்ந்தோடி வா!"
பாலகன் என்று பரிபவம் செய்யேல். பண்டொருநாள்
ஆல் இலையில் வளர்ந்த சிறுக்கன் அவன் இவன்
கோபம் கொண்டால் மேலெழப் பாய்ந்து உன்னைப் பிடித்துக் கொள்வான். எனவே மாலை மதியாதே மகிழ்ந்தோடிவா

எனச் சந்திரனை கண்ணனோடு விளையாட அழைக்கிறார்.

எம்பெருமானின் திருக்கண்களுக்கு திங்களும் ஆதித்யனும் உவமை காட்டுகின்றனர்ஆழ்வார்கள்.

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்"

என திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார் குறிப்பிடுகிறாள்.

பிள்ளைத்தமிழ் போன்றே தூதிலக்கியமும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.

தலைவி தன் காதல் வெள்ளத்தைத் தலைவனிடம் கனிவுடன் பகர, வண்டு, மேகம், நாரை,கிளி அன்னம், முதலானவற்றைத் தூதாக அனுப்புவதுண்டு.

அந்த நிலையில் ஆழ்வார்கள் பாசுரங்களிலும் மேகம், நாரை,வண்டு,கிளி, முதலானவற்றைத் தூதாக அனுப்பிய பாசுரங்களைக் காணலாம்.

கோதைபிராட்டி நாச்சியார்திருமொழியில்5ஆம் திருமொழியில் எம்பெருமானைத் தன் இனிய குரலில் கூவி அழைக்கக் குயிலிடம் வேண்டுகிறாள்

புன்னைக் குருக்கத்தி ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே
பன்னி எப்போதும் இருந்து விரைந்து
என் பவளவாயன் வரக் கூவுவாய்

என வேண்டுகிறாள்.

திருவேங்கடத்தானிடம் தன் காதலைத் தெரிவிக்க மேகங்களைத் தூது விடுக்கிறாள்.

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்

தெண்ணீர்பாய் வேங்கடத்துச் செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பத்தைத் தெரிவித்து, நீர்காலத்து எருக்கில் அம்பழ இலைபோல் வீழ்வேனை
வார்காலத்து ஒருநாள் தம்வாசகம் தந்தருளச் சொல்வீராக என தூதனுப்புகிறாள்.

அவனையே கதியாகக் கொண்டிருக்கும் என்னை ஒருபொருட்டாக க் கருதாமல் இருப்பதை , ஒரு பெண்கொடியை வதைசெய்தான் என்னும் சொல்லை உலகோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனக்கூறுமாறு தூதனுப்புகிறாள்.

ஆண்டாளுக்குத் திருமாலிருஞ்சோலைமலையின் மலர்களின் அழகு எம்பெருமானின் திருமேனி அழகை நினைவூட்டுகிறதாம்.

போர்க்களிறு பொரும் மாலிருஞ்சோலை அம்பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற
கார்க்கொள் படாக்கள் நின்று கழறிச் சிரிக்கத் தரியேன்
ஆர்க்கிடுகோ தோழீ! அவன்தார் செய்ய பூசலையே!

அந்த மலையில் மலர்ந்திருக்கின்ற மலர்கள் எம்பெருமானை நினைவூட்ட அவைகள் தன்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பதாகத் தோன்றுகிறதாம் அவளுக்கு!

கருவிளையொண் மலர்காள்! காயாமலர்காள்! திருமால் உருவொளி காட்டுகின்றீர் என மலர்களின் அழகு திருமாலிருஞ்சோலைமலை எம்பெருமானின் உருவொளியலக் காட்டுவதாகப் புலம்புகிறாள்.

யாரிடம் போய்ச் சொல்லுவேன் என அங்கலாய்க்கிறாள்.கார்க்கோடல் பூக்களைப்பார்த்த கோதைபிராட்டிக்கு அப்பூக்கள் கார்க்கடல் வண்ணன் தன்மேல் போர்க்கோலம் செய்து போரவிடுத்ததாகவும் அவன் எங்கிருக்கிறான் எனவும் அதன்மேல் வெகுளுகிறாள். மேல்தோன்றிப் பூக்களே!வேதமுதல்வன் வலங்கையின்மேல் தோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போல் எம்மைச் சுடாது , அவனுடைய அணுக்கத் தொண்டர் கூட்டத்துள் ஒரு தொண்டனாக என்னை வைத்துக் கொள்ளக் கூறமாட்டீர்களா? என வேண்டுகிறாள்.

கொவ்வைப் பழத்தையும் முல்லைப் பூவையும் பார்த்து தன் உள்ளக் கிடக்கையை உணர்த்துகிறாள்.

பாடும் குயில்களே! எம்பெருமான் நமக்கொரு வாழ்வு தந்தால் பாடுங்கள்!

குயிலின் இன்னிசை கூட தலைவன் பிரிவால் நாராசமாகக் கேட்கிறதாம்.

பாடுங்குயில்காள்! ஈதென்ன பாடல்! என அதன்மேல் எரிந்து விழுகிறாள்.

ஓரிடத்தில் மயில்கள் தோகை விரித்தாடுகின்றன.அதனைப் பார்த்த ஆண்டாள், கணமா மயில்காள்! நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள்!உம்முபைய நடனத்தைப் பார்க்க பாவியேன் நானோர் முதலிலேன் என இரங்கிக் கூறுகிறாள்.

நம்மாழ்வாரும் பராங்குசநாயகியாகத்தன்னைபாவித்து நாயகனானபெருமானிடம் புள்ளினங்களைத் தூது விடுக்கிறார்.

வண்டுகளே! தும்பிகளே!பூவைகளே!பாவைகளே!கிளிகளே!விரைந்தோடி வந்து கையமர் சக்கரத்து என்கனிவாய் பெருமானைக் கண்டு மெய்யமர் காதல் சொல்வீராக !என்னும் தூதுப் பாசுரங்களை அருளிச் செய்துள்ளார்.

இங்ஙனம் மழை, கடல் முதலான இயற்கைப் பொருள்களை இறைவனோடு தொடர்புபடுத்தி ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் பரவிப் போற்றுவதை அனுபவிக்கலாம்.

ஆண்டாள் நாச்சியார்

ஆழிமழைக் கண்ணனே!

ஒன்றும் நீ கைகரவேல். ஆழியுள் புக்கு நீரை முகந்து கொண்டு ஆர்த்து மேலே சென்று என்ன செய்ய வேண்டும் தெரியுமா! ஊழிமுதல்வன் உருவம்போல் கருமை நிறம் கொண்டு, அவன் கையில் இருக்கின்ற தீயிற்பொலிகின்ற செஞ்சுடர் ஆழிச்சக்கரம்போல் ஒளிவிட்டு, பாஞ்சசன்னியம்போல அதிர்ந்து , எம்பெருமான் உதிர்த்த அம்புகள் போல பொழிவாயாக!என்கிறாள் .

இப்பாசுரத்தில் எம்பெருமானிடம் இருக்கும் பொருள்களை ஒப்பிட்டுகாட்டிப் பொழியச் சொல்கிறாள்.

இவ்வாறு இயற்கையை உவமை, உருவகம் முதலான அணிநயங்கள் புலப்பட, இயற்கையைஇயற்கைக்காக மட்டும் ரசிக்காமல் எம்பெருமானுடன் தொடர்புபடுத்தி பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாலேய்தமிழ் இசைகாரர்களாகிய ஆழ்வார்கள் தம் ஈரச் சொற்களால் தமிழை தெய்வீகமாக்கியுள்ள தன்மையைப் படித்து இன்புறுவோமாக!

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

KARAIKKAL AMMAIYAR

Akshayan
Australia

Once upon a time, “Our Lord” she would cry,
and as her mind delighted, never ceased to sing his praises.
Her eyes rained ceaseless tears,
and she would fall on the ground in worship – never rising.
She worshipped not the other celestials
Who else is as God-mad for the Great King?
What to say of the Skilled One,
who enslaves others thus!
O you with jewelled busoms, let us sing of His Feet
as we plunge and dance in the beautiful flowery water!
(8.07.15 Thiruvempavai)

1 THE SANGAM AGE

Tamil poetry flourished for many hundreds of years under the reign of the Tamil Sangam (Tamil Academy). These were a group of elite wordsmiths who gifted us with works of momentous significance, known as sanror seyyul (now referred to as sanga illakiyam). These include grammar texts such as the immortal Tolkappiyam as well as the Akanaanuru, an evergreen collection of 400 poems in the love genre.

Furthermore, we can see that the poets came from diverse backgrounds, some royal, some merchants as well as farmers. We can also see that at least 27 of the named poets are women. However, a few centuries after the turn of the millennia, in around 250 CE, Tamil literature entered its “dark period”.

Tamil literature, for the next 300 years or so, saw a marked decline in production, and Tamil history in general from that period remains mysterious. This was the situation in which Karaikkal Ammaiyaar entered.

2 AMMAIYAR’S POETRY

Ammaiyar’s genius revolutionized the Tamil poetic scene. Her poems are included in the 11th Thirumurai of Saiva poetry. The Thirumurais are as follows:

1, 2, 3. Thirugnanasambandar – Thevaram

4, 5, 6. Appar – Thevaram

7. Sundarar – Thevaram

8.Manickavaasagar– Thiruvasagam + Thirukkovaiyar

9. Thiruvisaippa + Thiruppallandu

10.Thirumoolar – Thirumanthiram

11. Pirabantham (Miscallaneous)

12. Sekkizhar – Periya Puranam

Within the 11th Thirumurai, her compositions are fourfold:

1. Thiruvaalangaadu Mootha Thiruppathigam
2. Mootha Thiruppathigam
3. Thiruvirattai Manimaalai
4. Arputha Thiruvanthaathi

The sheer weight of her contribution through these poems is immense. Karaikkal Ammaiyar was possibly the first bhakthi poet, trailblazing the path forward for centuries worth of devotees starting with the Tevaram Moovar.

She was the first to employ the anthathi construction, a device where the letters, words or a phrase which finishes one poem, also comes as the start of the next poem. For example:

Since birth, from the moment I began to speak,
in love I reached your roseate Feet – dark throated
Lord of the Celestials!
What day will You remove my misery?

***

Misery He may not solve, He may not pity me either
or reveal the path to salvation, yet – He of luminous form
Our Lord who dances in the fire, decked with bones,
for Him, the love in my heart shall never decrease.

(11.4.1–2 Arputha Thiruvanthathi)

Her love for the Lord is boundless, as seen in her poetry, and she uses this intimate relationship to chide Sivan as if he were her own son. It was also her wish to forever behold the dance enacted by Sivan in the cemetery grounds; the following song combines these two aspects:

Don’t fare forth united beautifully with the bangled one,
who’s locks flow down her nape – as the kazhal rings
to Your fiery cemetery dance in the dead of the night
along with Your gang of ghosts

(11.4.51 Arputha Thiruvanthathi)

Notes:

united – the song is about Sivan who is pictured as sharing his frame with Parvati. Ammaiyar warns Him that his soft and tender consort might be frightened by the sights of the cemetery dance.

kazhal – a sort of ornament for the feet which warriors wear.

She was also the first to employ the extremely difficult kattalaik kaliththurai metre. Revered nowadays as one of the most musical poetic forms in Tamil literature, it involves each line having a certain fixed number of syllables, housed in the very constrictive venpa metre. The Thiruvirattaimani maalai is so called as it weaves pairs of kattalaik kaliththurai poems with venpa poems in an alternating fashion, much like a flower garland. One such poem:



What will you do, if your half –
the mountain girl * of the roseate lips
finds she who is known as Gangai
in your long, matted hair?
With bow in your hand, you sent an arrow
towards the warring triple cities, engulfing them in fire.
Sankara of matchless power!
(11.3.5 Thiruvirattaimani Maalai)

Notes: Parvati is the daughter of the mountain king and shares half of Sivan's body. However, Sivan, in an act of grace, also carries the flood of the Gangai River in his hair. Ammaiyar playfully asks Him how he manages the two consorts.

3 INFLUENCE

The most revered of all the Saiva poets are the Naalvar, namely Sambandar, Appar, Sundarar and Manickavasagar, who between them combine for the first 8 of the 12 thirumurais. The Thevaaram Moovar sang almost exclusively in the form of pathigams (groups of ten songs). Between the three of them, they account for about 8000 songs which have survived to this day (and uncountably more which have unfortunately been lost). In the Thiruvaasagam sung by Maanickavaasagar too, the majority of compositions are in the pathigam format. This format was innovated by Karaikkal Ammaiyaar.

Moreover, at the end of such groups of 10, it is customary to sing a song which states the benefit of singing that pathigam. The first person to handle such a concept was Karaikkal Ammaiyar. For example, from the mootha thiruppathigam:

By the grace of the Lord
whos locks are crowned with crescent moon,
and who enacts his divine dance
with snake belt wrapped around his waist
the ten songs of the ghoul of Karaikkal –
who inhabits the forest with fiery, sharp toothed mouth,
will eradicate the sins of those who sing and dance.
(11.2.11 Mootha Thiruppathigam)

In fact, it is even said that Thirugnanasambandar sung his first pathigam Thodudaiya Seviyan in the pann (musical setting) of Nattapadai to pay homage to Karaikkal Ammaiyar, who also started her poetry corpus in the same pann.

4 LIFE

Karaikkaal Ammaiyaar was born as the daughter of a wealthy merchant. The name given to her at birth was Punithavathiyaar (pure one), and she was said to be as beautiful as Lakshmi herself:

Her soft feet were fitted with bright jewels,
and even in her toddling stage
she held boundless love
for He who wears snakes as ornaments.
Even whilst playing she would praise the Lord,
and adore his servitors as they passed by,
thus her grace and beauty grew day by day.

The above are some lines from the Periya Puranam rendered in English. Coming back to her story, her father soon arranged her marriage to another merchant. He couldn't bear to be separated from his daughter, beautiful as the peacock, and so he built the newlywed couple a mansion where they lived harmoniously, serving the devotees of Sivan.

One day her husband was given two mangoes, which she kept safely in her house, to give him later. As her husband left for the day, there came a Sivan devotee, plagued by hunger.

She welcomed him and performed all the rites, such as cleaning his feet, and offered him food, along with which she placed one of the mangoes that she had stored.

The devotee left, and her husband came back. She did all her duties and served him food, at which point he asked her to bring one of the mangoes. Taking a liking to its taste, he asked for the other one too. As the other mango had already been given away, Punithavathi, unsure what to do, had no resort except the Rider of the Bull:

> She moved out to the next room dismayed,
> what could she possibly do?
> Oblivious of the world she meditated on the Feet of the Lord
> and by his grace of grace
> there appeared a mango of exceeding sweetness
> in the hands of her with plaited hair

She joyously took it to her husband, who tasted it and found it to be even greater than the first. "Where did you acquire this? Its taste is rare to be found anywhere in the 7 worlds" he asked, convinced it was not identical to the first mango. Unwilling to lie she told him the truth:

> She of perfumed flowery locks narrated the story
> of the grace of the Lord
> with the poison stain in his throat,
> yet he was still unconvinced, and said
> "If it truly be the act of the lustrous One
> with matted hair, divine another such mango".
> She moved out, and asked of the jewelled Lord
> for another such mango,
> saying that otherwise her words
> would become a mere falsehood,
> and to her wonderment she beheld
> yet another mango in the palm of her hands.

She took it to her husband and placed it in his hand, but as he went to taste it, it vanished! Fearing his wife to be a supernatural woman, he hatched a secret plan. He mounted a ship loaded with wealth and acted as if going to a nearby land to trade and acquire wealth. Instead, he started a new life, making investments and starting a business, then marrying another woman. To them a child was born which he named Punithavathi in memory of his first wife.

When those back in Karaikkal came to know what had transpired they took it as their duty to unite Punithavathi with her husband. Carrying her on a diamond studded palanquin they trekked to that Pandya country:

> After some days they reached Pandyan Country
> and her husband, fearstruck upon hearing of this
> took his flower creeper-like second wife and child
> to meet the lady of flowery locks.
> Before his first wife, who stood soft as a young deer,
> he bowed down, and said "I live by your grace,

and this, my tender child, bears your name".
Struck by amazement her relatives asked,
"O he who wears fragrant garlands,
what makes you worship your wife thus?"
To which he replied "regular human she is not,
she is a divine deity, you too must understand this,
and worship her golden feet".
Hearing this she hailed the Lord
who enjoys Konrai blossoms in his matted hair,
and who dances wearing resounding anklets.
"If this be his intention, O Lord,
rid me of this burden of beauteous flesh,
which I bore only for the sake of my husband.
Grant me the form of a ghoul!"
At that very moment by the grace
of He who dances in the Divine Court,
she shook off her beauteous flesh
and stood as a hallowed ghoul,
fit to be worshipped by the earth and the heavens.
As flowers rained on the earth,
as the five celestial instruments rang in unison,
and as sages and the bhootas of Sivan danced in joy,
she started to hymn praise of the lotus feet of the Lord
and headed towards his divine abode in Mount Kailai.

Not wanting to touch the holy land with her feet, she walks by her head. Taken aback by the sight Sivan's consort, Parvati, asks him what the meaning of this is, to which comes the reply – a moment beautifully captured in the Periya Puranam:

"Behold Umai, she is like a mother who fosters us.
She asked for the boon of this wondrous form,
which we graced unto her."
As Punithavathi neared them,
Sivan beheld her and uttered that singular word
such that all the worlds stood redeemed,
"O Mother!"

"O Father" she replied, before asking Sivan to grace her with the boon to adore his dancing form forever, a request Sivan grants. As Punithavathi had the status of being called "Mother" by Sivan Himself she became known as Karaikkal Ammaiyaar (Ammai – Mother). Thus was born Peyar (the Ghoul Devotee) – one of the most important devotees and poets in our Saiva history!

நூலாய்வு: 5

உலகத் தமிழரின் ஒரே நூல் திருக்குறள்

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

நூல் பெயர்: கட்டுரைத் தலைப்பு: வள்ளுவர் கற்பிக்கும் அறிவின் பெருமை.
ஆசிரியர்: முனைவர் செ. இராஜேஸ்வரி
சந்திரோதயம் பதிப்பகம்
தொடர்பு எண்: 7010997639110
பக்கங்கள்; விலை ₹. 250/-

வள்ளுவர் காட்டும், "ஆண்மை" என்னும் ஐந்தாவது கட்டுரையில் 'ஆண்மை' என்னும் சொல்லை வள்ளுவர் எந்தந்தப் பொருளில் எப்படியெல்லாம் பயன்படுத்துகிறார் என்பதை இந் நூலாசிரியர் எடுத்துச் சொல்லுகிறார்.

வள்ளுவர், ஆண்மை என்னும் சொல்லை பல்வேறு வகையான பொருள்களில் பயன்படுத்தி உள்ளார். இது ஆண்களுக்கு உரிய சொல்லாக உள்ளது. ஆண்மை என்றால் பொதுவாக, உதவி செய்தல் என்னும் பொருளைத் தருகிறது என்பதையும், இந்த ஆண்மை என்னும் சொல்லுடன் சில அடைமொழிகளைச் சேர்த்து , வேளாண்மை, தாளாண்மை, பேராண்மை, வினையாண்மை, குடியாண்மை, மடியாண்மை, இல்லாண்மை, நல்லாண்மை, புல்லறிவாண்மை, காரறிவாண்மை, ஒப்புரவாண்மை போன்ற சொற்களைஉருவாக்குகின்றார் என்பதையும் இந்நூலாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி எடுத்துச் சொல்லுகிறார்.

வேளாண்மை என்ற சொல், பிறருக்கு உதவி செய்தல் என்னும் பொருளிலும், தாளாண்மை என்னும் சொல், தன்னுடைய முயற்சியையும், பேராண்மை என்பது ஆண்களுக்கு உரிய சிறந்த இயல்புகளான புகழ், மானம், அறிவு, அருள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த பண்பு என்னும் பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றன. தவிர, பகைவனுக்கு அருளக்கூடிய பண்பும் ஆகும் என்றும், வினையாண்மை என்பது ஒரு செயலில் காணும் வெற்றி ஆகும் என்றும், குடியாண்மை என்பது ஆட்சிச் சிறப்பாகும் என்றும், இல்லாண்மை என்பது குடிச் சிறப்பு மற்றும் குலப் பெருமை ஆகும் என்றும், புல்லறிவாண்மை என்பது நிலையற்றதை நிலையானவை என்று பிறழ உணர்தல் என்றும், காரறிவாண்மை என்பது தீமை பயப்பது என்றும்,ஒப்புரவாண்மை என்பது அளவறிந்து செயல்படுதல் ஆகும் என்றும் விளக்குகிறார். வள்ளுவரின் மொழி ஆளுமைக்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகள் எனலாம்.

வள்ளுவர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளைத் தந்த பல சொற்கள் இப்போது வேறு ஒரு பொருள் குறிப்பதைப் பார்க்கிறோம். அவற்றில் ஒன்று வேளண்மை என்னும் சொல்.

இச் சொல் வள்ளுவர் காலத்தில் விருந்தோம்பலைக் குறித்தது. ஆனால் தற்காலத்தில் அதே சொல் பயிர்த்தொழில் அல்லது விவசாயம் என்னும் பொருளைக் குறிக்கிறது.

வள்ளுவர் காலத்தில், இல்லறத்தில் இருப்பவர்கள், தங்களைத் தேடிவரும், தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வயிறார உணவு அளித்து வந்தார்கள். அப்படி உணவளிக்க வேண்டும் என்று வள்ளுவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறள் வாயிலாகச் சொல்லுகிறார் என்பதையும் இந்நூல் எடுத்துச் சொல்லுகிறது.

ஆண்மையிலேயே மிகச்சிறந்த ஆண்மை பேராண்மை யாகும் என்று வள்ளுவர் கூறுகிறார். பேராண்மை என்பது பிறன்மனை நோக்காத தன்மையாகும். அதாவது, வள்ளுவர், "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் அதே நேரத்தில் பிறன்மனை நோக்காத பேராண்மைதான் சான்றோருக்கு அழகு என்றும் கூறுகிறார். ஒழுக்கக்கேடு நிறைந்துள்ள இக்காலச் சமுதாயத்திற்கு இக்குறள் மிகவும் தேவைப்படுகிறது.



பண்டைக் காலத்தில் பெண்கள் இல்லக் கிழத்திகளாகவே இருந்தனர். அங்கொருவர், இங்கொருவர் மட்டுமே கல்வியாளர்களாகவும் புலவர்களாகவும் இருந்தனர் அல்லது போருக்குச் சென்றனர். எனினும் குடும்பத் தலைவனைப் போல எந்த ஒரு பெண்டிரும் பொருளீட்டப் போவதில்லை. அதனால்தான்,

"வினையே ஆடவர்க்கு உயிரே" என்றும்

"மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்றும்

பொருளீட்டுவதை ஆண் மக்கள் உயிராகக் கொண்டிருந்தனர்; பொருளீட்டும் ஆண் மக்களை, அதாவது தங்கள் கணவன்மார்களைப் பெண்கள் உயிராகக் கொண்டிருந்தனர் என்பதைக் குறுந்தொகை போன்ற இலக்கியங்களில் காண்கிறோம். ஆனால் தற்காலத்தில், "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்பன போன்ற கேள்விகள் பொருளற்றவையாகப் போய்விட்டன. இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னணியில் நிற்கின்றனர். இத்தகைய கருத்துகளை எடுத்துச் சொல்லி, பெண்கள் தொடர்பான கண்ணோட்டம் முற்றிலும் மாறிவிட்டதை ஆசிரியர், பாரதியின் பாடல்வரிகள் மூலமும் அறிஞர் அண்ணாவின் செயல் திட்டத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

ஆண்மை, நல்லாண்மை, இல்லாண்மை ஆகிய சொற்களை நாட்டு விடுதலையோடு தொடர்பு படுத்தி திரு. வி. க. அவர்கள் அவரது காலத்தில், அதாவது, 1925 ஆம் ஆண்டு கட்டுரை எழுதி நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இவ்வாறு அவரவரும் அவரவது இயல்புக் கேற்றவாறும் கருத்துக் கேற்றவாறும் திருக்குறள் தரும் சொற்களைப் பயன்படுத்தி வருவதை இளைஞர்கள் உணர்ந்து கொள்வது சாலச் சிறப்பைத் தரும்.

தமிழரின் வணிகச் சிறப்பு

டாக்டர் அண்ணாமலை சுகுமாறன், புதுவை

சங்க காலத்தில் பூம்புகார் எனும் - காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் வந்து இறங்கின பொருள்களைக் கடியலூர் உருத்திரங்கண்ண னார் அடுக்கடுக்காகக் கூறுகிறார். இந்தப்பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து மற்றும் உளநாட்டின் பிற பகுதியைகளில் இருந்து கடல் வழியாகக் கப்பல்களில் வந்தவை.

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு'
(பட்டினப்பாலை 185–193)

குதிரைகள் கடல் வழியாகக் கப்பல்களில் வந்து இறங்கின. குதிரை தமிழ்நாட்டுக்கோ அல்லது பாரத நாட்டுக்கோ உரிய விலங்கு அன்று. அவை பாரசீகம், சிந்து தேசம் முதலானநாடுகளிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டு வரப்பட்டவை. அக்காலத்துமன்னர்கள் நான்கு வகையான படைகளை வைத்திருந் தார்கள். அப்படை களில் குதிரைப்படையும் ஒன்று. தேர்ப்படைக்கும் குதிரை தேவைப்பட்டது. ஆகவேவெளிநாடுகளிலிருந்து குதிரைகள் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டன.

காவிரிப்பூம்பட்டினத்தில் குதிரைகளும் இறக்குமதியாயின என்பது இதனால் தெரிகின்றது. தமிழ் வாணிகர் குதிரைகளை இலங்கைக்குக் கொண்டு போய் விற்றார்கள்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சேனன், குட்டகன் என்னும்இரண்டு தமிழர் இலங்கையரசனை வென்று இருபது ஆண்டு இலங்கையையரசாண்டார்கள் என்றும் அவர்கள் அஸ்ஸ (அசுவ - அசுவம் - குதிரை)

வாணிகனின் மக்கள் என்றும் மகாவம்சம் என்னும் சிங்கள நாட்டு வரலாற்று

நூல் கூறுகின்றது. சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசன் இலங்கையைஅரசாண்ட காலத்திலே சேனன், குட்டகன் என்னும் பெயருள்ள இரண்டு தமிழர்சூரதிஸ்ஸனை வென்று அரசாட்சியைக் கைப்பற்றி அனுராதபுரத்திலிருந்து

நீதியோடு இருபத்திரண்டு ஆண்டுகள் அரசாண்டார்கள். இவர்கள் அஸ்ஸஅசுவ) நாவிகனின் மக்கள் என்று மகாவம்சம் (XXI: 10-11) கூறுகிறது.

இவர்கள் கி.மு. 177 முதல் 155 வரையில் இலங்கையை அரசாண்டார்கள். அவர்கள் நெய்தல் நிலத்தை சார்ந்த தொல் தமிழர்களாக இருக்கவே வாய்ப்பு உண்டு

கிழக்கிலும் மேற்கிலும் வங்கக்கடலையும் அரபிக்கடலையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு நில அமைவிடம், பண்டைத் தமிழகம் கடல்கடந்த வாணிகத்தில் ஈடுபட உதவியிருக்கிறது. கீழ்த்திசையில் சீனா மற்றும் தெற்காசிய நாட்டின் வணிகர்கள் நடுவில் இருந்த இந்தியாவைத் தாண்டி மேற்கில் அதிகம் செல்லவில்லை,

அவ்வாறே பண்டையத் தமிழர்கள் ‘யவனர்கள்’ என்று பொதுவாகக் குறிப்பிட்ட மேற்குலக பண்டைய அராபியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், எகிப்தியர்களும் இந்தியாவைக் கடந்து சென்று கீழ்த்திசை நாடுகளுடன் கடல்வணிகம் செய்வதில் அதிக அக்கறை செலுத்தவில்லை.

மேற்கே அக்காலத்தில் அறியப்பட்டிருந்த மேலைநாடுகளின் மத்திய தரைக்கடல் முதல் கிழக்கே சீனாவின் தென்சீனக் கடலுக்கும் இடைப்பட்ட கடல்வழி வணிகவழியில், கிழக்கிலும் மேற்கிலும் என இருதிசையிலும் உள்ள நாடுகளுடன் கடல்வணிகம் செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது தமிழகத்தின் இருப்பிட அமைப்பு.

ஏற்றுமதியில் விலையுர்ந்த கற்களையும், முத்துக்களையும், பட்டாடைகளையும், மஸ்லீன் துணிகளையும், ஆபரணங்களையும், வாசனைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்த தமிழகம், இறக்குமதியில் விலை குறைந்த பொருட்களை கொள்முதல் செய்ததால் பண்டமாற்று வணிகத்தையும் மீறி வெள்ளி தங்க நாணயங்களைக் கொடுத்து ஈடுகட்ட வேண்டிய நிலைக்கு ரோம் போன்ற நாடுகள் உள்ளாயின.

இதனால் அந்த நாட்டு மக்களின் ஆடம்பர வாழ்க்கையும் அரசளவில் கண்டனம் செய்யப்பட்டு தங்கம் அதிக அளவில் தமிழகம் வருவதைக் கட்டுப்படுத்த ரோம் மன்னர் வெஸ்பாசியன் சட்டங்களும் இயற்ற நேரிட்டது .நாட்டைவிட்டு அதிகமான தங்கம் வெளியேறியதால் ரோம் மன்னர் வெஸ்பாசியன் இந்தியாவுடனான வணிகத்திற்குத் தடை விதித்தார் அது அதிக காலம் நீடிக்கவில்லை .ஏனெனில் ரோம் மக்களால் தமிழக பொருள்கள் இல்லாமல் இருக்க முடியவில்லை .இந்த நிலை மிளகுக்குப்பதிலாக மிளகாய் கண்டுபிடிக்கப்படும் வரை தொடர்ந்தது .

பிளினி (பொ.ஆ. 77) தனது ‘நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா(Naturalis Historia/The Natural History)’ நூல் குறிப்பில் இந்தியாவைத் தங்கம் வெள்ளி போன்ற ‘அரிய உலோகங்களின் தொட்டி’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பிளினியின் நூல்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரை வணிக நகரங்கள் பற்றி மட்டும் குறிக்கின்றன. . ரோமானிய வணிகர்கள் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து

பாலக்காட்டுக் கணவாய் வழியே கோவை, ஈரோடு, கரூர் ஊடாக கிழக்கிலுள்ள சந்தைகளில் வணிகம் செய்தனர்.

மேற்சொல்லப்பட்ட ஊர்கள் கிழக்கினையும் மேற்கினையும் இணைக்கும் வணிக மையங்கள். அங்கெல்லாம் ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன. தாலமியின் *Geography* தமிழகத்தின் கடற்கரை துறைமுகங்கள் பற்றிக் குறிக்கிறது

மேற்குத் துறைமுகங்களுக்கு நாணயங்கள், புஷ்பராகம், அஞ்சனக்கல், பவழம், கச்சாக் கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மது, ஆடை வகைகள் இறக்குமதியாயின. மிளகு, முத்து, தந்தம், பட்டு, மருந்து, (இலமிச்சை தைலம்), பளிங்கு கற்கள், படிகப் பச்சை, வைரம், நீலநிறக் கற்கள், ஆமை ஓடுகள் போன்றன ஏற்றுமதியாயின. இவையனைத்தும் அனைத்து செல்வர்கள் விரும்பும் பொருள்கள்;

பாடலின் அடுத்த வரி காலின் வந்த கருங்கறி மூடையும் என்பது காற்றின் உதவியினால் கப்பல்களில் கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட கறி (மிளகு) மூட்டை. அக்காலத்தில் சிறந்த மிளகு சேர நாட்டு மலைச்சரிவுகளில்தான் உண்டாயிற்று.

அதற்கு அடுத்தபடியாகச் சாவக நாட்டில் (ஜாவா சுமத்ரா தீவுகளில்) மிளகு உண்டாயிற்று. ஆனால், சாவக நாட்டு மிளகு சேர நாட்டு மிளகைப்போல அவ்வளவு சிறந்ததன்று. சேர நாட்டு மிளகை யவனர்கள் பெரிய நாவாய்களில் வந்து பெருவாரியாக வாங்கிக் கொண்டு போன படியால் அது பற்றாக்குறைப் பொருளாக இருந்தது.

ஆகவே கிழக்குக் கரைப்பக்கத்திலிருந்த சோழ நாட்டு வாணிகர் சாவக நாட்டிலிருந்து மிளகைக் கொண்டு வந்து விற்றார்கள். இந்த மிளகைத் தான் ‘காலின் வந்த கருங்கறி மூடை’ என்று கூறப் பட்டது. (கால் - காற்று, காலின் வந்த - காற்றின் உதவியினால் கப்பலில் வந்த) சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் உணவுக்கு மிகவும் முக்கியமானபொருளாக இருந்தது மிளகு. ஆனால் மிளகு எல்லா நாடுகளிலும்விளையவில்லை .

சேர நாட்டிலே மலைச் சாரல்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில்) மிளகுக் கொடிகள் வளர்ந்தன. சேர நாட்டில்வாழ்ந்த அக் காலத்துத் தமிழர்மிளகைப் பயிரிட்டு மிளகு உற்பத்தி செய்தார்கள். கிழக்கிந்தியத் தீவுகளாகிய சாவக நாட்டிலேயும் அக்காலத்தில் மிளகு உண்டாயிற்று. ஆனால் அந்த மிளகுசேர நாட்டு மிளகைப் போன்று சிறந்தவையல்ல. சேர நாட்டுக்குவடக்கேயிருந்த துளு நாட்டிலும் (இப்போதைய தென் கன்னட மாவட்டம்)மிளகு உண்டாயிற்று.

சங்க காலத்தில் சேர நாடும் துளு நாடும் தமிழ் பேசும்தமிழ் நாடாகவே இருந்தன. பிற்காலத்தில் சேர நாட்டில் பேசப்பட்ட தமிழ், மலையாள மொழியாகவும் துளு நாட்டில் பேசப்பட்ட தமிழ், துளு மொழியாகவும் மாறிப் போயின. துளு நாட்டிலும் சேர நாட்டிலும், மிளகுநன்றாக விளைந்தது. மிளகு, உணவைப் பக்குவப்படுத்துவதற்கு இன்றியமையாத பொருளாக இருந்தபடி யால் அது உலகம் முழுவதும் தேவைப்பட்டது.

இக்காலத்தில் சமையலுக்கு உபயோகப்படுகின்ற மிளகாய் அக்காலத்தில் கிடையாது. அக்காலத்தில் அமெரிக்கா கண்டம் இருந்ததுஅறியப்படவில்லை கி.பி. 15 ஆம் நூற்றாண்டில்

அமெரிக்கா கண்டம்புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அங்குத் தென் அமெரிக்காவிலிருந்து மிளகாய் கொண்டு வரப்பட்டது. இது நிகழ்ந்ததுஅண்மை காலத்தில்தான். சேரநாட்டு மிளகுஅக்காலத்தில் உலக முழுவதும் பேர் பெற்றிருந்தது. ஐரோப்பாக் கண்டத்திலிருந்த யவனர்கள் சேர நாட்டு மிளகை அதிகமாக வாங்கிக் கொண்டுபோனார்கள். அதனால் மிளகுக்கு யவனப்பிரியா என்று பெயர் உண்டாயிற்று.

மிளகுக்குக் கறி என்றும் மிரியல் என்றும் பெயர் உண்டு. சோழ நாட்டுக்குச்சாவக நாட்டிலிருந்து மிளகு இறக்குமதியாயிற்று என்பதைப் பட்டினப்பாலையிலிருந்து அறிகின்றோம். சங்கச் செய்யுட்களிலே சேர நாட்டு மிளகும் மிளகுக் கொடி யும் கூறப்படுகின்றன. குடபுலத்தில் (சேர நாட்டில்) கறிக்கொடி (கறி=மிளகு) பலாமரங்களில் மேலே படர்ந்து வளர்ந்ததை நத்தத்தனார் கூறுகிறார்.

`பைங்கறி நிவந்த பலவின் நீழல்'

(சிறுபாணாற்றுப்படை. அடி. 43)

மலைகளில் சந்தன மரங்களின் மேலேயும் மிளகுக் கொடிகள் படர்ந்துவளர்ந்தன. `கறி வளர்சாந்தம்' (அகம், 2:6) மலைகளில் மிளகுக் கொடி வளர்ந்தது. `கறி வளர்அடுக்கம்' (குறும், 288:1) (அடுக்கம் - மலை) கருவூர் கதப் பிள்ளைச்சாத்தனாரும் `கறிவளர் அடுக்க'த்தைக் கூறுகிறார். (புறம் 168:2) `கறிவளர்

சிலம்பை' ஆகூர் மூலங் கிழார் கூறுகின்றார். (அகம் 112:14) (சிலம்பு - மலை)

மதுரை அறுவை வாணிகன் இள வேட்டனார், `துறுகல் நண்ணிய கறியிவர்படப்பை'யைக் கூறு கிறார். (அகம் 272 : 10) (படப்பை - தோட்டம்) நக்கீரர்

திருமுரு காற்றுப்படையில் (அடி 309) கறிக்கொடியைக் கூறுகின்றார்.

மிளகாய் இல்லாத அந்தக் காலத்திலே மிளகு உணவுக்கு மிகவும் பயன்பட்டது. உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாத பொருளாகமிளகு இருந்தது. காய்கறிகளை உணவாகச் சமைத்த போது அதனுடன் கறியை(மிளகை)யும் கறிவேப்பிலையையும் பயன்படுத்தினார்கள்.

'பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇ'

என்று பெரும்பாணாற்றுப்படை (வரி 307, 308) கூறுகின்றது. நமது நாட்டில்மட்டுமன்று. உலகத்திலே மற்ற நாடுகளிலும் மிளகு தேவைப்பட்டது.

ஆகவேமிளகு வாணிகம் மிகச் சிறப்பாக நடந்தது. மேற்குத் தொடர்ச்சிமலைகளையடுத்த சேர நாட்டிலும் துளு நாட்டிலுமே மிளகு உண்டானபடியால்இந்த இடங்களிலிருந்தே மிளகு மற்ற எல்லா நாடுகளுக்கும் சென்றது. உலாகின் வேறு எங்கும் மிளகு விளையவில்லை . தமிழ் நாடு இதனால் மிகுந்த ஏற்றம் கண்டது .

பாண்டிநாடு, சோழ நாடு, கொங்குநாடு, தொண்டை நாடு முதலான தமிழகத்துநாடுகளுக்குத் தமிழகத்துக்கு அப்பால் வடக்கேயுள்ள பாரத தேசத்துநாடுகளுக்கும், பாரசீகம் எகிப்து உரோமாபுரி கிரேக்கம் முதலானதேசங்களுக்கும் சேர நாட்டு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது.

தமிழகத்தின்மேற்குக் கரை யோரங்களில் விளைந்த மிளகு கிழக்குக் கரையோரத்திலிருந்தகாவிரிப்பூம்பட்டினத்துக்கும் வண்டிகளிலும் பொதி மாடு பொதிகழுதைகளிலும் கொண்டு வரப்பட்டது. காலின் வந்த கருங்கறி மூடை என்று

இதனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறு கிறார் (பட்டினப் பாலை,அடி 186) (கால் - வண்டி, பொதிமாடு முதலியன. கறி மூடை = மிளகு மூட்டை)(வணிகச் சாத்து - வணிகக் கூட்டம்). மிளகுப் பொதி களைக் கழுதைகளின்முதுகின் மேல் ஏற்றிக் கொண்டு நெடுஞ்சாலை வழியே சென்றதையும் மிளகுமூட்டைகள் பலாக்காய்அளவாக இருந்ததையும் வழியில் இருந்த சுங்கச்சாவடிகளில் அரச ஊழியர் சுங்கம் வாங்கினதையும் அந்தப் புலவரேகூறுகிறார்.

பாடலின் அடுத்த வரி-- வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் என்பன இமயமலைப் பக்கத்தில் கிடைத்த மணியும் பொன்னும். இவை வட இந்தியாவி லிருந்து கங்கையாற்றின் முகத்துவாரத்தின் வழியாகக் கடலின் வழி வந்தவை.

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும் என்பன மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உண்டான சந்தனக் கட்டை, அகிற் கட்டையாகும். இதைத் தெய்வங்களுக்கும் மகளிர் கூந்தலை உலர்த்து வதற்கும் அக்காலத்தில் பெரிதும் உபயோகப்பட்டவை.

சந்தனம் சாந்தாக அரைக்கப்பட்டு உடம்பில் பூசப் பட்டது. இவை மேற்குத் தொடர்ச்சி மலைகளில் கிடைத்தன. (இவையல்லாமல் ஆரமும் அகிலும் சாவக நாட்டிலிருந்தும் கொண்டு வரப்பட்டன.)

தென்கடல் முத்து என்பது பாண்டி நாட்டுக் கடல்களில் (கொற்கை, குமரி முதலான இடங்களில்) உண்டான முத்து. பாண்டி நாட்டுக் கொற்கை முத்து உலகப் புகழ் பெற்றது.

குணகடல் துகிர் என்பது கிழக்குக் கடலில் உண்டான பவழம். (துகிர் - பவழம், குணகடல் - கிழக்குக் கடல்) சாவக நாட்டில், பசிபிக் மாக்கடல்களில் பவழப் பூச்சிகளால் உண்டான பவழங்கள் அந் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன. இவை யல்லாமல் மத்திய தரைக் கடலில் உண்டான பவழங்களை யவன வாணிகரும் மேற்கிலிருந்து கொண்டு வந்தனர்

கங்கை வாரி என்பது வடக்கே கங்கையாற்றங்கரை மேலிருந்த பாடலிபுரம், வாரணாசி (காசி) முதலான ஊர்களிலிருந்துகொண்டு வரப்பட்ட பொருள்கள். அப்பொருள்களின் பெயர் கூறப்படவில்லை.

காவிரிப் பயன் என்பது காவிரியாறு பாய்கிற சோழநாட்டுப் பொருள்கள். இவை உள்நாட்டுப் பொருள்கள். இவற்றின் பெயர் கூறப்படவில்லை. இவை ஏற்றுமதிக்காக இத்துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இவாறு பட்டினப்பாலையில் கூறப்படும் செய்திகளுக்கு தொல்லியல் சான்றாக அண்மையில் கிழடியில் முக்கிய ஆதாரம் ஒன்று கிடைத்துள்ளது .தமிழர் தொன்மை பாடல்களில் சொல்லப்படும் செய்திகள் அத்தனையும் உண்மைகள் எந்தவித கற்பனையும் உயர்வு நவிற்சியும் கொண்டதில்லை ,என்பதை கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் தெரிவிக்கின்றன .

அந்தப்பாடல் சொல்லும் செய்திகளுக்கு ஆதாரமாக தொல்லியல் சான்று ஒன்றும் அண்மையில் கிடைத்துள்ளது .அது தமிழ் நாட்டு மகத கிமு 3 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய தொடர்பை வெளிப்படுத்துகிறது

கீழடி அள்ளித்தந்து வரும் மரபுச்செல்வங்களுக்குள் ஒரு வெள்ளிக் காசும் இப்போது இணைந்திருக்கின்றது மதுரை நகருக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடிஅகழாய்வுத் தளத்தில் தற்போது ஏழாவது கட்ட அகழாய்வு நடந்து வருகிறது.

இதில் சில நாட்களுக்கு முன்பாக, வெள்ளியினால் ஆன முத்திரையிடப்பட்டகாசு என்று கிடைத்துள்ளது. கீழடித் தமிழ்ச் சமூகத்தின் வணிகத் தொடர்புகளுக்கான ஆதாரம் அது.

வெள்ளியிலான முத்திரைக் காசு (Punch Marked Coin) ஒன்று சிலநாட்களுக்கு முன் கீழடி அகழ்வாய்வுப் பண்பாட்டு அடுக்கில் 146 செ.மீஆழத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் வழியே இதன் காலம் மௌரியர்களின் காலத்திற்குச் சற்று முன்னதாக பொ.யு.மு. நான்காம் நூற்றாண்டின் நடுவிலானதாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முன்புறம் சூரிய சந்திரர்கள், காளை, எருது, நாய் போன்ற குறியீடுகளும்பின்புறம் அரைவட்டம் மற்றும் ‘ட’ வடிவக் குறியீடுகளும்காணப்படுகின்றன. 2.20 கிராம் எடையுள்ள இந்த வெள்ளிக் காசு, வடபுலத்தாருடன் நம் பழந்தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளுக்கான கூறப்படும் கூற்றிற்கு மற்றுமொரு சான்று 146 செ.மீ ஆழத்தில் கிடைத்த இந்தக் காசில் முன்புறம் சூரிய சந்திரர்கள், காளை, எருது, நாய் போன்ற குறியீடுகளும் பின்புறம் அரைவட்டம் மற்றும் 'ட'வடிவக் குறியீடுகளும் காணப்படுகின்றன.

இந்தக் காசு குறித்து தனது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள மாநில தொல்லியல் துறை அமைச்சர் Thangam Thenarasu பெருமிதத்துடன் பதிவிட்டுள்ளார் , "2.20 கிராம் எடையுள்ளஇந்த வெள்ளிக் காசு, வட புலத்தாருடன் நம் பழந்தமிழர் கொண்டிருந்தவணிகத் தொடர்புகளுக்கான மற்றுமொறு சான்று" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் நீல கண்ட சாஸ்திரி போன்றோர் எழுதியவைகளைப்பற்றிமட்டுமே குறிப்பிடாமல் அண்மைய கண்டுபிடிப்புகளையும் அவ்வப்போது ஆவணப்படுத்துவது அவசியம் ஆகிறது விரைவில்கீழடி போன்ற அண்மைய தொல்லியல் கண்டுபிடிப்புகள் நமது பாட புத்தகங்களில் இடம் பெறவேண்டும் .

இந்த காலகட்டத்தைச் சேர்ந்த காசுகள், கீழடியில் மட்டுமல்லாமல், இதற்குமுன்பு தமிழ்நாட்டில் நடந்த பல அகழாய்வுகளில் கிடைத்துள்ளன என்றும்மகத பேரரசுடன் நடந்த வணிகத்திற்கு இவை சான்றாக இருக்கின்றன என்றும்குறிப்பிடுகிறார் மன்னர் மன்னன்.

இதையேதான் பட்டினப்பாலையில் கங்கை வாரியும் காவிரிப் பயனும்பூம்புகாரில் வந்து குவிந்தன என்கிறார் .வடவளம் என்றும் கங்கை கரை பொருள்கள் அழைக்கப்பட்டதையும் முன்பே பார்த்தோம் .

இதில் கூறப்படும் செய்திகளுக்கு ஆதாரம் கனகலதா முகுந்த எழுதிய பழந்தமிழ் வணிகர்கள் எனும் புத்தகத்தில் இருந்துசில பகுதிகள் எடுத்தாளப்பட்டிருக்கிறது .வேறு சில செய்திகள் இணையத்தில் பெற்றது .

மலையாளிகள் இனி, தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும்...!

சிகாபுத்தீன் பொய்த்தும்கடவு
மலையாள எழுத்தாளர்

தமிழாக்கம் : ***களியக்காவிளை சினு.***

(truecopythink. தளத்தில் வெளியான மலையாளக் கட்டுரையின் தமிழாக்கம்)

மலையாளத்திற்கும் ஆங்கிலத்திற்கும் அடுத்தபடியாக நாம் கல்வி நிலையங்களில் முதன்மைத் துணைமொழியாகக் கற்றுக்கொள்ள வேண்டியது தமிழ் மொழிதான் என்பது எனது கருத்து. ஏனென்றால், தமிழ்தான் நமது பாரம்பரியத்தின் மொழி. கேரளாவின் நீண்ட பண்பாட்டின் வரலாற்று உள்ளுணர்ச்சியாக இருப்பது தமிழ்.நமது மொழியின் உயிர், வேறு எந்த மொழியையும் விடத் தமிழில்தான் குடி கொள்கிறது.வட இந்தியாவிலிருந்து பாய்ந்து வந்த ஆரிய மயமாக்கத்திற்கு எதிராக வியக்கத்தக்க வகையில் தாக்குப்பிடித்த மொழியாகவும் தமிழை நாம் காண வேண்டும்.

மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளில், சமற்கிருதத்தினைக் கலக்கவிடாமல் மிகக் கவனமாக விலக்கி வைத்தவர்கள் தமிழ்ப் பெருங்குடிகள்.

தமிழின் பழமையும் இலக்கிய வளமும் அந்த மண்ணின் பெருமைக்குரிய சின்னங்களாக, அரசியல் உந்துஆற்றலாக இன்று வரையிலும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

சொல்வளத்தாலும் இசைத்தன்மையாலும் தமிழ் மொழி உலகின் அனைத்து மொழிகளையும் விட முன்னணியில் இருக்கிறது. எந்த ஆங்கிலச் சொற்களுக்கும் அந்த மொழியில் அதற்குத் தகுந்த சொல்லாடல்கள், தேவைக்குத் தகுந்தபடி தோற்றம் பெறுவதைக் காணலாம்.

ஏராளமானஇயந்திரக்கருவிகள்மேற்குலகநாடுகளிலிருந்துகண்டுபிடிக்கப்படுவதும்அவை இந்தியாவை வந்தடையவும் செய்கின்றன.நாம் எக்கருவியும் கண்டுபிடிக்கப்படாதது மட்டுமின்றி, இல்லாத பழங்கதைப் பேச்சுகளில் மூழ்கிப் போவதும்எந்தவொரு வெட்கமுமின்றிக் கருவிகளைப் பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்தவும் செய்பவர்கள். நமக்கு அந்தக் கருவியின் பெயரில் கூட எந்தவகை உரிமையும் இல்லை!

அச்சூழலிலும் அந்த இயந்திரங்களுக்குத் தாமாகப் பெயர் சொல்லி அழைப்பதற்காவது முயற்சி செய்யும் மொழிதான் தமிழ். ரெப்ரிஜிரேட்டருக்கு அவர்கள் இயல்பாகக் 'குளிர் சாதனப் பெட்டி' என்று பெயரிட்டு இருக்கிறார்கள். ஏர்கண்டிஷனருக்கும் பெயரிட்டு

அழைக்கிறார்கள். சாதனம் என்பதற்கு எந்திரம் என்பதுதான் தமிழில் பொருள். மொபைல் என்ற சொல்லிற்குத் தமிழர்கள் முதல்தரப் பெயரிட்டிருக்கிறார்கள்; 'அலைபேசி'. கம்ப்யூட்டருக்கு கணிப்பொறி, கால்குலேட்டருக்கு 'கணிப்பான்', 'எளிகணி' என்னும் இரு பெயரிட்டிருக்கிறார்கள். கணிப்பான் என்ற சொல்லிலிருந்து கணிப்பதற்கும்

எளிதில் கணிக்க என்னும் பொருளில் இருந்துதான் 'எளிகணி' என்று கால்குலேட்டருக்கும் பெயர் படைத்திருக்கலாம். பஸ்சைப் 'பேருந்து' என்று தமிழ்ப்படுத்தினார்கள். போட்டோவிற்கோ மிகவும் இரசனைக்குரிய சொல்வெளிப்பாடே தமிழுக்கு; நிழல் படம். மற்றும் ஒரு அழகான சொல் 'நிழல்குடை'. இது வேறெதுவுமில்லை. வெயிட்டிங் செட்டிற்கு!

Weather என்பதற்குச்சரியான மலையாளம் இன்றைக்கும் இல்லை. Climate என்ற சொல்லுக்கு 'காலாவஸ்த' என்று எழுதுகிறோம். Weather என்பதற்கு 'தைனம்தின காலாவஸ்த' என்றெல்லாம் சில இதழ்கள் எழுத முயற்சித்தாலும் அது எதுவும் சரிப்படவில்லை. உண்மையில் நான் பிறந்த இடமான கண்ணூரில் Weather என்பதற்கு அழகான மலையாளச் சொல் இருக்கிறது

- ஆச்ச்.

வானம் கருமேகங்கள் சூழும்பொழுது மழை மறையும்பொழுது பண்டைய தலைமுறையினர் இப்போதும் சொல்வார்கள். ஆஹா, 'ஆச்ச் மாறிட்டே' என்று. இப்படி எவ்வளவோ கவித்துவமான வட்டார வழக்குகளை மலையாளி இழந்திருக்கிறான். ஏதாவது ஒரு நாளிதழ் (பத்திரிகை) பழக்கப்படுத்தி இருந்தால் சிலவேளை அழியாமல் இருந்திருக்கும். எந்த மொழியிலும் புதிய சொல்லாடல்களை வெளியில் இருந்து திணிப்பதன் மூலம் உருவாக்க இயலாது.

அண்மையில் நமது மொழி வல்லுநர்கள் ஆங்கிலத்திற்குச் சமமான சொற்களை உருவாக்கிட கடினமாக முயற்சி செய்த போதிலும் முழுமையான பயன் கிடைக்கவில்லை.

அவ்வாறான சொற்கள் ஓசை நயமோ, நமது பண்பாடு குறித்த ஆழ்மன சித்திரங்களையோ கொண்டிருக்கவில்லை என்பதுவே வெளிப்படை. 'ஸ்விட்ச்' என்பதற்கு 'வைத்யுத ஆகமன பிரத்தியாகமன யந்திரம்' என்ற ரீதியில் சொற்களை உருவாக்கினால் எப்படி இருக்கும்? 'ரயில்வே ஸ்டேஷனுக்கு' 'அக்னிசகட ஆகமன பிரத்தியாகன யந்திரம்' என்று இரண்டு முறை சொல்லி முடியும்போது, நமக்கான வண்டி கிளம்பிப் போயிருக்கும்.

இந்த இடத்தில் தமிழ் ஒரு முன்னெடுத்துக்காட்டாக இருக்கிறது. நேற்றுக் கண்டறிந்த ஆங்கிலச் சொல்லுக்கும் நாளை தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்திருப்பார்கள். அதற்குத் தக வாட்சப்பிற்குக் கூடத் தமிழில் பெயர் வந்துவிட்டது; பகிரி என்னும் சொல். எடுத்துக்காட்டுகள் இன்னும் நிறைய இருக்கின்றன.

தமிழ் மொழிக்கு எப்படி இது இயலுகிறது? விடை எளிது. இசைத் தன்மை கொண்டது அம்மொழி. எளிமையானது. மிகப் பல நூற்றாண்டுகளின் இலக்கியப் பாரம்பரியம் அதற்கு இருக்கிறது. அதன்மீதான அனைத்து மதிப்பும் அன்பும் அவர்களின் நெஞ்சத்தில் அந்த மொழியிடம் இருக்கிறது.

'தமிழன்' என்றுகூட ஒரு திரைப்படத்தின் பெயர் வருகிறது. சுயமரியாதையின் ஆற்றல் ஒரு வணிகத் திரைப்படத்தின் பெயரில்கூட வெளிப்படுகிறது. அது மிகவிரைவிலேயே ஒரு சமூக, அரசியல் உணர்வாக மடை மாற்றம் செய்யப்படுகிறது.இப்படி இருக்கும்போது மலையாளி ஒரு திரைப்படத்திற்குச. சூட்டிய பெயரைப் பாருங்கள் - 'மலையாளி மாமனுக்கு வணக்கம்' !

இணையோடு புணர்வது குறித்துச் சொல்வதற்குக் காவியத் தன்மை கொண்ட ஒரு சொல் கூட மலையாளத்தில் இல்லை.

ஆனால் தமிழில் கவனியுங்கள்; உடல் உறவு. எவ்வளவு தொலைவு அழகானதும் ஓசை நயம் கொண்டதுமான சொல். காதலின் மென்மையை வெளிப்படுத்த இதுபோன்ற மிக அருமையான சொல் இன்னும் இருக்கிறது தமிழில். அதில் ஒன்று தான் கலவி.'கலவி' என்பதற்கு 'இரண்டாக இராமல் ஒன்றாவது' என்பதுவே பொருள். காதலுடன் இணைவதற்கு இதைப்போன்ற சொல்லழகும் சமூக உணர்வும் உள்வாங்கிய வேறு எந்த சொல் இருக்கிறது?

மலையாளத்தில் இந்தப் பொருளில் பயன்படுத்தப்படும் பகுதியான சொற்களும் விகாரம் தரக்கூடியவை. சுயமரியாதை அற்றதும் கூட.

ஒரு நிமிடம், இதை வாசிப்பதை நிறுத்திவிட்டு அவ்வாறான சொற்களை ஆராய்ந்து பாருங்கள்; சொன்னதன் பொருள் புரியும்.

1578 இல் போர்த்துக்கீசிய கிறித்தவ மிசினரிகள் ஒரு தமிழ் வழிபாட்டு நூலைப் பழைய தமிழ் மொழிநடையில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

அதற்குப் பெயர் 'தம்புரான் வணக்கம்'. அம்மொழிக்கே உரிய மொழிநடையைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட அப்புத்தகம், அச்சில் வெளியான முதல் இந்திய மொழி என்பதைக் கூட நினைவுகூர வேண்டும். அதை நமது சொந்த கேரள மண்ணில்தான் அச்சடித்தார்கள். வேணாட்டின் கொல்லத்தில். இந்த விசயத்தில் கொல்லம் மாவட்டத்தவர்கள் மிகவும் பெருமை கொள்ளலாம்.

மலையாள நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் இடையிலான தொடர்பு குறித்து இதைவிடக் கூடுதலாக வேறு எதைச் சொல்ல முடியும்?

எந்தவொரு சமூகத்தினரின் வரலாற்று உணர்வும் மொழியில்தான் உயிர் வாழ்கிறது. வடக்கிலிருந்து உருவாகும் ஆரிய மயமாக்கல், தென்மேற்குக் கரை ஓரங்களிலிருந்து உருவான வியாபார மிசினரித் தொடர்புகளினால் நாம் நமது தாய் மொழியான தமிழிலிருந்து பெருமளவுக்கு விலகிப் போயிருக்க வேண்டும்.

மொழியால் திணிக்கப்பட்ட நேரடியான மற்றும் மறைமுகமான காலனித்துவம் இன்றும் தொடர்கிறது. ஆனால், தமிழ் மொழியைக் கற்றிராத எந்தவொரு மலையாளியாலும் ஓரளவுக்குத் தமிழில் தகவலைப் பரிமாறிக் கொள்ள முடியும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

நமது மொழி தமிழ் மொழியுடன் கொண்டிருப்பது தொப்புள் கொடி உறவாகும். தமிழின் சங்க காலக் காவியங்களில் ஒன்றினை எழுதியது ஒரு கேரளர். இளங்கோவடிகள் என்பது கவிஞனின் பெயர்.

படைப்பு; சிலப்பதிகாரம். ஒன்றிரண்டு அல்ல, 5700 வரிகள் இருக்கிறது. நாம் அறிந்திடாத கேரளக்கவிஞர்களின் பெயர்கள் இன்னும் இருக்கலாம். எட்டுத்தொகையின் சில கவிதைவரிகள் கேரளாவின் கவிஞர்கள் எழுதியதாகக் கருதப்படுகிறது.

இந்தக் குறிப்பின் நோக்கம் மொழி மீதான உரிமை கோரும் வாதமல்ல.

உலகிலுள்ள எந்த மொழியும் பிற மொழிகளுக்கு எதிராக இல்லை என்பதுவே மேன்மையான உண்மை.

உலகில் மிகவும் குறைவான மக்கள்தொகையினர் பேசும் மொழியைக் கூட மனிதன் பாதுகாக்க வேண்டும் என்று நம்பக்கூடிய ஒரு மனிதன் நான். ஆனால் அரசியல் உள்நோக்கத்தோடு எந்த மொழியையும் திணிப்பதற்கு நான் எதிராளியும் கூட. வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் மொழிக்குப் பின்னால் வலுக்கட்டாயமாகத் திணிக்கும் குரூர மனம் இருக்கிறது. வேர்களைக் கைவிட்ட மரங்கள் அதன் ஆன்மாவை விரைவில் இழந்துவிடும்.

துணை மொழியாக நாம் கற்கும் ஆங்கிலத்துடன் முக்கியத்துவம் கொடுத்து கற்க வேண்டியது தமிழ் மொழியைத்தான். காரணம், வெயில், இலைகளைப் பசுமையாக்குவது போன்று, மண்ணின் ஆழங்களில் ஊடுருவும் வேர்கள் அதன் தாய்த்தடிகளையும் கிளைகளையும் வலுப்படுத்தும். கேரளாவில் வாழ்பவர்களின் தாய்மொழி மலையாளம் என்றாலும், மலையாளத்தின் தாய்மொழி தமிழ். அதில் ஒரு தற்காப்பு அரசியல் செயல்படுவதை நாம் உணரலாம்.

(பி.கு: இந்தக் கட்டுரையைப் பகிர்வதின் நோக்கம் தமிழர்கள் முக்கடலில் மூழ்கி முத்தெடுத்தவர்கள் என்பது போன்று வீண் பெருமை பேசும் நோக்கத்தில் அல்ல. மாறாக தாய்மொழிக் கல்வியின் சிறப்பை இதைவிட இயல்பாக இப்போதைய சூழலில் எளிமையாகப் புரியவைக்க முடியாது என்பதற்கே.

இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது மற்றொரு நிகழ்வு நினைவு வருகிறது. சோவியத் வீழ்ந்து முப்பது ஆண்டுகள் கடந்திருந்தாலும் சோவியத் நாட்டில் ரசிய மொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அச்சடிக்கப்பட்டு இங்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வழங்கப்பட்ட பழைய புத்தகங்கள் சில நேரம் மூத்த தோழர்கள் வீடுகளில் காணக் கிடைக்கும்.

அந்தப் புத்தகத்தைத் தொட்டுப் பார்த்து "முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ'' என்ற வரியை வாசிக்கும் போது ஏற்படும் உணர்வை வருணிக்க முடியாது.

வெறும் தமிழ் என்றில்லை.. சோவியத் கம்யூனிசுடுகள் உலகம் முழுவதும் அவரவர் தாய் மொழியிலேயே புத்தகத்தை மொழிபெயர்ப்பு செய்து அச்சடித்து ஏற்றுமதி செய்தார்கள். தாய் மொழிக் கல்வியின் தேவையையும் இன்றியமையாமையும் உணர்த்தும் முகமாக கம்யூனிச ஆசான்கள் பெரும் விவாதங்களையும், ஆய்வுகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.)

- உண்மையான கட்டுரை. முழுவதும் படியுங்கள் ! (ஒருசில சொற்கள் தவிரப் பிறவற்றைத்) - தூய தமிழில் தொகுக்கின்ற வாய்ப்பிற்கு நன்றி !

கொழுமம் ஆதி

நம் சாதனைகளும் சவால்களும்

முனைவர் ச.அய்யம்பிள்ளை,
மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி



கடந்த 75 ஆண்டுகளாக நாம் சாதித்துள்ளவை ஏராளம். நாம் சுதந்திரம் பெற்றபோது இருந்த நிலையிலிருந்து இன்று நாம் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். குறிப்பாக, பொருளாதாரத்தில், அறிவியல் தொழில்நுட்பத்தில், கட்டமைப்பு வசதிகளில், கல்வி அறிவில், உணவுப் பொருள்கள் உற்பத்தியில் என அடுக்கிக்கொண்டே போகலாம். அதுபோல, நம்மைச் சுற்றியுள்ள பல ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளைவிட நாம் எவ்வளவோ மேல் என்பதிலும் ஐயம் வேண்டியதில்லை.

ஆனாலும், இன்னும் நாம் சாதிக்க வேண்டியவையும் ஏராளம். பல சிறு நாடுகள்கூட நம்மைவிடப் பலமடங்கு சிறந்து விளங்குகின்றன என்பதும் உண்மையே. உலகளவிலான அமைப்புக்கள், நம்மை "மெல்ல மெல்ல வளர்ந்துவரும் நாடுகளின் பட்டியலில்"தான் இன்னும் வைத்திருக்கின்றன. நம் ஓர் ஆண்டுத் தலைவீத வருமானம் (3,000 USD) அமெரிக்காவை (90,000 USD) விட முப்பது மடங்கு குறைவாகவே உள்ளது. பல வட மாநிலங்களில் இது, இன்னும் குறைவே, வெறும் 1,000 USD தான். பல சிறு ஐரோப்பிய நாடுகளில் தலைவீத வருமானமும் அங்கு வாழ்வோரின் வாழ்க்கைத் தரமும், நம்மைவிட உயர்ந்துள்ளதாகவே தெரிவிக்கப்படுகிறது. நம் நாடு ஆமைபோல நடந்து வருகிறதென்றும், பிற நாடுகள் முயல்போலத் துள்ளி ஓடுகின்றன என்றும் கூறப்படுகிறது.

சில தெற்காசிய நாடுகள் வேகமாக வளர்ந்து சிங்கம் எனவும் புலி எனவும் போற்றப்பட்டு, சுமார் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கும் முன்பு, ஒரு சில நாட்களிலேயே பொருளாதாரச் சிக்கல்களில் மாட்டி, பூனைகளாக மாறிவிட்ட வரலாறையும் நாம் மறந்துவிடக் கூடாது. உலகையே ஆட்டிப் படைப்பேன் என்று சவால்விட்ட அமெரிக்கா, சுமார் இருபது ஆண்டுகளுக்கும் முன்பு விமானத் தாக்குதல்களால் அடங்கிப்போனதையும், பொருளாதார நெருக்கடிகளுக்குள் மாட்டிகொண்டதையும் மறந்துவிட முடியுமா? எனவே, நாம் ஒருபுறம் வளர்ந்து வந்தாலும், நம் அண்டை நாடுகளை நாம் அவமதித்துப் பேசுவதும், அவர்களை அடக்கிவைப்போம் என்று வீரம் பேசுவதும், சரியாகாது. சிறிய நாடுகள்கூடப் பெரிய நாடுகளைக் கதிகலங்க வைத்துள்ளதை வரலாறு படித்துள்ளவர்கள் அறிவார்கள். இன்றும் அது (பாலஸ்தீனம்-இஸ்ரேல்; உக்ரேய்ன்–ரஷ்யா) நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இன்று ஒரு வருத்தம் தரும் போக்கு நிலவுவதைக் காண முடிகிறது. அதைப் புரிந்துகொள்வதுதான் இக்கட்டுரையின் தலையாய நோக்கம். எந்தவித அடிப்படையும் இன்றி கண்ணை மூடிக்கொண்டு நம்மை, நம் செயல்களைப் பாராட்டுபவர்கள் தேசப்பற்று

உள்ளவர்களாகப் போற்றப் படுகிறார்கள். நாம் எங்கெல்லாம் பின்தங்கி இருக்கிறோம், இன்னும் என்னவெல்லாம் செய்யவேண்டியுள்ளது என்று சொல்பவர்கள் தேசப்பற்று இல்லாதவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். இந்த இரண்டு போக்குமே நல்லதல்ல என்பதை நாம் முதலில் உணரவேண்டும்.

உண்மையை அறிவது அவ்வளவு சுலபம் அல்ல என்பதை நாம் அனைவரும் அறிவோம். சரியான புள்ளிவிவரங்களைச் சரியான அளவில், சரியான நேரத்தில் சேகரிப்பதிலும், பயன்படுத்துவதிலும் சிரமங்கள் இல்லாமல் இல்லை. எடுத்துக்காட்டாக, நம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஐந்து ஆண்டுகளுக்கு (2021இல்) முன்பே முடிந்து இருக்க வேண்டும்; ஆனால், இன்னும்(2025வரை) முடியவில்லை. அத்தோடு, கிடைக்கிற அரை-குறைப் புள்ளிவிவரங்களையும் கொண்டு, வெவ்வேறு முடிவுகளைக் கொண்டுவரும் சாமார்த்தியசாலிகளும் இப்போது நிறையவே உள்ளனர். ஆளும் கட்சியினர் தம் செயல்களை, சாதனைகளென மெச்சிக்கொள்வதும், எதிர்கட்சியினர் குறை கூறுவதும் இயல்பாகிவிட்டது. இதனால், பொதுமக்களுக்கு, உண்மை தெரியாமலேயே போய்விடவும் வாய்ப்பு இருக்கிறது. அதைப் பற்றி அநேக மக்கள் கண்டுகொள்வதே இல்லை என்றும் சொல்லலாம். இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எனக்கொன்றும் கவலை இல்லை என்பாரே இன்று அதிகம்.

கடந்த 35 (1991முதல்) ஆண்டுகளாக, தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கைகளை அமுல்படுத்தியது முதலாக, நம் தேசிய உற்பத்தி வளர்ச்சிவீதம், முந்தைய ஆண்டுகளைவிட அதிகம் என்பதில் கருத்துவேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அந்த உயர்ந்த வளர்ச்சி வீதத்தினால், கிடைத்த அனுகூலங்களை, சிரமங்களைப் பற்றிப் பேசும்போது, பார்க்கின்ற பார்வையைப் பொறுத்து, பலவிதமான கருத்துகள் வருகின்றன.

தனியார்மயத்தினால் நன்மைகளும் உண்டு; சிரமங்களும் உண்டு. ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு சாராருக்கும் வெவ்வேறு விதமான அனுபவங்கள் கிடைத்து இருக்கும். தற்போது உள்ள உலக நடப்பில், நாம் தனியார்மயத்தில் இருந்து தப்பிக்க முடியாது. உலக நாடுகளின் தாக்குதல்களில் இருந்து விலகிவிட இயலாது. ஆனால், அதனால், விளையும் தீய விளைவுகளைக் கட்டுப்படுத்தப் போதுமான முயற்சிகளை அரசாங்கங்கள் எடுக்க வேண்டும்; எடுத்துள்ளன என்று கூறுவாரும் உண்டு; இல்லை என்பாரும் உண்டு. இவ்விரண்டு வகையான விவாதங்களுக்கும் எடுத்துக்காட்டுகள் கொடுக்க முடியும். அவற்றை எல்லாம் விளக்க இங்கு இடம் போதாது.

ஆனால், மறுக்கமுடியாத, அனைவராலும் ஒத்துக்கொள்ளக் கூடிய, சில உண்மைகளும் இருக்கின்றன. அவை: உணவுப் பொருள்களின் உற்பத்தியும், எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளன; சாலை, தொடர்வண்டி, விமானப் போக்குவரத்து சிறந்துள்ளது; செய்தித்தொடர்பின் வேகம் கூடியுள்ளது; தொழில்நுட்ப வசதிகள் நிறையவே வந்துள்ளன; இயந்திரங்கள் மனித உழைப்பைக் குறைத்துள்ளன. கல்விக்காகவும், பணம் சம்பாதிக்கவும் வீட்டைவிட்டு வெளியில் செல்லும் பெண்களின் எண்ணிக்கை கூடியுள்ளது; திருமணம் ஆகும் வயதுகூட உயர்ந்துள்ளது.

மறுபுறம், சுற்றுச் சூழல் மாசுபாடு மோசமாகியுள்ளது; நெகிழிகளின் பயன்பாடு தவிர்க்கமுடியாததாக ஆகிவிட்டது; தண்ணீரின் தரம் குறைந்துள்ளது, இயற்கை வளங்கள் சீரழிந்துள்ளன. நகர்ப்புறங்கள் வீங்கியுள்ளன; போக்குவரத்து நெரிசல்கள் அதிகரித்துள்ளன;

கிராமப் பொருளாதாரம் நசிந்துள்ளது; விவசாயம் சுருங்கிவருகிறது; விவசாயிகளின் வேதனை மிகுந்துள்ளது; விலைவாசி அதிகரித்துள்ளது; உலகச் சந்தையில் பணத்தின் மதிப்பு குறைந்து வருகிறது; அரசின் கடன் சுமை அதிகரித்துள்ளது; அரசு-வங்கிகளுக்கு வாராக் கடன்கள் பெருகியுள்ளன; விபத்துக்களும் மன(ண)முறிவுகளும், ஏமாற்று வேலைகளும் மலிந்துவிட்டன. பெண் கருக்கொலை, சிசுக்கொலை குறையவில்லை.

உலகில், தேசிய உற்பத்தியில் மூன்றாவது நாடாக நாம் முன்னேறியுள்ளோம். ஆனால், வறுமை, யாசகம், பட்டினி, நிலமின்மை, வீடின்மை, வேலையின்மை, குறைவான தலைவீத வருமானம் போன்றவற்றில் இருந்து நாம் மீள முடியாமல் உள்ளோம். இதுபோன்ற, எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரே காரணம் மக்கள்தொகை வீக்கம்தான் என்று சொல்லபடுகிறது.

நம் நாட்டில் மக்கள் நெருக்கம் (ஒரு சதுர கிலோமீட்டரில் வாழும் மக்களின் எண்ணிக்கை), உலகில் உள்ள மொத்த மக்கள் நெருக்கத்தைவிட சற்று அதிகம்தான். ஆனால், அதைவிட அதிகமாக உள்ள பல நாடுகள் (எடுத்துக்காட்டாக, சிங்கபூர், ஜப்பான்) சிறந்து விளங்குகின்றன. அதைவிட மிகக் குறைவாக உள்ள, பல ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகள், நம்மைவிட மோசமாகவும் உள்ளன. எனவே, மக்கள்தொகையை மட்டுமே காரணமாகக் கூறுவது சரியல்ல. வளர்ந்துவரும் மனித வளத்தைச் சரியாகப் பயன்படுத்த, சரியான உத்திகள் அவசியம். அதற்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. இது தேசப்பற்று உள்ளவர்களின் கவலையாக இருக்கிறது.

பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது, சரியாக வளர்ப்பது எவ்வளவு சிரமம் என்பது பெற்றவர்களுக்குத்தான் தெரியும். அப்படிப்பட்ட வளத்தை, சரியாகப் பயன்படுத்தாமல், குறை கூறுவது எவ்விதத்தில் நியாயம்? இன்று, பல செல்வம் செழிக்கும் நாடுகளில் குழந்தைப் பிறப்பு வெகுவாகக் குறைந்து, அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள, அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய, வெளிநாட்டினரை நம்ப வேண்டிய சூழல் வந்துவிட்டது. பல வெளிநாட்டு வியாபாரிகள், பல்கலைக்கழகங்கள் இந்தியாவை நோக்கி படையெடுப்பது, வளர்ந்துவரும் நம் சந்தையைப் பயன்படுத்திக்கொள்ளத்தான்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த பல முயற்சிகள் செய்தோம். அதன் விளைவாக, இன்று நம் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் குறைந்துவிட்டது. இருப்பினும், சீனாவின் மக்கள்தொகையைவிட அதிகம் வளர்ந்துவிட்டோம். சீனாவில் குடும்பக் கட்டுப்பட்டுத் திட்டம் 1970இல் தொடங்கியது. அந்தக் காலத்தில், அரசின் அனுமதியின்றி கரு உருவாவதைத் தடுக்கவும், அப்படி உருவானால் அதைப் பிடுங்கி வீசவும் சீன அரசால் இயன்றது. ஆனால், சமீபத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ, இனிமேல் தம்பதிகள் மூன்று பிள்ளைகள் பெற்றுக்கொள்ளலாம் என்று அனுமதி நல்கி உள்ளது. ஆனால், அதே அதிகாரத்தின் கரங்களால், இன்று நினைத்த மாத்திரத்தில் இரண்டாவது, மூன்றாவது பிள்ளைப்பேற்றை உருவாக்க முடியவில்லை (மு.இராமநாதன், கிழக்கும் மேற்கும், காலச்சுவடு பதிப்பகம், 2024, பக்கம் 97). இதை இந்திய அரசு அறியவேண்டும்.

எனவே, உண்மையான சவால்களையும், அவற்றிக்கான உண்மையான காரணங்களையும் அறிய மக்களுக்காக உழைப்பதாகச் சொல்லிக்கொள்(ல்)வோர்கள் முயற்சிக்க வேண்டும். அதை விட்டு விட்டு, வெறுமனே சவடால் (பகட்டு) பேசுவது பிரயோசனமாக இருக்காது என்பதையும் தேசப்பற்று உள்ளவர்களாகக் கூறிக்கொள்பவர்கள் அறியவேண்டும்.

தமிழ்நாடும் தாய்லாந்தும்

ஒரிசா பாலு
கடல்சார் ஆய்வாளர், சென்னை.

உலகம் முழுவதும் தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடல் வழியாக வணிகம் செய்ததற்கான உலகின் மேற்க்கையும் கிழக்கையும் இணைத்ததற்காக அடையாளங்கள் ஏராளமான உள்ளன. இதில், வங்காள விரிகுடா, அந்தமான் கடல் பகுதியின் வழியே, நீரோட்டங்களில் வலசை செல்லும் கடல் ஆமைகளின் வழிகாட்டுதல்படி, வடகிழக்கு பகுதிகளில் வணிகம் செய்துள்ளனர். அதாவது, தமிழ்நாட்டில் இருந்து வங்கதேசம், பர்மா, மலேசியா, கம்போடியா, லாவோஸ், வியட்னாம் மலாயா சுமத்ரா வழியாக தாய்லாந்தில் கடந்த 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வணிகம் செய்துள்ளனர். இதன் காரணமாகவே தாய்லாந்து, தமிழ்நாடு மக்கள் இடையிலான மொழி, மரபு, பண்பாடு, உறவு போன்றவை பெரும்பாலும் ஒரே மாதிரியாக உள்ளது. அதாவது, சயாம் என்று அழைக்கப்பட்ட தாய்லாந்து தங்கம் வணிகத்தில் சிறந்து விளங்கியதால் தமிழர்கள் அதனை சொர்ணபூமி என்று அழைத்தனர்.தமிழ்நாட்டில் பசும்பொன் என்று அழைக்கப்பட்ட உலோகம் தாய்லாந்தில் இருந்து அதிகம் இறக்குமதி செய்யப்பட்டதால், அந்நாட்டின் சொல்லான தங்கம் தமிழ்நாட்டுக்கு பழக்கப்பட்டது. தாய்லாந்தில் புழக்கத்தில் இருக்கும் தாய் (thai)என்ற மொழி கெமர் மற்றும் பல்லவ கிரந்தம் மொழியை அடிப்படையாக கொண்டு கட்டமைக்கப்பட்டது. இதில், பல்லவ கிரந்தம் என்பது தமிழ்நாட்டில் பல்லவர்களை குறிப்பிட்டு, தமிழ் மொழியை குறிப்பது. இதில், சமஸ்கிருதம் கலப்பு மொழியாக உள்ளது. தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தை சேர்ந்த 18ம் நூற்றாண்டு காலக்கட்டத்தின் குருக்கள் வம்சாவளிகள் தாய்லாந்தில் ‘வாமன முனி’ என்ற பெயரில் அரச குருக்களாக தொடர்ந்து உள்ளனர். அதனுடன், தமிழ்நாட்டில் ராமேஸ்வரத்தை பூர்விகமாக கொண்ட புரோகிதர்கள், தாய்லாந்தில் 25 தலைமுறைகளாக (ஒரு தலைமுறை என்பது 35 வருடங்கள்) புரோகிதம் செய்து வருகின்றனர். தாய்லாந்தில் தமிழர் தொன்மம் ஏராளம் என்பதை நிரூபிக்கும் வகையில் அந்நாட்டின் தக்கோபா என்ற இடத்தில் பெரும் பதங்கல், பானை ஓடு போன்றவை கிடைத்துள்ளது. 2 ஆயிரம் ஆண்டுகள் முந்தைய இத்தொன்மங்களில் தமிழ் எழுத்துக்கள் அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமாக தாய்லாந்து, கம்போடியா இடையே உள்ள பிரம்மம், புரிராம் என்ற எல்லைக்கோட்டு பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் இருந்ததற்கான அடையாளங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்து மக்கள், தமிழர்கள் இடையில் அதிகப்படியான பழக்க வழக்கம் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பில் இருந்தே இருந்ததன் காரணமாக இசை, நடனம், திருவிழா போன்றவை ஒரே மாதிரியாக உள்ளன. அதாவது, தமிழ்நாட்டின் சங்க காலத்தில் உருவான பொம்மலாட்டம், தோல் பாவைக் கூத்து போன்றவை தாய்லாந்தில் குழு நடனமாக உள்ளது. அதுபோல், தமிழர்களின் பாரம்பரிய நடனமான சதிராட்டம், வீரக் கலையான சிலம்பம், மல்யுத்தம் போன்றவை தாய்லாந்தில் இன்றளவும் அந்நாட்டு மக்கள் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த மனுநீதி சோழன் காலத்தில் நடைமுறையில் இருந்த 'நீதி மணி' முறை இன்றளவும், தாய்லாந்தில் 'ஆராய்ச்சி மணி' என்ற பெயரில் உள்ளது.



ஒரிசா பாலு ஐயாவுக்கு இதழாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி தமிழணங்கு இதழ் வழங்கியது. உடனிருப்போர் முனைவர் மு. முத்துவேலு மற்றும் அகில் ரிஷி ராஜசேகரன்

தாய்லாந்து நாட்டு அரசனை ராஜேந்திர சோழன் போரிட்டு வென்றதன் காரணமாகவே 'கடாரம் கொண்ட விஜயர்' என ராஜேந்திர சோழன் அழைக்கப்பட்டார். அதனை விளக்கும் வகையில் ஓவியமும் தாய்லாந்தில் உள்ளது. தாய்லாந்தில் தென் திசையில் எமன் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளதன் காரணமாகவே தமிழர்கள் தென்திசை வேந்தன் என எமதர்மன் அழைக்கின்றனர். தமிழர்கள் திருமண நாள் குறிக்கும் முறையை தாய்லாந்து மக்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். தமிழர்கள் வணிகத்தின் போது ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால் கடல் தெய்வமாக மணிமேகலையை வணங்குவர். அதுபோல், தாய்லாந்தில் மணிமேகலை பெயரை கடல் தாய் என அழைத்து வழிபடுகின்றனர்.

மேலும், தமிழ்நாட்டின் அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் தாய்லாந்தில் ஊஞ்சல் திருவிழா நடைபெற்று வருகிறது. சிலோம் என்ற இடத்தில் 180 ஆண்டுகால

மாரியம்மன் கோயில் உள்ளது. முக்கியமாக தாய்லாந்து மக்கள் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் திருவெண்பாவை தமிழிலேயே படிக்கின்றனர். தாய்லாந்து நாட்டில் புழக்கத்தில் இருக்கும் பல வார்த்தைகள் நேரடியாக தமிழ் வார்த்தைகளை கொண்டுள்ளது. அதாவது, பட்டினம் என்பது பட்டோ என்றும், நகரம் என்பது நகர என்றும், வேலை என்பது வேலா என்றும் மாங்காய் என்பதை மாங்கு என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாட்டின் 2 ஆயிரம் ஆண்டுக்கு முந்தைய பாரம்பரிய அடையாளங்களான சேவல் சண்டை, காளைச் சண்டை, புறாத் தூது போன்றவை தாய்லாந்தில் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. தமிழ்நாட்டில் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் ஆமைகள் இனப்பெருக்கம் செய்யும் இடம் உள்ளது. அதுபோல், தாய்லாந்தில் ஆமைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக மண்ணை என்ற இடம் தமிழ் பெயரில் இன்றளவும் உள்ளது. இதுபோன்ற எண்ணற்ற தமிழர் அடையாளங்கள் தாய்லாந்தில் கொட்டிக்கிடக்கின்றன. தமிழர்கள் வணிகத்திற்கான கடல் பயணத்தை பல்வேறு குழுக்கள் மூலம் வகைப்படுத்தி கடல் பயணம் மேற்கொண்டனர். இதில், ஐந்து வண்ணங்கள் கொண்டவர்கள் மூலம் பயணம் மேற்கொள்ளும் ஐந்துவர்ணத்தார், 500 பேர்களை கொண்ட குழு ஐநூற்றுவர், 300 பேர்களை கொண்ட குழு முன்னூற்றுவர், கடலில் வணிகம் செய்து வலது பக்கம் வழியாக மீண்டும் திரும்பி அதே இடத்திற்கு வரும் வலஞ்சியர், 18 நாடுகளை சுற்றி வரும் பதினென் விசையறிந்தார் போன்ற சிறப்பு வாய்ந்த குழுக்கள் மூலம் தமிழர்கள் கடல் வணிகம் செய்தனர். தாய்லாந்தில் உள்ள மக்கள் தமிழர்களை பார்க்கும் போது பர்மா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளை சேர்ந்தவர்கள் போன்று பேசுகிறீர்கள் என கேட்கிறார்கள். ஆனால், அவர்கள் பேசும் மொழி தமிழ் என்றும், அவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்றும் அந்நாட்டு மக்கள் அறிவதில்லை. ஏனெனில், தமிழர்கள் முதலில் பர்மா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு சென்று அங்கிருந்து தாய்லாந்துக்கு சென்றதாலே அவர்கள் அவ்வாறு நினைக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு தமிழ்மொழி தமிழர்களுடையது என புரிய வைக்க வேண்டும். தாய்லாந்தில் 93 சதவிகிதம் மக்கள் தமிழ் பவுத்தம் வழிபாட்டை அடிப்படையாக கொண்டவர்கள். அதனால், தமிழ் நாட்டில் பவுத்த கோயிலை நிறுவி, தாய்லாந்து மற்றும் தென்கிழக்கு ஆசிய மக்கள் தமிழகத்திற்கு வருகை புரிவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். தாய்லாந்தில் தமிழர் தொன்மம் குறித்து தொடர்ஆய்வு மேற்கொள்ள சிலப்கோரன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக்க வேண்டும். அதனை தொடர்ந்து, தாய்லாந்தில் 5 ஆயிரம் தமிழர்களை கொண்டு இயங்கும் தாய்லாந்து தமிழ்ச் சங்கம் மூலம் தமிழ் இயல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். திருக்குறள் மற்றும் சங்க இலங்கியங்களை தாய்லாந்து மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என்றார். மேலும், தாய்லாந்தில் எண்ணெற்ற தமிழர் தொன்மங்கள் வெளிக்கொண்டு வருவதன் மூலம் தமிழரின் பெருமையை உலகமே அறிய வைக்க முடியும் என்றார். கடந்த 3 வருடமாக பலமுறை தாய்லாந்து சென்று வரும் ஒரிசா பாலு மறுடியும் வரும்ஆகஸ்டு 16 முதல் 28 வரை தாய்லாந்து பாங்காங் நகருக்கு சென்று அங்கிருந்து பல ஊர்களுக்கு செல்ல இருக்கிறார். தாய்லாந்து தமிழ் மக்கள் தொடர்பில் வரலாம்

ஐந்தில் அளவு முறையோடு வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி,
சென்னை.

வாழ்க்கைப் பயணத்திற்கான வாகனமாகத் திகழும், இந்த உடலைக் காக்கும் வழிகளை ஆராய்ந்தனர், முன்னோர். உடலையும், உள்ளத்தையும் காக்கும் முறைகளை வகைப்படுத்தினர்.

ஐந்தில் அளவுமுறை:

உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் இவ்வைந்தில் அளவோடும், முறையோடும் இருத்தல் உடல்நலம் காக்கும் வழியாகும்.

அளவு என்பது, இவற்றில் ஒன்றைக்வட தடை செய்வதோ, அதிகமாகத் துய்ப்பதோ, குறைவாகக் கொள்வதோ கூடாது.

முறை என்பது, இயற்கைக்கு முரண்படாது ஒத்த முறையில் துய்ப்பதாகும்.

1. உணவு

அந்தந்த நாட்டின் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்றவாறு விளையும், நல்ல சத்தான உணவையே தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

பழங்கள், காய்கறிகள், கீரைகள், கொட்டைகள் அனைத்து ஊட்டச்சத்துகள் நிறைந்த அளவான சமச்சீர் உணவாக இருப்பது நலம் பயக்கும்.

இன்றைய நாட்களில் இரசாயன உரங்கள் இரசாயன கலப்பு உணவுகளால் நோய்கள் தாக்குகின்றன எனவே அவற்றைத் தவிர்த்தல் முதன்மையானது.

உணவே மருந்து:

‘உணவுமுறை தவறாக இருக்கும்போது மருந்தினால் எந்தப் பயனும் இல்லை.

உணவு முறை சரியாக இருக்கும்போது மருந்தே தேவையில்லை’என்பது ஆயுர்வேதப் பழமொழி.செரிமானம் ஆகக்கூடிய உணவை உண்பதும், உண்ட உணவு செரித்தவுடன் அடுத்தவேளை உணவைக் கொள்வதும் நோய் வராது காக்கும்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்' திரு. 942

என்பார் திருவள்ளுவர்.

'பசித்துப் புசி' என்பது பழமொழி.

'தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்தபின் உணவும்
நோயை ஓட்டிவிடும் அப்பா
நூறு வயதும் தரும் அப்பா'

என்பார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

சத்தான அளவான உணவை உடல் சீரணிக்கும் சத்தில்லாத அளவற்ற உணவு, உடலை சீரணிக்கும்.

'இயற்கை வைத்தியமாவது, இயற்கையோடு இயைந்து வாழ்வது. ஒளியாரும், காற்றாரும், நீராரும், மண்ணாரும், கனியாரும், கீரையாரும் இயற்கை வைத்தியராவர். மலச்சிக்கலுக்கு நோன்பாரும் சிறந்த வைத்தியர். நோன்பினால் போகாத நோயில்லை' என்பார் திரு.வி.க.

'உண்டி சுருகுதல் பெண்டிர்க் கழகு'

என்பார் ஔவையார்.

உணவால் முக்குணங்கள் உண்டாகின்றன.

1. ரஜோ குணம்

புலால் உணவுகள், அதிக காரம், மசாலை, அதிகப்புளிப்பு, துரித உணவுகள், அதிக இனிப்பு வகைகள் முதலானவை தூக்கமின்மை, அமைதியின்மை, அதிவேகத் தன்மை, கோபம் போன்றவற்றுக்கு காரணமாகிறது.

2. தாமச குணம்

கெட்டுப்போனது கிழங்கு வகைகள், மந்தத் தன்மை தரும் பழங்கள், உணவு வகைகள் முதலியன உணர்ச்சிவசப்பட்ட செயல்கள் தீய எண்ணங்கள் போன்றவற்றுக்கு காரணமாகிறது.

3. சாத்விக குணம்

இயற்கை உணவு, தானியங்கள், பழங்கள், காய்கறிகள், எளிதில் செரிக்கக்கூடிய உணவுகள், உயிர்ச்சக்தி அதிகரிக்கச் செய்யும். வலிமை, பொறுமை, அமைதிக்குக் காரணமாகிறது.

2. உழைப்பு

உழைப்பே உயர்வு தரும். கடின உழைப்பும், விடா முயற்சியும் வெற்றிக்கான வழியாகும். சமுதாய முன்னேற்றத்துக்கும் காரணமாகிறது.

‘வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்’

என்பார் கவிஞர் தாரா பாரதி

‘கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்’
ஆளும் அரசன் ஆனாலும்
ஆகும் வேலை செய்வானேல்
நாளும் நாளும் பண்டிதர்கை
நாடி பார்க்க வேண்டாமே!

உடல் உழைப்பு, நோய் வராது காக்கும் வழியென, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் உரைத்தல் காணலாம்.

‘உழைக்காதவன் உண்ணலாகாது,’ ‘உழைப்பாளி அவமானப்படத் தேவையில்லை’ என்பது பைபிள் வாசகம்.

‘சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்’ என்பார் ஔவையார்.

உழைப்பு வளமான வாழ்வுக்கு முதலாவதாகும்.

‘ஊக்கம், எச்சரிக்கை, உழைப்பு, தீவிரம் நான்கும் சேர்ந்த வலிமையான தூணுக்குப் புயலையும் சமாளிக்கும் உறுதி தரும்.’

‘ஒரு மனிதன் தனக்காக உழைக்க வேண்டும். அல்லது சமுதாயத்திற்காகப் பாடுபட வேண்டும். அவன் ஒரு முடவனாகவோ, இயலாதவனாகவோ, பொறுப்பற்றவனாகவோ இல்லாதவரை, தனக்கு வேண்டியவற்றைப் பிறரிடமிருந்து எதிர்பார்ப்பதற்கும், தான் பெற்றதற்குப் பிரதியாக ஏதாவது திருப்பிக் கொடாதிருப்பதற்கும் வெட்கப்படவேண்டும்’ என்பார். வளவாழ்வுக்கு வழி கூறிய மேனாட்டறிஞர் ஜேம்ஸ் அல்லன்.

‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’
உழைப்பில்லா உடம்பு தொப்பையிலே’

என்றபடி உடலும், தோற்றமும் கெட்டுப் போகிறது.

உழைப்பின்மையால் தான் நாளமில்லா சுரப்பிகள் சரியாக இயங்காமல், நீரிழிவு, இரத்த அழுத்தம், தைராய்டு முதலான நோய்கள் உண்டாகக் காரணமாகிறது.

இக்காலத்தில் உழைப்பு மிகவும் குறைந்துவிட்டதால், எளிய முறை உடற்பயிற்சிகளை சிந்தனையாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

பொருள், புகழ் கவர்ச்சியால், ஆசை வயப்பட்டு ஓய்வின்றி உழைப்பதாலும் உடல்நலம் கெடும். அளவான உழைப்பும், திட்டமிட்ட செயலும் உடல் நலம் காக்கம்.

3. உறக்கம்

உயிராற்றலின் செலவால், உடலுக்குக் களைப்பும், மனச் சோர்வும் உண்டாகிறது. அதனைப் போக்க ஓய்வு தேவையாகிறது. உறக்கத்தின் போது, உள் உறுப்புகள் பழுது பார்க்கப்படுவதும், கழிவுகள் பிரிக்கப்படுவதுமான செயல் நடைபெற்று, உடலுக்குத் தேவையான ஆற்றலை அளிக்கிறது.

ஒரு நாளுக்கு ஏழு மணி நேர ஆழ்ந்த தூக்கம் தேவை என்கிறது ஆராய்ச்சிகள்.

பிறந்த குழந்தைகள் - 14 - 17 மணிநேரம்

4 - 11 மாத குழந்தைகள் - 12 - 15 மணி நேரம்

1 - 2 வயது குழந்தைகள் - 11 - 14 மணி நேரம்

3 - 5 வயது குழந்தைகள் - 10 - 13 மணி நேரம்

6 - 13 வயது குழந்தைகள் - 9 - 11 மணி நேரம்

14 - 17 வயதினர் - 8 - 10 மணி நேரம்

18 - 64 வயதினர் - 7 - 9 மணிநேரம்

64 வயதுக்கு மேற்பட்டோர் - 7 - 8 மணிநேரம்

உறக்கம் தேவை என்றும், இரவு பத்து மணிக்குள், உறங்கச் செல்ல வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றனர்.

நல்ல சாதனையாளர்கள், ஒரு நாளைக்கு எட்டரை (8 ½) மணிநேரம் உறங்குகின்றனர். என்பதை அமெரிக்காவில், (20,000) இருபதாயிரம் பேரிடம் ஆராய்ச்சி செய்து தெரிவித்துள்ளனர்.

தூக்கம் குறைந்தால், மனக் குழப்பம், ஞாபக மறதி, முடிவெடுக்க முடியாமை, அஜீரணம், மாரடைப்பு, நீரிழிவு முதலான நோய்கள் வருவதாக அறிவிக்கின்றனர்.

இரவில் அதிகநேரம் கண் விழித்துப் பகலில் உறங்குவதும், இயற்கைக்கு முரண்பாடானதாகும். எனவே உறக்கத்திலும் அளவுமுறை காக்கப்பட வேண்டும்.

2008 இல், மார்ச் மாதம் 17ஆம் நாள் உலக தூக்க தினமாக அறிவிக்கப்பட்டது.

4. உடலுறவு

மூல ஆதார சத்தான விந்து நாதத்தை, அளவோடு செலவிடல் வேண்டும் உடல் நலத்துக்கும், மூளை வளத்துக்கும் காரணமான வித்து சக்தியின் மேன்மையை உணர்ந்து, அளவு மீறாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

உயிர் சத்து, அதிகம் செலவானால் உடல் நலத்தையும் அறிவையும் குறைத்துவிடும்.

'ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு' (நல்வழி –25)

என்றுரைக்கிறார் ஔவையார்.

இயற்கையான மற்ற கழிவுகளைப் போலவே சுக்கிலமும் ஒரு கழிவு. இருக்கிற இருப்பில் குறைந்துவிடாமல் காத்துக்கொள்ள வேண்டும்.

அதிகமான உடல் உறவால், கண் எரிச்சல், உடல் சோர்வு, மலச்சிக்கல் முதலான நோய்கள் அறிகுறிகளாகும்.

எனவே, அருள்துறைகளையும், விரத தினங்களையும், காயகல்ப பயிற்சி முறைகளையும் முன்னோர் வகுத்தனர்.

5. எண்ணம்

எண்ணம் போல் வாழ்வு அமைகிறது, என்பதால் எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்தின் உயர்வை ஒட்டியே மனதின் தரமும் உயர்வும் அமைகின்றன. மனத்தின் தரத்திற்கேற்ப தனிமனிதன் உயர்வும் அமைகிறது.

'அவரவர் வாழ்க்கையின் சிற்பி அவரவர் எண்ணங்களே' என்பார் வேதாத்திரி மகரிசி.

'எது விதையோ அது அதற்கேற்ப பலனைத் தருகிறது. ஆணவம் விதையானால் சரிவு அதன் பலன். அன்பு விதையானால் இன்பம் அதன் பலன். நல்லெண்ணம் விதையானால் நன்மை அதன் பலன்.'

'வயது தாண்டியவர்களை எல்லாம் அவர்கள் லட்சியமே நெடுநாள் வாழ வைத்திருக்கிறது. செய்ய வேண்டிய காரியங்கள் மீதுள்ள லட்சியம், ஆசை இவையே வாழ்வை நீடிக்கிறது. நாம் நமக்காக மட்டும் வாழாமல், பிறருக்காக, நம் குழந்தைகளுக்காக, கணவனுக்காக, மனைவிக்காக பெற்றோருக்காக, ஊர் உலகத்திற்காக என்று வாழத் துடிக்கும் போது, மனிதனின் வாழ்நாள் அதிகப்படுகிறது. மனிதனும் சிரஞ்சீவி ஆகிறான்' எனவும்,

'வன்முறைகளைத் தூண்டும் கொலை, களவு, கற்பழிப்பு போன்ற நிகழ்ச்சிகளை சினிமாவாகவோ, கதை நாவல்களின் மூலம் மனக் கற்பனையிலோ, பார்க்கும் மக்களின்

உணர்வுகள் பாதிக்கப்படுகின்றன. நாளடைவில் இதையொட்டியே அவர்கள் வாழ்வு இயங்குகிறது.'

என நல்ல எண்ணங்கள், நேர்மறை எண்ணங்களின் மேன்மையை விளக்கியுரைக்கிறார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி.

'மனிதன் வாழும் காலத்தே உணவு, உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் என்ற ஐந்தையும் அளவோடும் (Limit) முறையோடும் (Method) அனுபவித்தால் துன்பமே வராது' என்பார் வேதாத்திரி மகரிசி.

ஐம்புலனடக்கம்:

நமது உடலில் அறிவுக் கருவிகள் ஐந்தும், தொழிற் கருவிகள் ஐந்தும் இயங்க உயிராற்றலே அடிப்படையாக உள்ளது.

அறிவுக் கருவிள் (ஞானேந்திரியக்ள்)

1. தோல் - தொடு உணர்வு

2. நாக்கு - சுவை உணர்வு

3. மூக்கு - மணம்

4. கண்கள் - ஒளி

5. காதுகள் - ஒலி

தொழிற் கருவிகள் (கர்மேந்திரியங்கள்)

1. கைகள், 2. கால்கள், 3. வாய், 4. குதம், 5. பால்குறி

இவற்றில் அறிவுக் கருவிகளான ஐம்பொறிகளையும், அளவோடு பயன்படுத்துவதன் மூலம் உயிராற்றல் சேமிக்கப்படும்.

ஒரு பிறப்பில் ஆமை மேல் ஐந்து பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்புடையது என்பார் திருவள்ளுவர்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (திரு. 126)

அறிவுக் கருவிகளின் மேன்மையை உணர்ந்து அளவாகத் துய்க்க வேண்டியதின் தேவையும், அதன் பயனையும் தெரிவிக்கிறார் திருமூலர்.

'பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே'
(திருமந்திரம் – 2883)

புலன் மயக்கம்:

அரச குமாரனாகிய நீ, ஐம்பொறிகளாகிய வேடரிடத்தில் அகப்பட்டு அங்கேயே வளர்ந்து வந்ததனால் உன்னுடைய பெருமைகளை அறியாமல் மயங்கித் துன்பத்திற்கு ஆளானாய். உன்னுடைய பெருமைகள் இத்தகையன என குரு வடிவில் வந்து இறைவன் உணர்த்துவான். உயிர், உண்மையை உணர்ந்தால் துன்பம் நீங்கும்.

‘ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே’
(சிவஞான போதம் – 8

என்றுரைப்பார் மெய்கண்ட தேவர்.

உலகை அறிந்தவன்:

மனிதன் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்ற ஐந்தின் தன்மையறிந்துக் கொண்டால், அறிவின் சரித்திரம் அறிந்து கொள்வான். அவன்தான் உலகை உணர்ந்து நலம் கண்டு சிறப்போடு வாழ்வான்.

‘சுவைஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு’ (திரு. 27)

‘ஐம்பொறிகள் மூலம், பொருள் தொடர்பு கொண்டு இன்பம் அனுபவிக்கும்போது, அந்த இன்பம் பொருட்களிலிருந்து கிடைக்கிறது என்று கருதுவது மயக்கம். புறப்பொருள் தொடர்பு உடலிலுள்ள சீவ காந்த ஆற்றலை (உயிராற்றலை) உரிய உடல் கருவி மூலம் செலவாக, ஊக்கி விட்டதே தவிர, இன்பமோ, துன்பமோ, பிற பொருட்களிலிருந்து வருவது இல்லை. நமது சிவகாந்த ஆற்றல் மாற்றம் தான், இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற உணர்வுகளாக அதன் ஏற்றத்தாழ்வுகளாக அமைகின்றன என்று விளங்கிக் கொண்டால், அதன் செலவை நமது திட்டமிட்ட அறிவின் மூலம் முறைப்படுத்தி அளவு படுத்தி நமக்கு வேண்டிய இனிமை உணர்வைப் பெறலாம், காக்கலாம்’ என்று இக்குறளுக்கு விளக்கமளிக்கிறார் வேதாத்திரி மகரிசி.

உடலும் உயிரும் சமுதாயச் சொத்து:

தன்னைப் பாதுகாத்துக் கொள்வது என்பது தன்னலம் ஆகாது. ஒவ்வொருவரும் தன் உடலையும், அறிவையும் வளப்படுத்திக் கொளவ்து, சமுதாயத்துக்கு நலம் பயப்பதாகும். சமுதாய முன்னேற்றம், உலக அமைதிக்கு வழி வகுக்கும்.

மனித வாழ்வு அமைதியும், நிறைவும் பெறுவதற்கான வழிகளை பின்பற்றி வாழ்வோம்.

ஐந்தில் அளவுமுறையோடு வாழ்க!

எளிய முறையில் யாப்பறிவோம்.

நெருப்பலையார். இராம இளங்கோவன்,
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம்:34.வெண்டாழிசை.

தாழிசையில் வெண்டாழிசை, ஆசிரியத் தாழிசை, குறட்டாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை போன்ற பாவினங்கள் உண்டு. இவற்றில் சிந்தியல் வெண்பாவில் வெண்டளையுடன் வேறு தளையும் வருவதால் இது வெண்டாழிசை ஆயிற்று. முதலில் வெண்டளையுடன் ஆறு சீர்கள் வந்து, பின்னர் கலித்தளைப் பயின்று வந்த வெண்டாழிசைப் பாடலாகும்.

முதல் இரண்டடியும் நான்கு சீர்கள் கொண்ட அளவடிகளாக அளவொத்து வரும். மூன்றாமடி வெண்பா ஈற்றடியில் வருவது போல் முச்சீர் கொண்ட சிந்தடியாக வரும். பாடல் முடியும் போது ஈற்றுச் சீர், நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டின் அடிப்படையில் ஏதாவது ஒன்றில் முடிய வேண்டும். மொத்தம் ஒரு பாடல் மூன்றடிப் பாடலாக அமையும். முதலில் ஒன்றரை அடியில் ஆறு சீர்கள் வெண்டளைப் பார்த்தும், மீதி ஒன்றரை அடியில் ஐந்து சீர்கள் தளைப் பார்க்காமல் வேற்றுத் தளை வருமாறும் எழுதுதல் வேண்டும். அதாவது , முற்பாதித் தளைப் பார்த்தும், பிற்பாதித் தளைப் பார்க்காமலும் எழுதுதல் வேண்டும்.

மூன்றடிக்கும் ஓர் எதுகைப் பெற்று வரும். அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும். முதலில் வெண்டளை வந்து பின்னர் வேறு தளை வரும் பாடலுக்கு எடுத்துக் காட்டுப் பாடல்களைக் கீழே காண்போம்!

வெண்டாழிசை எடுத்துக் காட்டுப் பாடல்கள் மூன்று கீழே: *(முதலில் வெண்டளை வந்து பின்னர் வேறு தளை வரும்)*

"கார்முகில் வேர்த்தால் கனியும் மழையாக;
நீர்வேர்த்தே வந்து நெல்விளைய உதவிடும்;
சீர்வேர்க்க மாரிவேர்க்கச் சிறப்பு". (1)

“நாக்குமே வேர்த்திட நம்முயிர்க் காகவே
காக்கும் உமிழ்நீரும் கனிந்து வேர்க்கும்;
தாக்காது நோயுடலைத் தனித்து”.   (2)

“பணமது வேர்த்தாலே பாங்காய்
வளந்தான்;
குணமது வேர்த்திடக் குமுகாயம் உயர்ந்திடும்;
மணந்திடுவோம் நெஞ்சத்தால் மகிழ்ந்து”.(3)
(நெருப்பலையார்)

இதே வெண்டாழிசையில் முதலில் வெண்டளையும் வேற்றுத் தளையும் வந்தது போல, அடுத்து வரும் பாடலில், பாடல் முழுக்க ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசைப் பாடலைக் கீழே எடுத்துக் காட்டுப் பாடல்களுடன் காண்போம்.

ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசை எடுத்துக் காட்டுப் பாடல்கள் கீழே:

“மண்மேல் நிற்கா மரவிதை எருவாய்
மண்ணுள் போகும் மக்கி என்று,
எண்ணியே வீரியம் ஏற்று”.   (1)

“எரியாத் தீயின் ஈரக் குச்சிப்
பெரிய மாற்றம் பெருமையாய்க் கொள்ளா
எரியாத தீக்குச்சி எதற்கு?”.   (2)

“மயிலென ஆடினால் வான்கோழி அஃதும்
மயிலாய் ஆகும்? மழையும் பொழியா
வெயிலே நிலைத்திடும் நிலம்”. (3)
(நெருப்பலையார்)

தொடர்ந்து பாடல் முழுக்கக் கலித்தளையால் வந்த வெண்டாழிசைப் பாடல்களைக் கீழே காண்போம்.

கலித்தளையால் வந்த வெண்டாழிசைப் பாடல்களின் எடுத்துக் காட்டுப் பாடல்கள் கீழே:

“அறமுடன் அடக்கமும் அருங்குணம் பண்பாடும்
நிறமற்ற மனத்துடன் நிலைத்திடும் புகமுடன்
குறுகாமல் உயிர்ப்பதே குணம்.”. (1)

“உதடுகளைக் கிழிக்காத உதிர்க்கின்ற உயர்சொற்கள்,
மதகுகளை உடைக்காத மாவெள்ளம் வேண்டுமென்றும்;
புதுமையில் பழமையைப் புதுக்கு.” (2)

“குழிக்குள் உறங்குகிற குழிப்பிணமாய் புதையலும்
அழிந்துமண்ணுள் உறங்குகிற அதுபோல இருந்திடாமல்
கிழித்தோடும் அம்பேமேல் கிழி”. (3)

(நெருப்பலையார்.)

நிரையசையில் கலித்தளையில் சீர்கள் தொடங்கி வந்தவையாகும். இறுதியாக வெண்டாழிசையில், நேர் முன் நிரை, நேர் முன் நேர், நிரை முன் நிரை, காய் முன் நிரை, காய் முன் நேர் எனப் பல தளைகள் கலந்து வரும் பாடலின் எடுத்துக் காட்டுப் பாடல்களைக் காண்போம் கீழே:

வெண்டாழிசையில் பல தளைகள் பயின்று வந்த பாடலுக்கான எடுத்துக் காட்டுப் பாடல்கள் கீழே:

“பிரித்துப் பிரிவினையும் பேசி வைத்து,
நரியாய் நமையேய்த்து நசுக்கிடும் செயலை
உரித்துமே குணம்பார் உவந்து”. (1)

“நரிகளை ஆளவிட்டால் நாடும் பாலையே!
அரித்துமே கரையானாய் அழிக்கும் தீயரை
எரிப்போம் எங்குமின்பம் ஏற்று.” (2)

“விரிந்த பெருவானில் விரிகதிர் மாண்டால்
அரிய பகலொளியும் அதுமுகங் காட்டும்?
கரிக்கட்டை தான்பரிதி காண்.” (3)

(நெருப்பலையார்)

தாழிசையில் அமைந்த வெண்டாழிசைப் பற்றி இலக்கணக் குறிப்புகளுடன், பாடல் எப்படி அமையும் என்பதை எடுத்துக் காட்டுப் பாடல்களுடன் விளக்கமாகப் பயின்றோம். இனி, அடுத்த பாடத்தில் துறைச் சார்ந்த பாடல் வகைகளில் வெண்டுறைப் பற்றி அறிந்து பாடற் பயிற்சி எடுப்போம்.

யாப்பிலக்கணம் வளரும்.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 7

Chennai 2017

The room had all qualities to be referred to as a typical bachelor's room. Rajinikanth, in the Kala film poster, there showed that he is an ardent fan of that actor. When Enthiran was released, he dressed like the robot man Chitty and changed his hairstyle too. Then he joined the media and slowly came out of the fandom behaviors. After the completion of his probation period, his job was confirmed. He had challenged his parents that he will arrange his sister Renuka's marriage in a grand manner with his earnings. His parents were living in a village in the Thiruvannaamalai district and farming their 45 cents of land. That land was also mortgaged for Saravanan's education.

Saravanan had many books in his room, but they were not properly arranged. John Keiser's diary was also there. MurGosh handed over that diary to Saravanan and flew back to his place for two reasons. One is the trial of John Keiser is about to start. The second is a feeling of satisfaction from handing over that diary to someone.

He started reading that. It started like this.

Archaeological excavations till BC 50,000

This may be the title of an article.

Saravanan prepared a drink before reading the diary.

He assumed that John Keiser had copied a page from a historical text. He even felt that John was mad.

The diary started, 'The dryland looked like a hot desert. The sun was hot and burning. British officers and supervisors were sitting inside the tent and the perspiring workers were digging the soil.

It was in the middle of the 1850s.

In the northwest of India, one man is digging with a crowbar and collecting the sand from there; the next one is carrying the sand to another place and heaping it down the bank of a river. Hundreds of pairs are working in different places, on that site. Each pit is 50 feet breadth and 10 feet depth. They were digging to make rails from Lahore to Karachi.

In that place, there was no sound other than the noise of those tools.

Suddenly they heard a sound of a metal knocking at another metal. The worker took some pains to dig that metal piece without damaging it. It was a copper elephant.

The cheers of the workers made the supervisors come out of the tent. They were surprised to see an elephant made of copper. But they didn't want to show their emotions to the laborers, so they got that elephant and ordered them to go and do their work.

A worker who was digging at a distance cried in surprise. He had got a mud pot. Now it cannot be ignored as some passers-by had thrown the pot there. During the twenty years of digging in that place, they excavated a mud pot, a metallic elephant, and also a brick wall. Initially, people said a house was there, but then they found out it was not a house but a city, with rows of houses.



Yes, a huge city in an area of hundreds of square kilometers was hibernating. It was similar to a modern city like Chennai.

From 1853 to 1973, the excavations went on and they unearthed the remains of an ancient civilization. They found pot shreds and bricks. On knowing this, the archeologist Alexander Cunningham reached there.

He told this place Harappa was of historical importance. If the archeology excavation is done in a proper manner, then much more ancient historical evidence could be collected.

British men showed a keen interest in tracing history. In 1826, Charles Mason deduced a big city may be lying underneath that place.

Fifty years before, Charles Mason and Alexander Cunningham had explored. There was a habitation of ancient days.

1921, is a memorable year in the history of archeology. The British government installed a department for archaeology and allocated funds for the excavations. The researchers named it the Indus valley civilization, on the name of the river Indus. British called Sindhu as Indus. This civilization was found to be on the river banks of Sindhu. This exploration diverted the historical research at the global level. This changed the hypotheses of the fore-running research, as the early civilized race was not the Aryans but the Dravidians from the south.

Athichanalluur and Harappaa, which were 3000 kilometers away, had the same type of sample collections.

It is common to get linka, kali, bull, iron tools, golden jewels, and inscriptions in various places of South India because the Tamils lived here. This is not a big deal for the researchers. But when they unearthed the same in Harappa and Mohenjadaro they wondered. It was similar to the objects that they dug and tested in Tamilnadu. They raised their brows.

The excavations and explorations showed that the Dravidian civilization had spread far and wide with its boundaries of Uththarakant, Punjab, and Gujarat.

Not only in width in the depth also the excavated objects were found on three levels, one below the other. Research showed that these objects belonged to three ages, namely Metalithic Age, Neolithic Age, and Metallic Age.

The unearthed cities had houses built with burnt bricks and well-planned drainage systems. In the heart of the city, there was a common tank and small rooms around for bathing and changing dress. There were toys for the children to play with. The people used cotton clothes. They had worshipped Lingam. All these belonged 6,500 years ago. So Tamils from the south might have migrated to the north for 7000 years. Why did the Tamils move to the north? This a million-dollar question.

John Keiser had written the above story in American English for 12 pages in big letters. Saravanan now started to probe into the diary notes. John Keiser had tried to tell this world something from his mind. What's that? Saravanan wanted to discuss this diary with his female friends and not male ones. The girls may be interested in this. The men may find it boring. So he opened this matter to Swapna and Thamarai. Swapna showed some signs of interest and asked whether she could meet the person who wrote this diary, but Thamarai showed a deaf ear to him.

Saravanan asked Swapna, 'Oh You find it difficult to speak in Tamil. Then what do you know about Dravidam?



Yes Saravanan; but I have some interest

In what?

In ancient history.

How did you get interested in it?

My dad got an inscription

Yes, you told me earlier.

That looked different. Like a mega-size pendant. I wanted to know the contents inscribed in it. But it didn't happen

When you go to your home next time, you bring that. I will help you to read the content.

Oh, I can't carry it. It is heavy. It needs at least four men.

Why do you keep it in your house?

Thamarai came there. She is very possessive. She looked at him angrily, which meant Why do you to talk to her?

Saravanan said 'Ok bye Swapna; see you later' and left that place.

The anti-Hindi agitation documentary film, reduced to five minutes on the computer, scrolled in Dev's mind for more than twelve hours. Amidst his busy schedule, his mind was thinking about this documentary as well.

It is like multitasking, similar to listening to music and driving. His thoughts dragged him to another place.

பழமொழிகளில் அறிவியல் செய்திகள் 1–30

தரவு:இலக்குவனார் திருவள்ளுவன்

1. அத்திப்பூவை ஆர் அறிவார்?

2. ஆடிப்பட்டம் தேடி விதை.

3. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்து.

4. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.

5. இளைத்தவன் எள் விதைத்தான்; கொழுத்தவன் கொள் விதைத்தான்.

6. எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்ச இலை உதிராது.

7. எள்ளும் கரும்பும் இறுக்கினால்தான் பலன்தரும்.

8. எள் விதைத்த காட்டில் கொள் முளையாது.

9. எள்ளுக்கு ஏழு உழவு; கொள்ளுக்கு ஓர் உழவு.

10. எள்ளுள் எண்ணெய் போல

11. எரிகிற புண்ணில் புளி இட்டது போல.

12. எருமணமில்லாப் பயிர் நறுமணமில்லாப் பூ

13. ஐப்பசி நெல் விதைத்தால் அவலுக்கும் ஆகாது.

14. ஐப்பசி வெள்ளாமை அரை வெள்ளாமை.

15. ஒதிய மரம் தூணாகுமா?

16. ஒதிய மரம் பெருத்தாலும் உத்திரத்துக்கு ஆகாது.

17. கம்புக்குக் கால் உழவு.

18. கரும்பைக் கெடுக்கக் கரையான் பூச்சி.

19. கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.

20. களர் நிலத்தில் கரும்பு வை.

21. களர் முறிக்க வேப்பந்தழை.

22. களரை ஒழிக்கக் காணம் விதை.

23. களர் கெடப் பிரண்டை இடு.

24. களர் உழுது கடலை விதை.

25. களை பிடுங்காப் பயிர் கால் பயிர்.

26. காலத்தோடு களை எடு; நேரத்தோடு உரமிடு.

27. காட்டு வாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்.

28. கீரைக்குப் புழு வேரில்.

29. குறிஞ்சி அழிந்து நெருஞ்சி ஆயிற்று.

30. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்.

வாழ்த்து மடல்!

ஜனக்புரி சீனிவாசன்

தமிழணங்கு பொறுப்பாளர்
முனைவர். இராஜேஸ்வரி அம்மா
இமைப்போதும்
சோராத உள்ளம் கொண்டார்!
சுமையாக எதையுமே நினைக்கா உள்ளம்
அமைவாக படைத்திட்ட
நூல்கள்
நூற்றுக்கும் மேலாம்!

திறமான அறிஞர்தம்
நூல்கள் பலவும்
திருத்தமுற நம்மொழியில் பெயர்க்கும் அன்னை!
மறைவாக இருந்திட்டே
மின்னஞ்சல் மூலம்
நிறைவாக தமிழ் வளர்க்கும் ஆற்றல் பெற்றார்!

பற்பலரைப் பாங்குடனே உலகோர் அறிய நற்
பாலமதாய் இருந்திருக்கும்
அன்னை வாழி!

தற்பெருமை இல்லாத தகவுடையார்
சொற்களுமே இதயத்தைக் கொள்ளை கொள்ளும்
ஆற்றல் மிகு
பேச்சாற்றல் அன்னை வாழி!

அனுதினமும் அன்னையர்தம்
பதிப்புத் துறையும்
ஆற்றிவரும்
தொண்டினுக்கு
அளவே யில்லை!
சமூகநிலை பண்பாட்டு ஆய்வு நூல்கள்
சமுதாயம் அறிந்திடவே
தமிழ்ச் சங்க இலக்கியங்கள்
அமைவுடனே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்!
தமிழ்ப் புலவன் பாரதியும் சொன்னது போல்
பிறநாட்டு நற்புலவர்
கவிதை நூல்கள்
இருந்தமிழில் பெயர்த்திட்ட அன்னை வாழி!

மொழியாக்கம் செய்வதிலே வல்லவர்தாம்
மூதறிஞர் பெருமக்கள் நூல்கள் தம்மை
முறைப் படுத்திச்
சந்திரோதயப் பதிப்பின் மூலம்
நெறிகாட்டும் பதிப்புத்துறை வல்ல
ஆற்றல்மிகு முனைவர் திருமதி
இராஜேஸ்வரி அம்மா வாழி!வாழி!

நெஞ்சம் நிறைந்த நன்றிகள்:

நெருப்பலையார்.

(காலந் தாழ்ந்த பதிவு எனினும் தேவையான பதிவு)

நெருப்பலையார் என்னும் நெருப்பலைப் பாவலர். இராம இளங்கோவன் ஆகிய என்னுடைய நீண்ட நெடிய நட்புக்குரிய, தமிழணங்கு திங்களிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருக்கும் என்னுடைய அன்புக்கும் போற்றுதலுக்குமுரிய, என்னைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நெருப்பலையார் பரம்பரைப் பாவலர்கள் வெளியிட்ட நிலம் போற்றும் நெருப்பலையார், நெருப்பலையார் அம்மானை ஆகிய தொகுப்பு நூல்களில் என்னைப் பாடி மகிழ்வித்த ஐயா முனைவர். புதேரி தானப்பன் அவர்களால் அறிமுகமானவர் தான் முனைவர். செ. இராசேசுவரி அம்மையார் அவர்கள். ஆகவே, முதலில் என்னுடைய அன்பு உடன்பிறப்பு முனைவர். புதேரி தானப்பன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

முனைவர். புதேரி தானப்பன் அவர்கள், என்னுடைய அலைபேசி எண்ணை முனைவர். செ. இராசேசுவரி அம்மையார் அவர்களுக்கும், அம்மையாரின் அலைபேசி எண்ணை எனக்கும் வழங்கினார். ஆனால், நான் தொடர்பு கொள்வதற்கு முன்னரே அம்மையார் அவர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு உரையாடினார். அப்பொழுது தொடர்ந்து யாப்பிலக்கணக் கட்டுரைகளை வழங்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு திங்களும் எனக்குக் கட்டுரை அனுப்பும்படி புலனச் செய்தி அனுப்புவார். உடனே நானும் கட்டுரையை அனுப்பி விடுவேன். கட்டுரையை அனுப்பிவிட்டு ஒதுங்கிக் கொள்ள மாட்டேன். ஒரு புதிய படைப்பாளியைப் போல என்னுடைய கட்டுரையை வெளியிட்டு உதவுங்கள். என்று ஆசிரியர்க்கான வேண்டுகோள் மடலெழுதுவேன். இது நான் பின்பற்றி வரும் பண்பாடு. இதேபோல், அம்மையார் அவர்களும் எனக்கு நன்றியைச் சொல்லுவார்.

இதை ஒரு பண்பாடாகக் கருதி என்னைப் போலவே பின்பற்றி வருகிறார். அம்மையார் அவர்களை எண்ணி எனக்கொரு வியப்பு ஏற்படும். அது என்னவெனில், நூல்களை எழுதுவது, மொழிபெயர்ப்பு செய்வது, வலைதளத்தில் இயங்குவது, ஒன்றுக்கு இரண்டு மூன்று இதழ்களை நடத்துவது என்று எப்பொழுதும் என்னைப் போலவே இயங்குவதை எண்ணித்தான்.

யான் பலரிடமும் உரைப்பது என்னவென்றால், எனக்கு இருபத்தி நான்கு மணி என்பது பற்றாக் குறையே! எனக்கு ஒரு நாளைக்கு நாறப்பத்தெட்டு மணி வேண்டும் என்று

வலியுறுத்தும் வகையில் கேட்பேன். அதுபோல், அம்மையார் அவர்களுக்கும் நாற்பத்தி எட்டு மணி தானோ? என்று எண்ணிக் கொள்வேன். அந்தளவிற்கு உழைத்துக் கொண்டிருப்பவர் தான் முனைவர். செ. இராசேசுவரி அம்மையார் அவர்கள்.

நான் பேரிதழ்கள், சிற்றிதழ்கள், அயல்நாட்டு இதழ்கள் உட்பட ஏறத்தாழ இருநூறு இதழ்களுக்கு மேல் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வருபவன். எல்லா இதழ்களிலும் பாக்கள், கட்டுரைகள், சிறுகதைகள், துணுக்குகள் என்று எல்லா வகையான படைப்புகளும் இடம் பெறும். ஆனால், கட்டுரைக்காகவே அதுவும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் ஒரே இதழ் தமிழணங்கு மட்டுமே என்று நினைக்கிறேன்.

இந்தத் தமிழணங்கு இதழானது நல்ல வடிவமைப்பில், நல்ல தாளில், சந்திப் பிழை, ஒற்றுப் பிழை, சொற் பிழை இன்றி, புணர்ச்சி நெறியோடு, கலை நுணுக்கங்களோடு சீரான முறையில் சிறப்பான கட்டுரைகளோடு வெளிவந்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்தவன் நான். ஒவ்வொரு திங்களும் பதினைந்தாம் பக்கலுக்குள் கட்டுரையை அனுப்பும்படி வினவுவார். அனுப்பியதும் நன்றியைப் பகர்வார். மிகச் சிறந்த பண்பாடுடையவர் அம்மையார் அவர்கள்.

நான் நேரிலோ, எழுத்து வடிவிலோ, மேடையிலோ குறிப்பிடும் பொழுது ஒரு படைப்பாளி பண்புடையவராக இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துபவன். அந்த வகையில் முனைவர். செ. இராசேசுவரி அம்மையார் அவர்கள் முதலில் பண்பாடுடையவர் என்று வலியுறுத்துகிறேன். மனம் நெகிழ்கிறேன். பாராட்டுகிறேன். அம்மையார் அவர்களுடன் உற்றத் துணையாக நின்று இதழ்ப்பணியாற்றும் அனைத்து இதழாசிரியர் அனைவருக்கும் இவ்வேளையில் பாராட்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

நான் பெரும்பான்மையாக விருதோ, பரிசு என்னும் அன்பளிப்போ, பாராட்டோ எதுவாயினும் விழாவில் கலந்து கொள்ள மாட்டேன். எனக்கு அஞ்சல் வழியாக விழா நடத்துவோர் அனுப்பி வைப்பார்கள். ஆனால், நான் ஈரக் குலை நோயாளியாய் இருப்பினும் இந்த விருது பெறும் விழாவில் பங்கேற்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன். அதற்கான கரணியம் அம்மையார் முனைவர். செ. இராசேசுவரி அம்மையார் அவர்களின் அன்பு தான்.

விழாநாள் வரை தொடர்ந்து நினைவூட்டிக் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆகவே, அம்மையார் அவர்களையும் , தமிழணங்கு படைப்பாளிகளையும், விருது பெறும் அனைவரையும் நேரில் காணவும் உரையாடவும் வாய்த்த வாய்ப்பாக எண்ணி விழாவிற்கு வந்தேன். வந்த இடத்தில் பலரிடம் நேரிடையாக உரையாட இயன்றது. பலரும் முன்னரே என்னை அறிந்தவர்கள் என்பதால் நேரில் பார்த்ததில் அவர்கள் மகிழ்ந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

விழாவில், விருதாளர்களின் அறிமுகம் பார்த்து வியந்து போனேன். புதுமையாக, சிறப்பாக, அழகாக, அருமையாக இருந்தது. நான் பத்து இலக்கம் மக்கள் கூடிய மாநாட்டில் எல்லாம் கலந்து கொண்டவன். ஆனால், அங்கு கிடைக்காத மனநிறைவு இந்த விழாவில் கிடைத்தது. உணர்வற்றவர்கள் இலக்கம் மக்கள் இருப்பதைக் காட்டிலும் அறிவு சார்ந்த சான்றோர் பதின்மர் இருந்தாலே பத்து இலக்கத்திற்கு இணையானது. ஆகவே, நான்

விருது பெற்று வந்ததில் மனநிறைவுடன் பெங்களூரு வந்தடைந்தேன். இந்த விழாவில் நெருப்பலையார் பரம்பரைப் பாவலர்கள் பேராசிரியர். ச. சக்திவேல், திரு.இராசு ஆகியோர் வந்து கலந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சி; இது போல், மிக்க மகிழ்ச்சி; மிக்க நன்றி அம்மையே! வாழ்க வளத்துடன் வாழ்க நலத்துடன்.

இறுதியாக நான் பதிவு செய்வது என்னவெனில், விழாவில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய எழுத்தாளர் மேனகா நரேசு அம்மையார் அவர்கள் சிறப்பாக, அருமையாக, அழகாகச் செய்தார். இறுதியாக விருது பெற்றோர் சார்பில் ஏற்புரையாக வழங்கியோர் இப்பொழுது தான் அம்மையார் அவர்களால் எழுதத் தொடங்கி முதன் முறையாக விருதுகள் பெற்றதாகவும் குறிப்பிட்டார்கள். இதைக் கேட்டதும் பழைய நினைவு எனக்கு வந்தது. அதாவது, நானும் நூற்றுக்கணக்கான பாவலர்களுக்கு யாப்பிலக்கணம் கற்பித்து, மரபுப் பாக்கள் படைக்கப் பயிற்சிக் கொடுத்து, விருதுகள் பெற தகுதியுடையவர்களாக மாற்றி ஊக்கப்படுத்தும் வகையில் நூற்றுக்கணக்கான விருதுகளை வழங்கியபோது அவர்களும் இப்படித்தான் முதல் விருது பெற்றதாகக் கூறினர்.

ஆனால் , இன்று உலகம் முழுவதும் நடக்கும் போட்டிகளில் பங்கேற்றுத் தொடர்ந்து விருதுகள் பரிசுகள் பாராட்டுகள் பெற்று வருகிறார்கள். அதேபோல், புதியதாக விருது பெற்றவர்கள் மேலும் பல விருதுகள் பரிசுகள் பாராட்டுகள் பெற்றிட வாழ்த்துகிறேன். இவ்விலக்கணப் பணியும் தொடர வாழ்த்துகள்! நன்றி; வணக்கம்.

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருதுகள்

விருதாளர் பட்டியல்

1.முனைவர் தேமொழி - 25 கட்டுரை

இவர் திருச்சியை சேர்ந்தவர்.

ஹோலிகிராஸ் மாணவியாக விலங்கியல் பாடத்தில் பி.எஸ்.சி., எம்.எஸ்.சி., எம்.ஃபில். பட்டங்கள் பெற்று கடந்த 38 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்கிறார்.

அமெரிக்காவில் பொது நிர்வாகத்தில் *(Public Administration & Public Policy)*

முனைவர் பட்டம் பெற்று மாநில அரசு நிறுவனம் ஒன்றில் திட்ட ஆய்வாளராகப் பணிபுரிந்துள்ளார்.

தற்பொழுது ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் இதழாளராகவும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். அறிவியல் தமிழ் மன்றம் ஆலோசகர் குழு உறுப்பினராகவும், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் செயலாளராகப் பதவி வகிக்கின்றார்.

இதுவரை இவரது 22 நூல் படைப்புகள் வெளிவந்துள்ளன. கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறகு, கீற்று, திண்ணை, சொல்வனம், வல்லமை, திணை, தமிழணங்கு, சக்தி, உலகத்தமிழ் இதழ் போன்ற இணைய இதழ்களில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், தமிழ் இலக்கியம், அறிவியல், பெரியாரியம், பெண்ணியம் பொருண்மைகளில் எழுதி வருகின்றார். இவருக்கு இணையத் தமிழ்ச்சுடர் என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கட்டுரை, சிறந்த நூல் மதிப்புரை, சிறந்த சிறுகதை போன்ற பரிசுகளைத் தமது படைப்புகளுக்காகப் பெற்றவர். 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் இவரது இலக்கிய மீளாய்வு என்ற நூலுக்கு மொழிவளர்ச்சிக்கு உதவும் நூல் பிரிவில் சிறந்த நூல் பரிசை வழங்கிப் பெருமை படுத்தியது.

தமிழணங்கில் வெளியான இவரது கட்டுரைகள்

- 18 ஆம் நூற்றாண்டின் இந்திய வரலாற்றுப் பதிவுகள்
- செய்க பொருளை
- ஆய்ச்சியர் குரவை
- தீபாவளி என்ற சொல் எப்பொழுது தோன்றியது?
- இந்தியாவின் முதலை இனங்கள்
- பெண்ணடிமை நிலை குறித்து பெரியாரின் பார்வை
- அண்ணல் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும்
- சிறு நல் வாழ்க்கை
- நிழலற்ற நாள்தான் ஆண்டின் தொடக்கமா?
- அறிஞர் அண்ணா எழுதிய “செவ்வாழை” - சிறுகதைத் திறனாய்வு
- ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்
- என்றென்றும் பெரியார்!
- உணக்குதல்
- நெஞ்சில் இட்ட கோலங்களின் தொகுப்பு
- அடிமைப்படுத்தும் தளைகளை உடைத்தெறிய பெண்கள் உறுதி பூண வேண்டும்
- தொடராண்டு சுழற்சியாண்டுக் கணக்குகளின் நிறை குறைகள்

- இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்.
- சுழற்சி ஆண்டு தொடர் ஆண்டு கணக்குகளில் நிறை குறை.
- இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்.
- நச்சினிக்கிணியார் குறிப்பிடும் நிழலற்ற நாள்.
- தமிழ் இலக்கிய இலக்கண .நூல்களில் தமிழ் மாதங்கள்.
- ரிக் வேதம் கூறும் அகத்தியர்
- தென் திசையின் அகத்தியன்
- மனிதத்தின் பன்முகம்
- அக்ஷய திரிதியை

2 முனைவர் மு. முத்துவேலு

பிறந்த தேத 10-03-1961.

சென்னை இலயோலா கல்லூயில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம். இளங்கலையில் மூன்றாண்டுகளிலும் கல்லூரி முதல் மாணவர்; இளங்கலை. இளம் அறிவியல் பொதுத் தமிழில் கல்லூரி முதல் மாணவர். மங்களம் இலட்சுமி ரத்தினம் அம்மாள் பரிசு பெற்றவர்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம், சென்னைப் பல்கலைக்கழத்தில் இரண்டாம் இடம் என்னும் சிறப்பு நிலை.

சென்னைச் சட்டக்கல்லூரியில் சட்டத்தில் இளங்கலைப் பட்டம்.

இதழியல் ஆட்சித்தமிழ் ஆகியவற்றில் சான்றிதழ்கள் பெற்றவர்.

‘சட்டத்தமிழ்’ என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைகழத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் ஆய்வாளர்.

வகித்த பதவிகள்:

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சி மொழியத்தில் பகுதி நேர உறுப்பினர்: (2019 முதல் 2023 சூன் வரை)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவத்தின் முதல் பதிவாளர் (2011-ம் சூன் முதல் 2015 நவம்பர் வரை).

வேலூர், முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரி, சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரிகள் தமிழ்ப் பேராசிரியர் பணி. (2019 மே முதல் ஒய்வு]

மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையத்தின் மொழிபெயர்ப்பு அலுவலகப் பணி (1991 மே முதல் 1996 ஆக்ஸ்டு வரை)

தமிழ்நாடு மாநில அரசின் கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் முதுநிலைக் கூட்டுறவுத் தணிக்கையாளர் 1984 எப்ரல் முதல் 1991 ஏப்ரல் வரை -

படைத்தநூல்கள்: 15

- சட்டத் தமிழ்
- சங்கத் தமிழ் கூறும் சட்டநெறி
- இலக்கியங்களில் சட்ட நெறிகள்
- ஆட்சித் தமிழ் வரலாற்று நோக்கு
- வள்ளுவர் தொடுக்கும் வினாக்கள்
- மோதிரக் கனவு (சிறுகதைத்தொகுப்பு)
- செம்மொழிச் சிந்தனைகள்
- வளர்தமிழ்ச் சிந்தனைகள்
- குறுந்தொகை இன்பம்
- காற்றில் மலர்ந்தவை
- வாழ நினைத்தால் வாழலாம்
- மொழிபெயர்ப்புத் திறனாய்வு
- சட்டத்தமிழ்-ஆட்சிமொழியும் மொழிபெயர்ப்பும்
- மனதில் பதிந்த அறிவியல் நூல்கள்
- தமிழமுதம்

இவரது, மோதிரக் கனவு என்னும் சிறுகதைத் தொகுப்புச் சென்னை இலயோலா கல்லூரி, சென்னை ஸ்டெல்லாமேரி கல்லூரி, சென்னை பாரதி மகளிர் அரசு கலைக்கல்லூரி, மதுரை டௌவுக் பெருமாட்டி கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இளங்கலை, இளம் அறிவியல், இளம் வணிகவியல் பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பொதுத் தமிழில் பாடநூலாக இருந்தது.

இவரது வள்ளுவர் தொடுக்கும் வணக்கம் என்னும் நூல் நாகர்கோவில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் இலங்கிய மாணவர்களுக்கு உரைநடைப் பகுதிக்கான பாட நூலாக இருந்தது.

இவரது ஆட்சித்தமிழ் ஒரு வரலாற்று நோக்கு என்னும் நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திலும் தொலைதூரக் கல்வியில் இளங்கலைப் பயன்பாட்டுத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் பாட நூலாக இருந்து வருகிறது.

தமிழணங்கு ஆய்விதழில் இவரது கட்டுரைகள்

- சட்டக் கலைச் சொல்லாக்கம் மொழி வளர்ச்சியும் கலைச் சொல்லாக்கமும்
- செ.இராஜேஸ்வரியின் முத்தமிழ் விரும்பி கவிதை மொழிபெயர்ப்புகள்
- வள்ளுவர் வகுத்த சட்டமும் சட்டத் தொகுப்பும்
- முதன்மை நாயகர் வேதநாயகம்
- மொழிபெயர்ப்பு மரபுகள்
- அண்ணாவின் உரைநடை ஆளுமை
- அண்ணாவின் உரைநடையில் இலக்கியக் கூறுகள்
- உலகத் தாய் மொழி நாள்
- உலகத் தாய் மொழி நாள்
- முனைவர் செ. இராசேசுவரியின் நாலடியார் ஆங்கில மொழியெபர்ப்பு
- சான்றோன் யார்?
- ஏழை என்பவன் யார்?.
- சூழ்ச்சி செய்வது சரியா?.
- குப்பையும் குவியலும்.
- பொன்னை விரும்பும் பூமி இது.
- திருவள்ளுவர் கண்டிக்கும் பெரும் குற்றம்.
- திருவள்ளுவர் சினந்த சிலை இடங்கள்.
- அருமைக்கு வந்த பெருமை.
- கற்பூரம் நாறுமோ.
- செம்புலப் பயல் நீர் - செம்புலம் எது?.
- பதினெண் மேற் கணக்கு கீழ்க்கணக்கு நூல்கள் பெயர் காரணம்.
- கடலும் ஆறும் மண்ணும் புலவரும் உவமை சிறப்பு.
- பாரதியும் பைந்தமிழ் புலவர்களும்

3. முனைவர் மோ. மைக்கேல் ஃபாரடே - 18 கட்டுரை

பேராசிரியர் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே

எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட், பிஎச்.டி., (பட்டயம்) சைவ சித்தாந்தம் & இதழியல், மக்கள் தொடர்பு

மேனாள் சென்னைக் கிறித்தவக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் & கலைப்புல முதன்மையர்

இந்நாள் இயக்குநர், தென்னிந்தியத் திருச்சபை கிறித்தவத் தமிழ்ப்பேரவை

சிறந்த மரபுக் கவிஞர், சமய, இலக்கியச் சொற்பொழிவாளர், நூலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வறிஞர், மூத்த கல்வியாளர்

12க்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் 30க்கும் மேற்பட்ட ஆய்வியல் நிறைஞர்களையும் உருவாக்கிய ஆய்வு வழிகாட்டி

பல்வேறு வானொலி, தொலைக்காட்சி உரையாளர் நிகழ்ச்சி தயாரிப்பாளர்

கவிதை, திறனாய்வு, சமயப் பொழிவுகள், மொழிபெயர்ப்புகள், பழந்தமிழ் நூல் பதிப்புகள் எனப் பலவகைகளில் 30க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட எழுத்தாளர், பதிப்பாளர்

15 அயல்நாடுகளுக்குப் பார்முறை இலக்கிய, சமய, கல்வியியல் பொழிவுகளுக்காகப் பயணித்தவர்.

10க்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றவர், அணிமையில் தமிழக அரசு வழங்கிய தமிழ்ச்செம்மல் உட்பட.

தமிழணங்கு இதழில்

தமிழ்ச் சித்தரியலும் கிறிஸ்தியலும் என்ற 17க்கும் மேற்பட்ட கட்டுரைகள் கொண்ட தொகுப்பை படைத்துள்ளார்.

தமிழணங்கு ஆய்விதழில் வெளியான கட்டுரைகள்.

- தமிழ்ச் சித்தரியலும் கிறிஸ்தியலும் 12.
- அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள்
- ஜெர்மானிய தமிழர் சீகன் பால்கு
- உரைநடை தந்தை தத்துவ போதகர் ‘ இராபர்ட்- டீ- நோபிலி’
- சாதனை துறவி வீரமாமுனிவர்
- ஒப்பிலக்கணம் தந்த ஒப்பில்லா கால்டுவெல்
- அறிவுக்கொடை தந்த அருள் வள்ளல் ஜோகன் பிலிப் பெப்ரிஷியஸ்

4.முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

இவர் சிட்னியைச் சேர்ந்தவர் சிறந்த வழக்கறிஞர், சமூகத் தலைவர் , பேச்சாளர் மற்றும் விருது நூல்கள் பல படைத்தவர் .

முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன்

தமிழக அரசிடமிருந்து ‘சிறந்த அயல்நாட்டுத் தமிழறிஞர்’ விருது பெற்றவர்.

தமிழ் இலக்கியம், சட்டம், ஊடகம் ,தலைமைத்துவம், மேலாண்மை , பெண்கள் மேம்பாடு மற்றும் கவிதை ஆகியவற்றை உள்ளடக்கிய 65 க்கும் மேற்பட்ட புத்தகங்களையும்,

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஊடகம் மற்றும் தமிழில் இரட்டை முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடதக்கது.

, இவர் முதுகலை சட்டம் மற்றும் முது கலை நிர்வாகம் தகுதிகளும் பெற்று இந்தியா, மலேசியா மற்றும்

இவர் இந்திய மலெசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வியாளராகவும் ..

தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றி வரும் இவர் ஆஸ்திரேலிய தமிழ் வளர்ச்சி மன்றத்தின் நிறுவனர். மற்றும் பல்வேறு சமுக நிறுவனங்களில் இயக்குநராக பணியாற்றுகிறார்.

இவரது முயற்சியால் சிட்னியில் பொதுப் பூங்காவில் கருங்கல் திருவள்ளுவர் சிலையை நிறுவியது சிறப்பாகும்.

ஆஸ்திரேலிய சட்டம் மற்றும் சமூகத்திற்கான உயரிய ஐந்து மதிப்புமிக்க விருதுகளையும் ஆஸ்திரேலிய பிரதமரின் பதக்கம் உள்ளிட்டவற்றையும் இவர் பெற்றுள்ளார்

இவரது படைப்புகளான 'ஊடக சட்டங்கள், இணைய சட்டங்கள் மற்றும் பெண்கள் மற்றும் ஊடகம் குறித்த மூன்று நூல்களுக்கு தமிழக அரசு மற்றும் எஸ் ஆர் எம் தமிழ்ப்பேராயம் வழங்கிய சிறந்த நூல் விருதுகளை பெற்ற பெருமை பெற்றவர்.

புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான சிறார் இலக்கியத்திற்கான அவரது பங்களிப்புகளுக்கு அப்பால், அவரது 'திருக்குறள்' மற்றும் 'கம்ப ராமாயணம்' ஆங்கில மொழிபெயர்ப்புகள் பாராட்டப்பட்டுள்ளன.

- திருக்குறள் காட்டும் நல்லாட்சி
- கம்பனில் காதல்
- கம்பன் காட்டும் தசரதன் கைகேயி காதல்
- கம்பன் காட்டும் காதல் (ராமன் சீதையின் காதல்)
- இராவணன், சூர்ப்பணகை மற்றும் மண்டோதரி காதல்
- புலம்பெயர் மண்ணில் தாய் மொழிப் பராமரிப்பு
- திருக்குறளும் மொழிபெயர்ப்பும்
- *The ramayana in indonesia , tradition adoption anf performance.*

5. முனைவர் சிவ இளங்கோ - 18 கட்டுரை

